விலை: 30.00

பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-6763)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 15 ஞாயிற்றுக்கிழமை (30.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 193


மரண தண்டனை நிறைவேற்றுவது தொடர்பாக

## ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு நோர்வே அரசாங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் மரண தண்டனை நிறைவேற்றுவதற்கான திட்டத்திற்கு நோர்வே அரசாங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய நால்வருக்கு மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கு தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரு நாட்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

இதற்கு பல்வேறு நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

▶23

## மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் பெயர் விபரம் வெளியீடு

### முதலிடத்தில் பெண், 8 பேர் தமிழர்கள்

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

இவர்களில் 8 முஸ்லிம்கள், 08 தமிழர்கள், 04 சிங்களவர்கள் உள்ளடங்குகின்றனர். இவர்களில் முதற் வரிசையில் உள்ள சிங்களவர்கள் இருவர், தமிழர் மற்றும் முஸ்லிம் ஒருவர் ஆகியோருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படவுள்ளது. இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர் ஒரு பெண் ஆவார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள 20

▶23

## ரிஷாத், ஹிஸ்புல்லாஹ், அசாத் சாலிக்கு

# பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்பில்லை

### புலனாய்வு விசாரணையில் தெரிவிப்பு

(கொழும்பு) முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனுக்கும் ஆளுநர்களான அசாத் சாலி, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோருக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கும் இடையில் தொடர்பில்லை என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாக பதில் பொலிஸ்மா அதிபர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளார்.

▶23

## அரசுக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு மகிந்த அணியினர் எதிர்ப்பு - ஜே.வி.பி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க அரசாங்கத்தைக் கடுமையாக எதிர்த்து வரும் கூட்டு எதிரணி மறுப்புத் தெரிவித்துள்ளமை சிந்திக்க வேண்டிய ஒரு பிரச்சினையாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அநுராதபுர பிரதேசத்தில் இடம்பெற்ற

▶23

## சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்க ஜனாதிபதி முயற்சிக்கின்றார்

### சட்டத்தரணி லால் விஜேநாயக்க

(கொழும்பு)

சர்வாதிகார ஆட்சியை மீண்டும் ஸ்தாபிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சிப்பதாக புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்கள் கருத்தைப் பெறும் குழுவின் தலைவர், சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறுப்பதாக உறுதிமொழியளித்துவிட்டு ஆட்சிக்கு வந்த ஜனாதி

▶23

## இலங்கைக்கு புலனாய்வு தகவலை வழங்க

### வலய நாடுகள் இணக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பாக புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்ள சில வலய நாடுகள் இணக்கம் தெரிவித்

▶23

## தென்பகுதிக்கு கடத்தலுக்கு தயாராக இருந்த 200 கிலோ கஞ்சா துன்னாலையில் மீட்பு



(கரணவாய்)

வடமராட்சியில் இருந்து தென் பகுதிக்கு கடத்த தயாராக இருந்த 195 கிலோக்கிராம் கேரள கஞ்சா விஷேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

துன்னாலை கிழக்கு, தில்லையம்பலம் காட்டுப்பகுதி ஊடாக கேரள கஞ்சா கடத்தப்படவுள்ளதாக அரச புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றது.

இதனையடுத்து நேற்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தில்லையம்பலம் காட்டுப் பகுதியினை அரச புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் விஷேட அதிரடிப்

▶23

## தமிழரக் கட்சி தலைவராக

### மீண்டும் மாவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநா

▶23


மகாராஜா பொதிகள் சேவை

லண்டன் 600/-

பிரான்ஸ் 800/-

ஜேர்மனி 650/-





11 kg க்கு மேல் 1kg க்கான கட்டணம்

சகல உலர் உணவுகள், பாமா வகைகள், பழவகைகள் மற்றும் எண்ணெய் வகை அனைத்தும் அனுப்பி கொடுக்கப்படும்

இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

021 4925024/021 2224338

Parcel.lk DHL ups


### வடக்கில் நிலவும் காணிப் பிரச்சினைக்கு

## அரசு உரிய நடவடிக்கை எடுக்க தவறின் போராட்டம் வெடிக்கும்

### தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் நிலவும் காணிப்பிரச்சினைக்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை முன்னெடுக்கத் தவறினால், தேசிய ரீதியிலான பாரிய போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய

▶23

## யாழ்.போதனா தாதியர் விடுதியின் மீது மலக் கழிவு வீசல்

### விமானத்திலிருந்து வீசப்பட்டுள்ளதாக அரச அதிபரிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதியர் விடுதியின் மீது மலக்கழிவு வீசப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விமானம் மூலம் ஆகாயத்

▶23


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்க தயாசிறிக்கு மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

தாக்குதல்கள் குறித்து ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் முன்னிலையாகுமாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் தயாசிறி ஜயசேகரவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழு, எதிர்வரும் 10ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடவுள்ளது. இந்நிலையில் அன்றைய அமர்வின்போது சாட்சியம் வழங்குவதற்காகவே தயாசிறி ஜயசேகரவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்றைய தினமே அழைக்கப்பட்டிருந்தபோதும் அவர் தெரிவுக்குழுவில் பிரசன்னமாகி இருக்கவில்லை. இதன் காரணமாகவே அவர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

தயாசிறி ஜயசேகர கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தாஜ் சமுத்திராவில் தற்கொலை தாக்குதலை நடத்தியவர் அங்கு தங்கியிருந்த உயர்செல்வாக்குள்ள நபர் ஒருவரை கருத்திற் கொண்டு தாக்குதலை நடத்தவில்லை யென குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக சாட்சியங்களை பெறுவதற்காகவே அவரை தெரிவுக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பெயர்மாற்ற அறிவித்தல்


சேர்.பொன்.இராமநாதன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பே.றெட்நேஸ்வரன் ஆகிய எனது பெயரை இன்று முதல் பே.இரத்தினேஸ்வரன் என மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன். உண்மையுள்ள : பே.இரத்தினேஸ்வரன் (9425)

மலேசிய வேலைவாய்ப்பு
மெஷின் டெக்னீஷியன் 80 பேர்
எலெக்ட்ரீஷியன் 80 பேர்
1130 - 2200RM ரூ.47,460 முதல் ரூ.92,400 வரை
(C-6825)
3 வருட பணி ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, விமானச்சீட்டு - 8 மணி + OT (மாதம் 78 மணி) / வாரம் 6 நாள் வேலை (வயதெல்லை : 18 – 40)
ஜூலை 3 கொழும்பு வரும் கம்பனி உரிமையாளரிடம் (CEO) உடனடி அனுமதி கடிதம் பெற்று ஜூலை மாதமே பயண ஏற்பாடு
0777 324 004, 077 00 38 215, 021 2219 221
Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
221-1/1. மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
email: jaffna@emeraldisle.lk
www.emeraldisle.lk

உடல் எடை குறைய வேண்டுமா?
- எடை கூடுகிறதா?
- வயிறு மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
பால் மா குளிசை
15 நாட்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.
- கருமை நிறம் நீங்க வேண்டுமா?
கருமை நிறம், கரும் புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக் கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.
பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
077 210 6155
(9424)

# மரண அறிவித்தல்

## இளையவி மகாலிங்கம் (துரை)



நல்லூர் ஆசீர்வாதப்பர் வீதியை பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி மகாலிங்கம் (துரை) அவர்கள் 27.06.2019 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற இளையவி - நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், நற்குணம் - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், லலிதாவின் பாசமிகு கணவரும், நாகேஸ்வரன் (பாஸ்கரன் - அவுஸ்திரேலியா), விஜித்பிரதீஸ் (விஜித் - கட்டார்), கமலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராஜா, காலஞ்சென்றவர்களான சின்னராசா, சின்னக்கிளி, மற்றும் குணமணி, செல்வராணி, புவனேஸ்வரி, சற்குணராஜா (ராசன் - ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நந்தினி (இந்தியா), செல்வமலர், சுவர்ணா (ஊரணி வைத்தியசாலை - அற்றன்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோவேந்தன் (இந்தியா), லஜினா, சஸ்ரவி, பவிசன், சரோன், சப்தகி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பத்மினி மற்றும் தெய்வானை, குணசேகரம், ஜெகநாதன் (இந்தியா), லீலா, புஸ்பராணி, ரகுநாதன், கனகேஸ்வரி, சந்திரா, ரட்ணேஸ்வரி (ஜேர்மனி), சிவனேஸ்வரி (ஜேர்மனி), பூலோகம், காலஞ்சென்ற மனோகரன் மற்றும் குணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-8821)

கரவெட்டி மேற்கு, கரவெட்டி. தகவல் : குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 13.01.1947 உதிர்வு 03.06.2019



பருத்தித்துறை 1ஆம் குறுக்குத்தெருவை பிறப்பிடமாககொண்ட

அமரர்

## நடராஜலிங்கம் கமலாதேவி

(ஓய்வுபெற்ற இ.மி.ச. உத்தியோகத்தரும் "இந்திரதீபம்" உரிமையாளருமான நடராஜலிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியார்)

கடந்த 03.06.2019 அன்று சிவபதமடைந்த எமது பாசமிகு தாயார் நடராஜலிங்கம் கமலாதேவி அவர்களினது அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. சபிண்டீகரண நிகழ்வு இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரது "கமலா இல்லத்தில்" நடைபெறவுள்ளது. அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

" அம்மா என்ற சொல்லின் சூட்சுமம் நீ
அன்பால் எம்மை ஆட்சி செய்தவள் நீ
நாங்கள் எங்கே எப்படி வாழ்ந்தாலும்
நீயே எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கு...

"கமலா இல்லம்"
பாடசாலைவீதி,
கற்கோவளம்,
பருத்தித்துறை.

இங்ஙனம் :
குடும்பத்தினர்
077 556 3228

(9380)

# கோத்தாவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு புலம்பெயர் தமிழர்களின் திட்டமிட்ட சதிச்செயல்

## • ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத்தடை போடாது
## • சஜித் ஜனாதிபதியாவதை மக்கள் விரும்பவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட்டால் அதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் அவர் ஜனாதிபதியாவதை மக்கள் விரும்பவில்லை. காரணம் நாட்டின் ஜனாதிபதியாக இருப்பதற்கு சில முக்கிய தகுதிகள் இருக்க வேண்டும் எனவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்தமை புலம் பெயர் தமிழர்களின் திட்டமிட்ட சதிச் செயல் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, இவ்விடயம் கோத்தபாய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தவிதத்திலும் தடையாக இருக்காது என்றும் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுனவில் இருந்தே வேட்பாளர் நியமிக்கப்படுவார். வேட்பாளர் யார் என்பது தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடிய பின்னர் தீர்மானம் எடுக்கப்படும். சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது குறித்தும் இன்னும் கலந்துரையாடல்களே இடம்பெற்று வருகின்றன.

இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே இந்த விடயம் குறித்தும் ஆராய்ந்த பின்னரே வேட்பாளர் நியமிக்கப்படுவார்.


மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட்டால் அதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. அவர் வேட்பாளராகக் களமிறங்குவதை ஐ.தே.கவினர் அனைவரும் விரும்பலாம். ஆனால் அவர் ஜனாதிபதியாவதை மக்கள் விரும்பவில்லை. காரணம் நாட்டின் ஜனாதிபதியாக இருப்பதற்கு சில முக்கிய தகுதிகள் இருக்க வேண்டும்.

அமெரிக்காவில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தமை புலம்பெயர் தமிழர்களின் திட்டமிட்ட சதியாகும். இது எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவதற்கு தடையாக அமையாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)



# வர்த்தகப்போருக்கு சீனா அஞ்சவில்லை!

### கொழும்பில் சீனத்தூதுவர் சீற்றம்



(கொழும்பு)

வர்த்தகப் போரொன்றை சீனா விரும்பவில்லை. ஆனால் தேவையேற்படுமானால் அத்தகையதொரு போருக்கு சீனா அஞ்சவில்லை. அதை நடத்தத் தயாராகவே இருக்கிறது என்று கொழும்பிலுள்ள சீனத்தூதுவர் செங் சூவேயுவான் எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பு சீனத்தூதரகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் சீனத்தூதுவர், அமெரிக்காவிலுள்ள குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளால் முன்னெடுக்கப்பட்ட வர்த்தகப் போரில் சீனா அதன் சட்டபூர்வமானதும் நியாயபூர்வமானதுமான உரிமைகளையும் நலன்களையும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

ஜனாதிபதி ஜி ஜின்பிங் உறுதியாகக் கூறியிருப்பதைப் போன்று "சீனாவும், அமெரிக்காவும் வர்த்தகத்தையும் பொருளாதாரப் பிரச்சினைகளையும் சமத்துவமானதொரு அடிப்படையிலேயே கையாள வேண்டும் என்பதுடன் பரஸ்பரம் நியாயபூர்வமான அக்கறைகளின் மீது கூடுதல் கவனத்தைச் செலுத்தவும் வேண்டும்"

இருதரப்பும் வர்த்தகம் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளிலுள்ள வேறுபாடுகளை இல்லாமற்செய்ய முடியும் என்று சீனா, உயர்ந்த பொறுப்புணர்வுடனும் அக்கறையுடனும் நம்புகிறது. ஆனால் அடிப்படை நலன்களை சீனா வர்த்தகம் செய்யும் என்றோ அல்லது அதன் சுயாதீனம், பாதுகாப்பு, அபிவிருத்திக்கு ஊறுவிளைவிக்கப்படுவதை அனுமதிக்கும் என்றோ வெளிநாடுகள் மாயையை வளர்த்துக்கொள்ளக் கூடாது என்றும் சீனத் தூதுவர் தெரிவித்தார். (இ)


# மீனவரின் வலையில் சிக்கிய இரண்டாயிரம் கிலோ மீன்



நாச்சிக்குடா கடல் பகுதியில் நேற்று மீன் பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் சுமார் இரண்டாயிரம் கிலோ அளவிலான அரியவகை மீன் ஒன்று அகப்பட்டுள்ளது.

நாச்சிக்குடா கடற்கரைக்கு குறித்த மீனை பார்வையிட பலர் வந்து சென்றனர். (9-3-2)

# அரையிறுதியில் ஆர்ஜென்ரீனா



கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு ஆர்ஜென்ரீனா அணி முன்னேறியது. காலிறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெனிசுலாவை வீழ்த்தியது.

பிரேசிலில், கோபா அமெரிக்கா கால் பந்து தொடரின் 46வது சீசன் நடக்கிறது. இதன் காலிறுதியில் ஆர்ஜென்ரீனா, வெனிசுலா அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய ஆர்ஜென்ரீனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது. ஆர்ஜென்ரீனா அணி க்கு மார்டினஸ் (10வது நிமிடம்), லோ செல்சோ (74வது) தலா ஒரு கோலடித்து கைகொடுத்தனர்.

வரும் ஜூலை 2ல் நடக்கவுள்ள அரையிறுதியில் ஆர்ஜென்ரீனா, பிரேசில் அணிகள் மோதுகின்றன.

**சிலி அபாரம்**

மற்றொரு காலிறுதியில் கொலம்பியா, சிலி அணிகள் மோதின. விறுவிறுப்பான இப்போட்டி ஆட்டநேர முடிவில் கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது. பின், கூடுதல் நேரத்திலும் இரு அணியினரால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.ண

இதனையடுத்து போட்டியின் முடிவு 'பெனால்டி ஷூட் அவுட்' முறைக்கு சென்றது. இதில் இரு அணிகளுக்கும் தலா 5 வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

அபாரமாக ஆடிய சிலி அணி 5-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

## துயர் பகிர்கின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டக்கற்கைநெறியைப் பயிலுகின்ற எமது சக மாணவன் **செல்லத்தம்பி** தேவதாஸ் அவர்களது அன்புத் தந்தையார்

அமரர்

**கந்தப்போடி செல்லத்தம்பி**



பிறப்பு:06.12.1939 இறப்பு:28.06.2019

அவர்கள் கடந்த 28.06.2019 ஆம் திகதி இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**துயரில் பங்குகொள்ளும்**
**யாழ்.பல்கலைக்கழகம்**
**சைவ சித்தாந்த முதுகலைமாணி**
**(6ஆம் அணி மாணவர்கள்)**

(9420)

## மரண அறிவித்தல்



## திருமதி சந்திரமணி சோமசுந்தரம்

பருத்தித்துறை ஐயனார் கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரமணி சோமசுந்தரம் அவர்கள் நேற்று (29.06.2019) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-ராசம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற நாகநாதர் - கனகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற நாகநாதர் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் பிறேமச்சந்திரன் (வல்வெட்டித்துறை), சந்திரபாமா (தொழிற்துறை திணைக்களம் - வட மாகாணம்), ரவிச்சந்திரன் (கனடா), நாகச்சந்திரன் (மாநகரசபை-யாழ்ப்பாணம்), யோகச்சந்திரன் (கொழும்பு), காலஞ்சென்ற நல்லைச்சந்திரன் சோமச்சந்திரன் (ஆசிரியர்--யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி) ஆகியோரின் அன்புத்தாயாரும் அமுதினி, தர்மராஜா (ஓய்வுபெற்ற முகாமையாளர் - இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி), சுகந்தினி (கனடா), சாரதாதேவி (நல்லூர் பிரதேச சபை), இதயமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் அனந்தசயனன், அபிராமி, அபராஜிதன், அபர்ணா, யோபிதா, யோதிகா, ஜெயந்தா, ரோஜா, பிரணவன், விபூஷனன், சங்கீர்த்தனா, கரணியா, வர்ஷா, வருண், சுதர்ஷன், திவ்விகா ஆகியோரின் பேர்த்தியும் பிரசாங்கி, ஆரியன், யஸ்விகா, அக்ஷயன், ஆருஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கலட்டி,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்
077 520 6371 - மகன்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



## அமரர் அம்பலம் விஜயநாதன்

(B.A, Dip.in.Edu.SLPS I, ஓய்வுபெற்ற அதிபர்,
பொருளாளர், அறநெறிப் பாடசாலை அதிபர் -
வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலயம்)

அல்லும் பகலும் நமை காத்த ஒளி விளக்கே
சொல்லும் செயலும் சாவிகிதமான விழுதியலின் கிழக்கே
கல்வியே கண்ணென கருத்தோடு வாழ்ந்த மூச்சே
காலத்து வரலாறு யாவையுமே சேமித்த ஒளி வீச்சே
ஞாலத்தில் எமை நிமிரச் செய்த கலைப் பேச்சே
நாற்திசையும் உமை இன்று தேடத் தலைப்பட்ட ஆச்சே
சொல்லிச் சொல்லி எல்லாமே ஆற்றிய எங்கள் சந்தோஷ சாம்ராச்சமே
சொல்லாது போனீரோ தெய்வமென ஆனீரோ
விண்ணிருந்து நம்மை காத்திடு ஐயனே...
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*


கடந்த 31.05.2019 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று எதிர்வரும் 06.07.2019 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் ஆவணக் காண்பியம் மற்றும் நினைவு மலர் வெளியீட்டு நிகழ்வும் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற இருப்பதனால் இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்**

சாரதா, அல்வாய்.
077 396 5583

நீங்கா நினைவுகளுடன் மனைவி :- வி.சாரதாவதி
பிள்ளைகள்: வி.செந்தூரன், வி.குமரன், வி.துவாரகன்

# "தனிநபர்" தாக்குதல் அச்சத்தில் இலங்கை!



## புலனாய்வுத்துறை தீவிர கண்காணிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இஸ்லாமிய அடிப்படைவாத குழுவினால் இலங்கையில் சாதாரண சிவில் மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தொடர் தற்கொலை தாக்குதல்களின் பின்னர் தேசிய பாதுகாப்பு குறித்து பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டன.

குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடியை மையப்படுத்திய குழு சர்வதேச பயங்கரவாதிகளான ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புப்பட்டு பயிற்சி பெற்றிருந்தமையால் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் தற்கொலை தாக்குதல்களோ குண்டு வெடிப்புகளோ மீள் நிகழாமையை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையின் புலனாய்வு துறைகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டன.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தொடர் தற்கொலை தாக்குதலின் பின்னர் முன்னெடுக்கப்பட்டு வரும் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எவ்விதமான தளர்வுத் தன்மையும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

முப்படைகள் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட தேசிய - சர்வதேச புலனாய்வு துறைகளின் ஒத்துழைப்புகளுடன் சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

எவ்வாறாயினும் திட்டமிட்டு மீண்டும் தொடர்க் குண்டுத் தாக்குதல்களை இலங்கையில் மேற்கொள்ள இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்களுக்கு சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாக காணப்படுகின்ற போதிலும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்குதல் உத்திகளில் ஒன்றான "தனிநபர்" தாக்குதலுக்கு வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை என்று இராணுவத் தளபதி எச்சரித்தார்.

இவ்வகையான தாக்குதல்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படும் உலக நாடுகளில் ஏற்கனவே இடம்பெற்றன.

"தனிநபர்" தாக்குதல் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகளின் உத்தியாகும். "தனிநபர்" பயங்கரவாதம் குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

பயங்கரவாதம் தொடர்பான அமெரிக்க ஆய்வு நிலையம் இவ்வகையான தாக்குதல் முறைமை குறித்து ஆய்வு செய்தது. ஏதேனும் ஒரு பயங்கரவாத அமைப்பை சார்ந்தவர்கள் குழுவாகச் சென்று தாக்குதல்கள் நடத்துவதிலிருந்து "தனிநபர்" தாக்குதல் முறைமை வித்தியாசமானது.

அதாவது காத்திருத்தல், நீண்ட தூரம் இலக்கை நோக்கி பயணித்தல் மற்றும் எதிர்பாராத நேரத்தில் தனியொருவராக தாக்குதல் நடத்துதல் என்பன தனிநபர் தாக்குதல் உத்திகளின் பண்புகளாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# 3 பிள்ளைகளின் தாய் குத்திக்கொலை சரணடைந்த கணவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்த கணவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிமன்ற நீதவான் ஏ.எஸ். பி.போல் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் குருநகர் சென்றோக் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் வசித்த 3 பிள்ளைகளின் தாயான பெலினியா (வயது-47) என்ற குடும்பப் பெண்ணை ஜோர்ச் எமிலியாம் பிள்ளை என்ற அவரது கணவர் கத்தியால் குத்திக் கொலை செய்தார்.

இதன் பின் தலைமறைவான கணவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

சரணடைந்த கொலைச் சந்தேக நபரை அன்றைய தினமே யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது நீதவான் குறித்த உத்தரவை வழங்கினார். (5-10)

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியம் காப்போம்.

நம்பிக்கை இழக்க வேண்டாம்.

உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)

077 900 8776 (தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)

# தாலி மாயம் பொலிஸில் முறைப்பாடு

(திருக்கோவில்)

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த தாலி திருட்டுப் போயுள்ளதாகத் திருக்கோவில் பொலிஸில் குறித்த பெண் நேற்று முறைப்பாடு செய்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அனைவரும் வீட்டில் உறங்கிக் கொண்டு இருந்த வேளை திருடன் வீட்டின் ஜன்னலைத் திறந்து அதனூடாக வீட்டுக்குள் நுழைந்து பெண்ணின் தாலியைத் திருடி இருக்கலாம் என வீட்டார் சந்தேகம் வெளியிட்டனர். (இ)

Winspire International Education

மாணவர்களுக்கான இலவச வீசா சேவை

அவுஸ்திரேலியா நியூசிலாந்து அல்லது கனடா ஆகிய நாடுகளில் செப்டெம்பர் 2019 முதல் குடியேறுவதற்கான

பதிவுகள் மற்றும் நேர்முகத் தேர்வு 2019 ஜூன் 30 மற்றும் ஜூலை 1 மு.ப 9.00 தொடக்கம் மாலை 5 மணிவரை

Jetwing Jaffna (ஜெட்விங் யாழ்ப்பாணம்) (9412)

விசாரணைகளுக்கு மற்றும் முன்பதிவுகளுக்கு அழையுங்கள்: 077 175 0505

வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நெடுங்கேணி

பதவி வெற்றிடம்

வவுனியா வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில், கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு விண்ணப்பத்தினை "தலைவர் வவுனியா வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 12.07.2019 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படுவதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வயதெல்லை 18-40 வயது வரை கூட்டுறவு சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாதென்பதுடன் கூட்டுறவு நிறுவனத்தில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்க விரும்பின் நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

01. எரிபொருள் நிரப்புனர் - 313/16
சம்பள அளவுத்திட்டம்- (15135-120X10-135X10-17685வும் இதர படிகளும்)
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
(அ) கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம்.
(ஆ) 08 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ்

02.அலுவலகச் சேவகர்:- 317/17
சம்பள அளவுத்திட்டம்:- (14725-115X10-130X10-17175வும் இதர படிகளும்)
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
(அ) 08 ஆம் வகுப்பு கல்விச்சான்றிதழ்

வ.வ.ப.நோ.கூ.சங்கம், நெடுங்கேணி. (C-6820) ஒப்பம் கு.சசிகரன் (தலைவர்)

## இராசி பலன்

**மீனம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைத்து மகிழ்வீர்கள், தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள்.

**மேடம்:** சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை கட்டும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, கனவு பலிதமுண்டு.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், காரிய அலைச்சல்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்:** நண்பர்களின் மூலம் நம்பிக்கைகள் கைகூடலாம், சுபகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

கிரகநிலை: சந் | சூரி.ராகு புத.சுக் | செவ் | சனி.கேது | குரு

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
அனுசம்

30.06.2019
ஆனி 15, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 4.09 மணிவரை
கார்த்திகை முற்பகல் 9.10 மணிவரை
சுபநேரம் 8.56-10.26 மணிவரை
இராகுகாலம் 4.26-5.56 மணிவரை
பிரதோச விரதம்
வளவன்

**கடகம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்:** உங்களின் திறமைகள் வெளிவரும் நாள், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன நன்மையுண்டு.

**துலாம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எதிபாராத வகையில் சில மனிதர்களின் செயற்பாட்டால் உற்சாகம் குறையலாம், தேக நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கன்னி:** பயணாளிகளால் பலனுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், ரோக பயமுண்டு.

# உப்பளப் பயனாளிகள் தெரிவை தென்மராட்சி ரீதியாக மேற்கொள்க

## நகரசபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையால் முன்னெடுக்கப்பட்டு வரும் உப்பளப் பயனாளிகள் தெரிவு தென்மராட்சி ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.சிவராசா வலியுறுத்தினார்.

சாவகச்சேரி பிரதேச சபையினர் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 1500பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு தென்மராட்சி - அறுகுவெளிப் பகுதியில் தனா அரை ஏக்கர் அரச காணியை வழங்கி பின்னர் அந்தக் காணியை உப்பு உற்பத்தி நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கிப் பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சி எடுத்து வருகின்றது.

ஆனால் இந்தப் பயனாளிகள் தெரிவு சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் மாத்திரமே இடம் பெற்றது. இந்தத் திட்டத்திற்குள் சாவகச்சேரி நகரசபையையும் உள்ளடக்கி தென்மராட்சி ரீதியாக பயனாளிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களுக்கும் பயனாளிகளைத் தெரிவு செய்ய சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டு மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# பாதுகாப்பற்ற மின்னிணைப்பை சீர் செய்யுமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை மரக்கறிக்கடைப் பகுதிகளில் மின்சார இணைப்பு பாதுகாப்பானதாக இல்லை. உயிராபத்துக்கள் ஏற்பட முன்னர் மின்சார இணைப்புக்கள் சீர் செய்யப்பட வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ப.நந்தகோபால் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்தையின் மரக்கறிக்கடைப் பகுதியில் அதிகளவான மின்சார வயர்கள் பாதுகாப்பற்ற முறையில் பொருத்தப்பட்டுள்ளன. இக் கடைத் தொகுதி இரும்பினால் ஆன கொட்டகை ஆகையால் இதனால் பாரிய உயிராபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே நகரசபையினர் விரைந்து செயற்பட்டு பாதுகாப்பான முறையில் மின்சார இணைப்புக்களை வழங்க வேண்டும்.

அத்துடன் சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்தினுள் காணப்படுகின்ற பாதைத் தடைகளை அகற்றி பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் அசௌகரியங்களைப் போக்க முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (5-30)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் யுத்தத்தால் அங்கங்களை இழந்தவர்கள் மற்றும் தாய், தந்தையை இழந்த பிள்ளைகளின் விபரங்கள் இன்று (30.06.2019) மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக அலுவலகத்தில் உலகத்தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் பதிவுசெய்யப்படும்.

எனவே இன்று காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (இ-9)




# பூரணப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் திறப்பு



அச்சுவேலி மேற்கு செல்வநாயகபுரம் கிராமத்தின் 51 ஆவது ஆண்டு விழாவும் தந்தை செல்வா சனசமூக நிலைய வீதி திறப்பும், மின் கட்டமைப்பு வழங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் த.நிர்மலானந்தன், சி.அகீபன், அச்சுவேலி மேற்கு கிராம உத்தியோகத்தர் வீ.கோபாலதாஸ், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் உட்படபலர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் கிராம எழுச்சி விசேட நிதி மூலம் மேற்படி பூரணப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.(5-114)



மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதை ஒழிப்பு தொடர்பான கருத்தமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் திருமதி. தயாசக்தி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கி.ரட்சகன், சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி.றோ. பிறேமினி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (படம்:-கொடிகாமம் செய்தியாளர்)

# நயினாதீவு அம்மனின் திருவிழா காணவரும் பக்தர்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் ந.கருணாகரமூர்த்தி தெரிவித்தார்.

நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திற்கு வரும் பக்கதர்களுக்கான குடிநீர், மலசலகூட வசதி மற்றும் சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-5-10)

# மெய்வல்லுநர் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு "பொற்பதி அறிவாலயம்" நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 34 ஆவது மெய்வல்லுநர் விழா இன்று 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பொற்பதி அறிவாலயத்தில் பொற்பதி அறிவாலயம், சரஸ்வதி முன்பள்ளித் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய முன்பள்ளிக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை அதிபர் கு.திலீபன், யா/இந்துக் கல்லூரி ஆசிரியர் வி. தயாபாலன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சு.விஜயகுமார், கொக்குவில் வடகிழக்கு (ஜே/126) அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.அர்.கவிதா, கோப்பாய்பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ம.சிந்துஜன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

புதிதாக அமைக்கப்பட்ட அச்செழு சென்.ஹென்றி சனசமூக நிலையத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இன்று மாலை 5 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் திருமேனி தலைமையில் இடம்பெறும்.

15 வருடங்களின் பின் புதிதாக அமைக்கப்பட்ட சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவில் வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ் கலந்து கொள்வார். (5-10-134)

# இலங்கைத்தமிழரசுக் கட்சி பேராளர் மாநாடு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 16 ஆவது தேசிய மாநாட்டின் பேராளர் மாநாடு இன்று 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.(இ-5)

# 17 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில்,நல்லூர்திவ்யஜீவன மண்டபத்தில் சனுஜா இராசேந்திரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், சர்வதேச இந்து குருமார் ஒன்றிய தலைவர் கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் (ஜே.பி) ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# யோகா பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா உலகம் நல்லூர்த்தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் சி.ரமணராஜா யோகாப்பயில் நிலையின் முக்கியத்துவம் எனும் தொனிப் பொருளில்கருத்துரை வழங்குவார்.

யோகா புதிய வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம் 7 மணி வரை இரு பிரிவுகளாக ஒரு மாதம் தினமும் நடைபெறும். (5)

# சபாபதி நாவலர் குருபூசை இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சபாபதி நாவலர் மன்றம் நடத்தும் சபாபதி நாவலர் குருபூசை இன்று 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கோப்பாய் சித்திர வேலாயுதசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

வட.கோவை தி.வரதராஜன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் சிறப்புரையை கலாபூஷணம் ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) ஆற்றுவார். (5)

# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

# வெற்றிடங்கள்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) 2016 இன் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டத்தின் கீழ் (தாபித்தல், நிர்வாகம், மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) நிறுவப்பட்ட ஒரு சுயாதீன ஆணைக்குழுவாகும். நாட்டில் வெவ்வேறு காலங்களில் ஏற்பட்ட மோதல் மற்றும் அரசியல் கொந்தளிப்புகளின் போது காணாமற்போனோரின் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் வழங்கல், காணாமல் போனோரைத் தேடுதல் உட்பட்ட இந்தச் சட்டத்தில் பரந்த அளவான பணிகளை OMP மேற்கொள்கிறது. இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்கு அரசுக்குப் பரிந்துரைகளை முன் வைப்பதும் இதன் பணியாகும்.

**பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
புலனாய்வுப் பிரிவில் திட்டமிடல், தேடுதல் மற்றும் புலனாய்வுகளைக் கண்காணித்தல், விசாரணைகள் மற்றும் காணாமல் போனவர்கள் மற்றும் காணமல் ஆக்கப்பட்டவர்களை தேடும் செயற்பாடுகளுக்கு உதவியளித்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து சட்டம் / வரலாறு / அரசியல் விஞ்ஞானம் / மானிடவியல் / குற்றவியலில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்த ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.
**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)
**சம்பள அளவு:** 53,175 – 10 x 1375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
பாதுகாப்பு பிரிவுகளின் கண்காணிப்பு உட்பட சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்புக்கு தொடர்பான நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளை மேம்படுத்தல் உட்பட OMP இன் பணியாளர்/ஊழியர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்காக பாதுகாப்பு மூலோபாயங்களின் மேம்படுத்தல்களுக்கான பொறுப்பு, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக பணிக்குழுவினரின் நடவடிக்கைகளில் பிரிவுத் தலைவருக்கு உதவியளித்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து மனித உரிமைகள்/ சட்டம்/ சமூக விஞ்ஞானம்/ உளவியல்/ ஆலோசனை தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)
**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட தரவுப் பகுப்பாய்வாளர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்துதல் மற்றும் ஏனைய உபாயமுறைகள் புள்ளிவிபர செயற்திறமையில் சிறந்த விளையபயனைப் பெறத்தக்கதாக மற்றும் OMP தரவுகள் முகாமைத்துவ அலகின் தொடர்புடைய தரம் பற்றிய தரவுகள் சேகரிப்பு முறைமைகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்.

**தகைமைகள்:**
1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து தகவல் தொழில் நுட்பம்/ கணனி விஞ்ஞானம் / கணிதம் / புள்ளிவிபரவியல் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்பட்ட ICT துறையில் தேசிய தொழிற் பயிற்சித் தகைமைகள் தரம் 7 க்குக் குறையாத திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தலுடன் அரசாங்க சேவை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/நிறுவனம் அல்லது புகழ் பெற்ற நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)
**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட சமூக உளவியல் உத்தியோகத்தர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
OMP நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள்/ சமூகங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வோர்களின் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக உளவியல் ரீதியான ஆதரவளித்தல் மற்றும் சமூக சேவைகள் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்காணிப்பு உபாயமுறைகளில் உதவியளித்தல்

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து தகவல் உளவியல் / ஆலோசனை மற்றும் உளவியல் / சமூக விஞ்ஞானம் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)
**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) தொடர்புடைய ஆராய்ச்சி வேலைகளை ஆரம்பித்தல் மற்றும் நடாத்துதல் உபாயமுறைகளை அபிவிருத்தி செய்தல் உட்பட்டதாக 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு ஆராய்ச்சி அலகை வழிநடாத்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக விஞ்ஞானம் / சட்டம் / குற்றவியல் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)
**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## உள்ளக கணக்காய்வாளர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) நிதி தொடர்புடைய ஆவணங்களை காலாந்தரமாக சரிபார்த்தல். கண்டு பிடிப்புகள் பற்றி தலைவருக்கு காலாண்டு அறிக்கை சமர்ப்பித்தலுடன் ஒழுங்கு முறைகளுக்கு இணங்க இருப்பதை உறுதி செய்தல்.

**தகைமைகள்**
1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீடு / நிதி / வணிகம் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றில் (CIMA/ACCA/ICA) இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் அல்லது CIMA யில் முழுத் தகைமை பெற்றிருத்தலுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல்.

அல்லது

3. கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருடகால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல் வேண்டும்

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பளப் புள்ளி:** ரூபா 47,668/- (2019)
**சம்பள அளவு:** 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## புலன் விசாரணை உத்தியோகத்தர் — JM 1-1

**தொழிற் சுருக்கம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) புலன் விசாரணைகள் தொடர்புடைய விசாரணைகள் மற்றும் காணாமல் போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடுதல் பற்றிய தொடர்புடைய அலகின் வேலைகளிற்கு உதவியளித்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் / வரலாறு / அரசியல் விஞ்ஞானம் / மானிடவியல் / குற்றவியல் இளமாணிப் பட்டமொன்று.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பளப் புள்ளி:** ரூபா 38,185/- (2019)
**சம்பள அளவு:** 42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர் — JM 1-1

**தொழிற் சுருக்கம்:**
மொழிபெயர்ப்பாளர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல். OMP யின் அனைத்து மொழிபெயர்ப்புகளுக்கும் பொறுப்பாக இருத்தல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பு கற்கைகள் / மொழியியல் / மொழிகள் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) தொடர்புடைய துறையில் பட்டமொன்றுடன் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால பட்டப்படிப்பின் பின் அனுபவம் இருத்தல்.

மற்றும்

சத்தியபிரமாணம் பெற்ற மொழி பெயர்ப்பாளராக இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
**சம்பளப் புள்ளி:** ரூபா 38,185/- (2019)
**சம்பள அளவு:** 42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## ஆலோசனை வழங்குபவர் / சமூக சேவை உத்தியோகத்தர் — JM 1-1

**தொழிற் சுருக்கம்:**
உளவியல் - சமூக ஆதரவளித்தல், உளவியல் சமூக ஆதரவு தேவைப்படும் மக்களை கண்டறிதல், காணாமல் போன ஆட்களின் உறவினர்களுக்கு தனிப்பட்ட முறையில் அல்லது குழுவினராக ஆலோசனை வழங்கல்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உளவியல் / ஆலோசனை வழங்கல் மற்றும் உளவியல் / சமூக விஞ்ஞானம் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டமொன்று

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பள புள்ளி:** ரூபா 38,185/- (2019)
**சம்பள அளவு:** 42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## தரவு பதிவு இயக்குநர் — MA 1-1

**தொழிற் சுருக்கம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) தரவு அடிப்படை பராமரித்தல், பதிவுக்காக தரவுகள் தொகுத்தல் மற்றும் தயாரித்தல் என்பனவற்றுக்குப் பொறுப்பாக இருத்தல்.

**தகைமைகள்**
அ) க.பொ.த. (சா/தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் நான்கு பாடங்களில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- i. சிங்களம் / தமிழ்
- ii. ஆங்கில மொழி
- iii. கணிதம்.

ஆ) க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் (பொது வினாத்தாள் தவிர்ந்ததாக) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
இ) கணினி பயிற்சி அல்லது தரவுகள் பதிவு உறுதிப்படுத்தல் கூடுதல் தகுதியாக அமையும்.

**வயது:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பள புள்ளி:** ரூபா 25,018/- (2019)
**சம்பள அளவு:** 27,910 – 10 x 300 – 7 x 350 – 4 x 495 – 20 x 660 – 48,540/- (இந்த அளவு 2020.01.01 இல் இருந்து அமுலில் இருக்கும்.)

## பிராந்திய ஒருங்கிணைப்பாளர் — MM 1-1

**தொழிற் சுருக்கம்:**
பிராந்திய அலுவலகங்களுக்கு தலைமைத்துவம் வகித்து மற்றும் வழிகாட்டல்களை வழங்கி சீராக திறம்பட செயற்படுவதை கண்காணித்தல், மேற்பார்வையிடல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டம்/ மனித உரிமைகள்/ நிர்வாகம்/ மனித வள முகாமைத்துவம்/ பொது முகாமைத்துவத்தில் இளமாணி பட்டம் ஒன்றுடன் பதவிக்கு தொடர்பான துறையில் தகைமைக்கு பின்னரான ஓர் ஆண்டு அனுபவம்

**வயது:** 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்குக் மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
**சம்பள புள்ளி:** ரூபா 47,668/- (2019)
**சம்பள அளவு:** ரூபா 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 - 95,575/- (01.01.2020 இல் இருந்து இந்த அளவு அமுலில் இருக்கும்)

## மேலுள்ள அனைத்து வெற்றிடங்களுக்கும் பொருந்துவன.

- கணினிக் கல்வி கூடுதல் தகுதியாக அமையும்.
- விண்ணப்ப இறுதித் திகதி நேரத்தில் தேவையான தகைமைகள் விண்ணப்பதாரரினால் எட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
- தொழில் பிரிவின் கீழ் மேல் உள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- தேவையான தகைமைகளைப் பெற்றிருக்கும் காணாமல்போனவர்களின் நேரடி குடும்ப உறவினர்கள் குறித்த ஆவணங்களுடன் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் நிரந்தர நியமனமாகும்.
- தற்போது அரச துறை நிறுவனங்களில் பணியாற்றும் எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் தொடர்புடைய சான்றிதழ்களுடன் 2019 ஜுலை மாதம் 22ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **தலைவர், சிராவஸ்தி மந்திரய, இலக்கம் 32, சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பித்த பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

**தலைவர்,**
**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,**
**"சிராவஸ்தி மந்திரய",**
**இலக்கம் 32,**
**சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,**
**கொழும்பு 07**

# யாழ்.பல்கலையில் முகாமைத்துவ உதவியாளர்கள் சுற்றறிக்கையின் பிரகாரமா நிரப்பப்படுகின்றனர்?



## நாடாளுமன்றில் டக்ளஸ் கேள்வி

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ உதவியாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் குறிப்பிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களினதும், அமைச்சர்களினதும் சிபார்சினால் வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியல்கள் யாழ்.பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அப்பெயர்ப்பட்டியலிலுள்ளவர்களை மட்டும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் பரீட்சைக்குட்படுத்தப்பட்டு நேர்முகத் தெரிவுக்கான ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும் அறிகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவியாளர்களை பல்கலைக்கழகங்களில் உள்வாங்குவது தொடர்பான 2018.07.16ஆம் திகதியிலான சுற்றறிக்கை இல: 06/2018 இன் படி பின்வரும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகாமைத்துவ உதவியாளர் தரம் III திறந்த அடிப்படையில் 70 வீதம் எனவும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 30வீதம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், திறந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கமைவாக எழுத்துப் பரீட்சையில் 75 வீதம் புள்ளிகள் மற்றும் நேர்முகப் பரீட்சையில் 25வீதம் புள்ளிகள் வழங்கப்படுவதன் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு குறிப்பிடப்பட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களினதும், அமைச்சர்களினதும் சிபார்சின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ளவர்கள் மட்டுமா எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப்பரீட்சைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்?

அவ்வாறான முறைமையை யாழ்.பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்துகின்றதாயின், அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2018.07.16 ஆம் திகதியிலான சுற்றறிக்கை இல: 06/2018 இற்கு முரணானது என்பதை அமைச்சர் ஏற்றுக் கொள்வாரா?

பிழையான நடைமுறை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்றால் அதனைத் சீர்செய்வதற்கு அமைச்சர் எடுக்கவுள்ள நடவடிக்கை என்ன?

அவ்வாறான ஓர் நடவடிக்கை பின்பற்றப்படுகின்றதாயின் அது வேலைவாய்ப்பில் சகலருக்கும் சமமான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டுக்கு முரணானது என்பதை அமைச்சர் ஏற்றுக் கொள்வாரா?

மேற்படி எனது கேள்விகளுக்கான பதில்களையும், எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களையும் அமைச்சர் லக்கி ஜெயவர்த்தன வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் (நாடாளுமன்றில் நடைபெற்ற 27/2 கேள்வி நேரத்தின் போது நகர திட்டமிடல், நீர் வளங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்கி ஜெயவர்த்தன) என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மருத்துவ உபகரண கொள்வனவில் ஊழல் சுகாதாரத் துறையில் பெரும் பிரச்சினை!



## ஜனாதிபதி மைத்திரி கவலை

(மன்னம்பிட்டி)

மருந்துப் பொருட்களையும் நவீன மருத்துவ உபகரணங்களையும் கொள்வனவு செய்யும் போது அதன் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பார்க்கிலும் பெரும் நிதி மோசடிகள் இடம்பெறுவது மேலைத்தேய மருத்துவ துறையிலுள்ள பெரும் பிரச்சினையாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மன்னம்பிட்டி கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னம்பிட்டி கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையில் இருந்து வந்த நீண்டகால குறைபாடொன்றை நிவர்த்தி செய்யும் வகையில் "எழுச்சிபெறும் பொலநறுவை" மாவட்ட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கூட்டத் தொகுதிக்கு 165 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

28 கட்டில்களைக் கொண்ட இந்தத் தொகுதி வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது.

எமது ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவ முறைமையானது பெறுமதிவாய்ந்த ஒன்றாகும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி மேலைத்தேய மருத்துவ விஞ்ஞானம் எவ்வளவு முன்னேற்றமடைந்தபோதும் எமது நாட்டின் சுதேச மருத்துவ முறைமையின் பெறுமதியை மிஞ்ச முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார்.

நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து புதிய கட்டடத் தொகுதியை திறந்து வைத்த ஜனாதிபதி, அதனை பார்வையிட்டார்.

வட மத்திய மாகாண சுகாதார சுதேச மருத்துவத் துறை அமைச்சின் செயலாளர் சமன் பந்துலசேன, வட மத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளர் குமார அல்விஸ், திம்புலாகலை பிரதேச சபையின் தவிசாளர் ஜெயந்த மாரசிங்க உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேநேரம் "எழுச்சிபெறும் பொலநறுவை" மாவட்ட அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு நன்மைகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் பொலநறுவை, புத்தி மண்டபத்தில் இடம்பெற்றது.

அறநெறிப் பாடசாலைகள், முன்பள்ளிப் பாடசாலைகளுக்கான கதிரை, மேசைகளை வழங்குதல், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 63 வீடுகளைக் கையளித்தல், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முக்கிய இடங்களில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுக்கான நடமாடும் விற்பனைக் கூடங்களை வழங்குதல், மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (இ-9)

# சஜின் வாஸுக்கு எதிரான வழக்கு ஜூலை 12 ஆம் திகதி

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிரான வழக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதாக கொழும்பு நீதவான் நீதிமன்றம் தெரிவித்தது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன மேற்கண்டவாறு உத்தர விட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இந்த வழக்கைத் தாக்கல் செய்வதற்கு ஆணையாளர்களின் எழுத்துமூல அனுமதி சமர்ப்பிக்கப்படாமையால் அடிப்படை எதிர்ப்பு தெரிவிப்பதாக பிரதிவாதி தரப்புச் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன்படி வழக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம் அன்றைய தினம் ஆட்சேபனை சம்பந்தமாக விளக்கமளிக்குமாறு நீதவான் உத்தர விட்டார்.

மகிந்த அரசாங்க காலத்தில் சஜின் வாஸ் மிஹின் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருந்த வேளை, அந்நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களால், 333 மில்லியன் ரூபா நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டதாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 90 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 400 | 400 |
| தக்காளி | 100 | 120 | 60 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 140 | 120 |
| கோவா | 100 | 80 | 60 | 80 |
| கரட் | 160 | 160 | 130 | 200 |
| பூசணி | 140 | 150 | 150 | 120 |
| புபோல் | 80 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 50 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 150 |
| பயற்றங்காய் | 140 | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 160 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 60 | 80 |
| குடைமிளகாய் | 200 | 120 | 120 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 210 | 200 |
| போஞ்சி | 170 | 170 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 150 | 300 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 240 | 180 | 180 | 240 |
| முள்ளங்கி | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| அகத்தி / முடப்பள | 40 | 80 | 110 | 80 |

# மதூஷ் வழங்கிய தகவலின் படி கால்வாயிலிருந்து துப்பாக்கி மீட்பு



(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு தலுபொத்த கால்வாயில் ரீ-56 ரக துப்பாக்கியொன்று மீட்கப்பட்டது.

பாதாள உலகக் குழுத் தலைவன் மாகந்துரே மதூஷை அழைத்துச் சென்று நடத்திய தேடுதல் நடவடிக்கையில் இந்த துப்பாக்கி மீட்கப்பட்டது.

இந்த நடவடிக்கை நேற்றுச் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் அதிரடிப்படை தெரிவித்தது.

மாகந்துரே மதூஷின் மீது 10 கொலைகள், 3 கொலை முயற்சி, 3 திருட்டு குற்றச்சாட்டு ஆயுதங்களை வைத்திருந்த இரு குற்றச்சாட்டுக்கள் மற்றும் 18 கொலைச் சதித் திட்டம் தீட்டிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற அவர், டுபாயில் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட நிலையில் அவரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பயங்கரவாதத்திற்கு எதிராக மக்கள் ஒன்றிணைய வேண்டும்

# “சமத்துவமாகச் செயற்பட்டால் மாத்திரமே புத்த தர்மம் குறித்து பெருமைப்பட முடியும்”

## கலாநிதி விக்கிரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

**சகல சமூகத்தவர்களையும் சமத்துவமானவர்களாக நடத்தினால் மாத்திரமே பௌத்த தர்ம போதனைகளைச் சரிவரக்கடைப்பிடிக்கின்றோம் என்று பெருமையாகக் கூறிக்கொள்ள முடியும் என்று நவசமசமாஜக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.**




பயங்கரவாதத்திற்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும். அனைவரும் சமன் என்ற கொள்கையை மனதில் நிறுத்தினால் மாத்திரமே முன்னோக்கிச் செல்ல இயலும். இதனையே அனைத்து மதங்களும் போதிக்கின்றன.

நாட்டைப்பயங்கரவாதத்திலிருந்து மீட்க தற்போது கஷ்டமான பாதையில் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சில அரசியல்வாதிகளின் கருத்துக்கள் வன்முறையைத் தூண்டும் வகையில் உள்ளன. இவற்றைக் கடந்தே நாம் பயணிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# சுரங்கம் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி 43 பேர் பலி!

(கின்ஷாசா)

மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ நாட்டிலுள்ள தாமிரச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 43 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கொங்கோவில் ஜாம்பியா நாட்டின் தெற்கு எல்லைப் பகுதியின் அருகாமையில் தனியாருக்குச் சொந்தமான மிகப்பெரிய தாமிரம் மற்றும் கோபால்ட் கனிமம் வெட்டி எடுக்கும் சுரங்கம் செயற்பட்டு வருகிறது.

அந்தச் சுரங்கத்தில் இருந்து கனிமங்களை வெட்டி எடுக்கும் பணியில் நிரந்தர அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் வழக்கம்போல் இந்தச் சுரங்கத்தில் பணிகள் நடைபெற்றபோது எதிர்பாராத விதமாக சுரங்கத்துக்குள் மண்சரிவு ஏற்பட்டது. இதில் பல தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர்.



இது குறித்து தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் மற்றும் இராணுவத்தினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பலரை உயிருடன் காப்பாற்றிய மீட்புப் படையினர் 40 இற்கும் மேற்பட்ட சடலங்களையும் மீட்டனர்.

இந்நிலையில் பலி எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சுரங்கத்தினுள் மேலும் பலர் சிக்கி இருக்கலாம் என்பதால் இவ்விபத்தில் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

ஆபிரிக்க நாடுகளிலுள்ள சுரங்கங்களில் கனிம வளங்களை வெட்டி எடுக்கும் தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுவதில்லை எனப் பொதுவான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது குறிப்பிடத்தக்கது. (இ)

## துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி வர்த்தக நிலையத்தில் கொள்ளை

(ஹல்துமுள்ளை)

ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு வர்த்தக நிலையத்தில் இருந்தவர்களை முழந்தாளிடச் செய்து, பெறுமதிமிக்க பொருட்களையும் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஹல்துமுள்ளையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் தலைக்கவச முகமூடியணிந்த இருவர் ஹல்துமுள்ளையிலுள்ள பிரபல வர்த்தக நிலையம் முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு தம்மிடமிருந்த துப்பாக்கியை எடுத்து ஆகாயத்தை நோக்கி மூன்று முறை துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.


அதையடுத்து வர்த்தக நிலையத்திற்குள் புகுந்த அவர்கள் துப்பாக்கி முனையில் வர்த்தக நிலைய உரிமையாளர், வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் ஒரு பெண் மற்றும் வாடிக்கையாளர்கள் இருவர் ஆகியோரை முழந்தாளிடச் செய்தனர்.

அதையடுத்து வர்த்தக நிலையத்தின் வைப்பகத்தை திறந்து அதனுள் இருந்த மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பணத்தையும் வர்த்தக நிலையத்தின் பெறுமதிமிக்க பொருட்களையும் எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர்.

அவர்கள் சென்றதும் வர்த்தக நிலைய உரிமையாளர், தமக்கேற்பட்ட நிலையை, ஹல்துமுள்ளை பொலிஸ் நிலையம் சென்று புகார் செய்தார்.

இப்புகாரின் அடிப்படையில், ஹல்துமுள்ளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.த.சில்வா தலைமையிலான குழுவினர், கொள்ளை குறித்து தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டனர். (இ)

# சரத் என்.சில்வாவுக்கு எதிரான மனு; மற்றுமொரு நீதியரசரும் விலகினார்



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம்சுமத்தப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிரான மனுவை விசாரிப்பதில் இருந்து ஒரு நீதியரசர் விலகியதன் காரணமாக அந்த மனு செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த மனு நேற்று முன்தினம் நீதியரசர்களான சிசிர டி ஆப்ரு, விஜித் மலல்கொட மற்றும் ப்ரீதி பத்மன் சுரசேன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது இந்த மனுவை விசாரிப்பதில் இருந்து தான் விலகுவதாக நீதியரசர் சிசிர டி ஆப்ரு திறந்த நீதிமன்றில் அறிவித்தார். இதனையடுத்து மனு எதிர் வரும் செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கு முன்னர் இந்த மனுவை விசாரிப்பதில் இருந்து விலகுவதாக நீதியரசர்களான பிரசன்ன ஜயவர்த்தன மற்றும் பிரியந்த ஜயவர்த்தன ஆகியோர் தெரிவித்தனர்.


கடந்த ஆண்டு டிசெம்பர் 03 ஆம் திகதி மருதானையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நீதிமன்றத்தை அவமதித்து கருத்து வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதியும் அவர் இதுபோன்று நீதிமன்றத்தை அவமதித்து கருத்து வெளியிட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. (இ)

# இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக

# தலதா மாளிகை திடலில் பிக்குகள் மாநாடு!

## ஜூலை 7ல் தீர்மானம் - பொதுபலசேனா அறிவிப்பு



**(கொழும்பு)**

**இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக பொது பல சேனா அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டி - தலதா மாளிகை திடலில் பிக்குகள் மாநாடு இடம்பெறவுள்ளது.**

இதில் சுமார் ஒரு இலட்சம் பொது மக்கள் மற்றும் 10 ஆயிரம் பிக்குகள் கலந்துகொள்ளவுள்ளனர். இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கவும் அனைத்து இன மக்களையும் ஒரு சட்டத்திற்கு கீழ் கொண்டு வருவதுமே இந்த மாநாட்டின் முக்கிய விடயமாகுமென பொதுபலசேனா தெரிவித்தது.

இந்த மாநாட்டிற்கான அஸ்கிரிய , மல்வத்து மற்றும் சியம் ஆகிய முக்கிய மூன்று பௌத்த பீடங்களின் ஆசீர்வாதம் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

முஸ்லிம் மக்களின் ஆடை விவகாரம் , ஹலால் , மத்ரஸா , காதிக்கோர்ட் சட்டம் மற்றும் தௌஹீத் பள்ளிவாசல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது எனப் பொதுபலசேனா மேலும் தெரிவித்தது. (இ)

# மரண தண்டனை தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## மைத்திரியிடம் இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



அன்று அமோக ஆதரவோடு கொண்டு வரப்பட்ட 18 ஆம் திருத்தச் சட்டத்தையும் 19 ஆவது திருத்தச் சட்டத்தையும் இன்று இல்லாது செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவிப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் விமர்சித்தார்.

அதேபோல இந்த மரண தண்டனை வழங்கும் சட்டத்தை இல்லாது செய்ய வேண்டும் என்று இன்னும் சில காலங்களில் தோன்றலாம். எனவே, சட்டங்களை கொண்டு வருகின்ற பொழுது மிகவும் தெளிவாகவும் தீர்க்கமாகவும் கொண்டுவர வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரியின் தூக்குத் தண்டனை தொடர்பான தீர்மானத்தை அவர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும். தூக்குத் தண்டனையை அமுல் படுத்துவதால் மாத்திரம் குற்றச் செயற்களை தடுத்து விட முடியாது.

தூக்குத் தண்டனை நடைமுறையிலுள்ள நாடுகளில் கூட குற்றங்கள் இடம்பெறுகின்றன. எனவே, இதனை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

இன்று எங்களுடைய நாட்டின் மீது ஏப்ரல் 21 ஆம் திகதி சம்பவத்தின் பின்பு சர்வதேச ரீதியாக அனைத்து நாடுகளும் மனித உரிமை அமைப்புக்களும்கவனம்செலுத்தி வருகின்றன. பல நாடுகள் பயணத்தடையையும் விதித்தன. இவ்வாறான ஒரு நிலையில் மரணதண்டனையை அமுல்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி எடுத் துள்ள முடிவு நாட்டிற்குப்பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இன்று நாம் சர்வதேச ரீதியாகப் பல சவால்களை எதிர்நோக்கியிருக்கின்றோம். அந்தச் சவால்களுக்கு முகம் கொடுக்கின்ற பொழுது இது ஒரு புதிய குழப்பத்தை ஏற்படுத்தும். சர்வதேச ரீதியாக பல மனித உரிமை அமைப்புக்கள் மரண தண்டனைக்கு எதிராகக் குரல் எழுப்பி வருகின்றன.

எனவே, நாங்கள் ஒரு சட்டத்தை கொண்டு வருகின்ற பொழுது அதனைப்பற்றி பல முறை சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

அன்று 18 ஆம் திருத்தச் சட்டமும் 19 ஆவது திருத்தச் சட்டமும் இந்த நாட்டில் பாரிய மாற்றத்தை கொண்டு வரும் என்று கூறிய ஜனாதிபதியே இன்று அதனை இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறுகின்றார். எனவே இந்த மரண தண்டனைச் சட்டமும் கூட நாளை பிழையான ஒரு தீர்மானம் என்ற முடிவிற்கு வரலாம். சட்டங்களை இயற்றுகின்ற பொழுது தெளிவாகவும் சரியாகவும் உரிய முறையில் ஆராய்ந்து பார்த்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சர்வதேச ரீதியாக பல நாடுகளில் மரண தண்டனை வழங்கப்பட்டாலும் அந்த நாடுகளிலும் குற்றங்கள் பல இடம்பெறுகின்றன. எனவே மரண தண்டனை மாத்திரம் இதற்குத் தீர்வாக அமையாது. அதேநேரத்தில் இறைவனால் படைக்கப்பட்ட உயிரை மனிதன் தண்டனை வழங்கித் தூக்கிலிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# குத்தகை அடிப்படையில் காணிப் பத்திரங்களை வழங்கத் தயாரில்லை

## திகாம்பரம் திட்டவட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்படும் காணிகளுக்கு முழுமையான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்ற நிலையில், அவற்றை 99 வருட கால குத்தகைக்கு வழங்க இடமளிக்க முடியாது.

குத்தகையின் அடிப்படையில் மக்களுக்குக் காணிப் பத்திரங்களை வழங்க நாங்கள் தயாராகவும் இல்லை. இந்த பத்திரங்களை முழுமையான பத்திரங்களாகப் பெற்றுக்கொடுக்க இடமளிக்க வேண்டும் என்று மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.


பெருந்தோட்ட சமூகத்தின் காணி உரிமை தொடர்பிலான கூட்டம் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நேற்று இடம்பெற்றது.

இந்த கருத்தரங்கில் அந்த நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பீ. முத்துலிங்கம், அமைச்சர் பழனி திகாம்பரம், அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகர் எம். வாமதேவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் இதில் கலந்துரையாடப்பட்டதோடு பல்வேறு தொழிற்சங்க சிவில் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் தமது கருத்துக்களையும் பெருந்தோட்ட பிரச்சினைகள் தொடர்பான தமது கண்ணோட்டங்களையும் பகிர்ந்துகொண்டனர். (இ)

# நந்தாவில் குளத்திலிருந்து 2 ஆட்லெறிக் குண்டுகள் மீட்பு



கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் குளத்தில் இருந்து இரண்டு ஆட்லெறிக் குண்டுகள் நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர்.


குறித்த குளத்தை துப்புரவு செய்யும் பணிகள் இடம் பெற்று வரும் நிலையில் நேற்று இந்தக் குண்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் குறித்த குண்டுகள் மீட்கப்பட்டன.

யுத்தகாலத்தில் ஏவப்பட்ட குண்டுகள் வெடிக்காத நிலையில் இருந்திருக்கலாம் எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# பாரிய சிக்கல் நிலவுவதால் சகல துறைகளும் சரிவு!

## பியல் சுட்டிக்காட்டு



(காலி)

தற்போது நாட்டினுள் பாரிய சிக்கல் நிலவுவதாக பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

காலிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் அனைத்துத் துறைகளும் சரிவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

## “இராணுவத்தினர் இறந்தால் மட்டும் உயிராகக் கருதக்கூடாது”

# ரயில் கடவைக் காப்பாளர்களாக முன்னாள் போராளிகளை நியமிக்குக



## அரசிற்கு சிறீதரன் இடித்துரைப்பு

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டு முதல் இன்றுவரையில் வவுனியா முதல் யாழ்ப்பாணம் வரையிலான புகையிரதப் பாதையில் 46 விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அவற்றில் பொதுமக்கள் 36 பேரும் இராணுவத்தினர் 6 பேருமாக 42 பேர் உயிரிழந்தனர் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ரயில்வே ஊழியர்களின் போராட்டம் தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு யாழ்.,கிளிநொச்சி மாவட்டங்களுக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால் 2013 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரயில் சேவைகள் இல்லாததன் காரணமாக வீதிகள் இல்லாது, தண்டவாளங்கள் இல்லாது ரயில் பாதைகள் அழிவடைந்து, மக்கள் இந்த ரயில்பாதைகள் ஊடாக தமது போக்குவரத்து பாதைகளை அமைத்து வாழ்ந்த சூழல், குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்றது.

இது தொடர்பாக பல தடவைகள் இந்த பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறோம். அமைச்சர்களுக்கு கடிதம் எழுதியுள்ளோம். ஆனால் இன்றுவரை எந்தப்பதில்களும் கிடைக்கவில்லை.

ரயில்பாதைகள் அமைக்கப்படும்போது ரயில் கடவைகள் 1968 ஆம் ஆண்டுக்கு முதல் வர்த்தமானியில் வந்த அடிப்படையில்தான் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் காலத்தின் பின்னர் கிராமங்கள் எழுச்சி பெற்றுள்ளன. மக்களின் வாழ்க்கை முறை மாறியுள்ளது. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யுத்தம் காரணமாக ரயில் பாதைகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றங்களை மையமாக வைத்து ரயில்பாதைகள் அமைக்கப்படும் போது இந்த கடவைகளும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவ்வாறு எந்தக்கடவைகளும் திட்டமிட்டு அமைக்கப்படவில்லை.

இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக நிமால் சிறிபால டி சில்வா இருந்தபோது 2017.02.03 ஆம் திகதி விரிவான கடிதம் ஒன்றை அவருக்கு எழுதியிருந்தேன். அதில் நான் எங்கெங்கே கடவைகள் அமைக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்தேன். அதுவரையில் எத்தனை பேர் இறந்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தேன். கடந்த வாரம் கூட நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். கிளிநொச்சியில் இராணுவ மருத்துவப் பிரிவின் வாகனம் ரயிலுடன் மோதியதில் 6 இராணுவத்தினர் இறந்துள்ளனர்.

இதன் பின்னர்தான் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் கூட்டமொன்று நடத்தப்பட்டு ரயில் கடவைகள் அமைப்பது தொடர்பாக பேசப்படுகின்றது.

இதுவரை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரை 46 விபத்துச் சம்பவங்கள் நடந்துள்ளன. இந்த ரயில் பாதையில் இன்றுவரை பொதுமக்கள் 36 பேர் வரையில் ரயிலுடன் மோதி இறந்துள்ளனர். இராணுவத்தினர் இறந்தால் மட்டும் உயிராகக் கருதக்கூடாது.

இந்த 36 பேர் இறந்தபோது கவனத்தில் எடுக்கப்படாத விடயம் இப்போதாவது கவனத்தில் எடுக்கப்படுவதனை நான் முதலில் பாராட்டுகின்றேன். கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 16 ரயில் கடவைகள் அமைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் பல தடைவைகள் குறிப்பிட்டும் கருத்தில் எடுக்கப்படவில்லை.

அத்துடன் முன்னாள் போராளிகளிலிருந்து போரினால் கல்வி கற்க முடியாத பலர் இந்த மாவட்டத்திலுள்ளனர். இவர்களை ரயில் கடவை காப்பாளர்களாக நீங்கள் நியமிக்க முடியும். அவர்களுக்கு தொழிலும் கிடைக்கும். இதன்மூலம் உயிர்களைக் காப்பாற்றவும் முடியும். இது தவிர கிளாலியிலிருந்து காங்கேசன்துறை வரையில் 23 ரயில் கடவைகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக்கருத்தில் எடுத்தால் இனி ஏற்படப்போகும் உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

---

## தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கான சீயோன் தேவாலயத்தில் பிரதமர்







(ஏறாவூர்)

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கிலக்கான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று விஜயம் மேற்கொண்டார்.

தேவாலய போதகர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட கலந்துரையாடலில் பிரதமரும் கலந்து கொண்டார். தாக்குதலில் காயமடைந்தவர்களும் இதில் பங்கு கொண்டனர். (இ)

---

## 2கோடியே, 60இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் சிங்கப்பூர் தம்பதி கைது!



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளைக் கொண்டுவந்த சிங்கப்பூர் தம்பதியினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

55 மற்றும் 45 வயது மதிக்கத்தக்க இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதுடன் குறித்த நபர்கள் அந்நாட்டின் பிரதான பணப்பரிமாற்றல் நிறுவனம் ஒன்றின் உரிமையாளர்கள் எனவும் தெரிய வருகிறது.

குறித்த நபர்கள் இவ்வாண்டு மாத்திரம் 6 முறை இலங்கை வந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளின் இருந்து தெரியவந்தது.

குறித்த நபர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த சிங்கப்பூர் விமான சேவைக்குச் சொந்தமான QH 468 என்ற விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் அணிந்திருந்த ஆடைகள் மற்றும் அவர்களின் உடலில் 4 கிலோ 850 கிராம் நகைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ)

---

## பிரியங்கர ஜெயரத்னவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மற்றும் அவரின் தனிப்பட்ட செயலாளர் பாலமானகே தயாவங்ச ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை பிற்போடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இதன்போது மனுவுக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்க இருப்பதாக பிரதிவாதி சார்பான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன்படி ஆட்சேபனை தொடர்பில் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி விளக்கமளிக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அன்றைய தினம் வரை வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

பிரியங்கர ஜயரத்ன விமான சேவைகள் அமைச்சராகப் பதவி வகித்த போது, சட்ட ரீதியற்ற முறையில் விமான சேவைகள் அபிவிருத்தித் திட்டங்களுக்கான அபிவிருத்தி அதிகாரி என்ற புதிய பதவிக்கு அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரை நியமிப்பதற்கு விமான சேவைகள் பணிப்பாளர் சபையை ஊக்குவித்த குற்றச்சாட்டில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

# முல்லையில் 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் அமைக்க வேண்டியது அவசியம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை அமைக்க வேண்டிய தேவையிருப்பதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கௌரிதிலகன் தெரிவித்துள்ளார்.

விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பு, மீன்பிடி என்பவற்றை பிரதானமான தொழிலாகக் கொண்டு மக்கள்வாழும் மாவட்டமாகக் காணப்படுகின்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள் கால்நடைகளை பராமரிப்பதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக, காலபோகச் செய்கையின் போது முழுமையான விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கால்நடைகளை பராமரிப்பதில் பண்ணையாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த ஆண்டு பயிர்ச் செய்கையின் போது மேய்ச்சல் தரவைகள் இன்றி குறுகிய நிலப் பரப்புக்கள் கல்நடைகளை பராமரித்தமையால் ஒருவித நோய்த் தாக்கத்திற்கு உள்ளகி அதிகளவான கால்நடைகள் அழிந்து போனதாக பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் கருத்துத்தெரிவித்த உதவிப்பணிப்பாளர் மாவட்டத்தில் உள்ளக வளர்ப்புமுறை மற்றும் திறந்தவெளி வளர்ப்பு முறைகளில் பண்ணையாளர்கள் கால்நடைகளை பராமரித்து வருகின்றனர்.

இருந்தபோதும் பாரம்பரிய முறையிலான திறந்த வெளி வளர்ப்பு முறையிலேயே அதிகளவான பண்ணையாளர்கள் கால்நடைகளை பராமரித்து வருகின்றனர்.

இவ்வாறு மாவட்டத்தில் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் திறந்தவெளி முறையிலேயே வளர்க்கப்படுகின்றன. இவற்றுக்கான மேய்ச்சல்தரவை என்பது மிகப்பாரிய பிரச்சினையாகவுள்ளது.

இது தொடர்பில் நாங்களும் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-315)

# வவுனியாவில் வெடிபொருட்கள் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இளமருதங்குளம் காட்டுப் பகுதியில் மரமொன்றின் அடிவாரத்தில் பிளாஸ்ரிக் பையில் சுற்றப்பட்ட நிலையில் வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.



ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முற்பகல் 10 மணிக்கு ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ்தசில்வா தலைமையிலான குழுவினர் குறித்த காட்டுப் பகுதிக்குச் சென்று மரமொன்றின் அடிவாரத்தின் கீழ் பிளாஸ்ரிக் பையொன்றில் சுற்றப்பட்ட நிலையில் சுமார் 25 இற்கு மேற்பட்ட நிலக்கண்ணி வெடிகள் மற்றும் ஆர்.பீ.ஜீ.ரக வெடிகுண்டு ஒன்றையும் மீட்டுள்ளனர்.




இவ் விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-250)



வவுனியா வடக்கு இணக்கசபை உறுப்பினர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலாளர் த.பரமேந்திரா தலைமையில் நேற்று முன்தினம் நெடுங்கேணி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. குறித்த நியமனங்களை வவுனியா, மன்னார் மாவட்டத்திற்கான பயிற்றுவிப்பாளர் அதிகாரி செ.விமலராஜ் வழங்கி வைத்ததுடன் இணக்க சபையின் நடைமுறை தொடர்பாகவும் விளக்கமளித்தார். 16 பேருக்கான நியமனம் இந்த நிகழ்வில் வழங்கி வைககப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் வவுனியா வடக்கு கணக்காளர் வி.நாகேசபால, நெடுங்கேணி கனகராஜன் குள பொலில் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## தொடரும் வரட்சி

# வவு.குளங்களில் துர்நாற்றம்



வவுனியாவிலுள்ள பல குளங்களிலிருந்த தண்ணீர் வரட்சியுடனான காலநிலை காரணமாக வற்றிய நிலையில் காணப்படுவதால் குளத்திலிருந்த பெருமளவு மீன்கள் உயிரிழந்து அப்பகுதியெங்கும் துர்நாற்றம் வீசிவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா மகாகச்சக்கொடிய குளத்திலிருந்த பெருமளவு தண்ணீர் வற்றியுள்ளது. இதனால் குளத்திலிருந்த பெருமளவு மீன்கள் உயிரிழந்து வருகின்றன. கால்நடைகள், கொக்குகளுக்கு தண்ணீர் அற்ற நிலை தோன்றியுள்ளதுடன் அப்பகுதியில் விவசாயத்தை நம்பியிருந்த பெருமளவு விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

மகாகச்சக்கொடிய விவசாய கிராமமாகும். அப்பகுதியில் தற்போது விவசாய செய்கைகள் அனைத்தும் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் கிணறுகளில் தண்ணீர் மெல்ல மெல்ல வற்றி வருகின்றதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

கால்நடைகளுக்கு மேச்சல் தரைகள், குடிதண்ணீர் இன்றி அவல நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (9)

# மீள்குடியேறி 10 வருடங்கள் கடந்தும் வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குப்பட்ட விடத்தல் தீவு 7ஆம் வட்டாரம் பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு மீள் குடியேறி சுமார் 10 வருடங்களைக் கடந்த நிலையில் இதுவரை எவ்வித வீட்டுத்திட்டமும் கிடைக்கவில்லை எனவும், கிடைக்கின்ற வீட் டுத்திட்டங்கள் காரணம் இன்றி இடை நிறுத்தப்படுவதாகவும் தெரிவித்து மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

விடத்தல் தீவு 7 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் நபர் ஒருவரே குறித்த முறைப்பாட்டை மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நலன்புரி முகாமிலிருந்து விடத்தல் தீவு 7 ஆம் வட்டாரத்தில் மீள் குடியேறினோம்.

மகள் ஒருவர் யுத்தத்தில் உயிரிழந்துள்ளார். மனைவி மற்றும் திருமணமான மகளுடன் மகளின் தற்காலிக வீட்டில் வசித்து வருகின்றோம்.

வீட்டுத்திட்டம் பெற்றுக் கொள்ளும் வகையில் பல்வேறு தரப்பினருக்கு எழுத்து மூலம் சமர்ப்பித்திருந்தேன். நான் வீட்டுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள எல்லா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளேன்.

இந்த நிலையில் இனி வரும் வீட்டுத்திட்டத்தில் வீடு தரப்படும் என மாந்தை மேற்கு பிரதேசச் செயலகத்தினால் உறுதி மொழி வழங்கப்பட்டது.

ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் எனது பெயர் இல்லை. பிரதேசச் செயலாளரிடம் கேட்ட போது உங்களுக்கு வீடு இருக் கின்றது. புதிய வீட்டுத்திட்டம் தர முடியாது எனத் தெரிவித்தார்.

என்னையும்,எனது மனைவியையும் திருமணமான மகளுடன் இருக்கும் படி அதிகாரிகள் கூறுகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழு மாந்தை மேற்கு பிரதேசச் செயலகத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதத்தில் இரு தடவைகள் வீட்டுத்திட்ட பயனாளிகள் பட்டியலில் குறித்த நபரது பெயர் இடம் பெற்று இறுதியில் வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை.

இனி வரும் திட்டத்தில் வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என்று பிரதேசச் செயலகத்தினால் அறிவுறுத்தப்பட்டது.

இறுதியாக வெளிவந்த தெரிவில் அவருடைய பெயர் வெளிவரவில்லை என்றும் தான் வீட்டுத்திட்டத்தில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்து முறைப்பாடு செய்துள்ளார்.

எனவே இவ்விடயம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (9)

# இனிய வாழ்வு இல்ல மாணவர்கள் போராட்டம்




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வள்ளிபுனம் இனியாவாழ்வு இல்ல பழைய மாணவாகள் இல்ல நிர்வாகத்தினரிடம் 10 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் இல்ல முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் செவிப்புலன்,கண்புலன் அற்ற மாணவர்களை கற்பிற்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள இனிய வாழ்வு இல்லம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்து இயங்கி வந்துள்ளது. இதில் கல்விகற்ற 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வெளியேறி பட்டதாரிகளாகவும் நிறுவனங்களிலும் தொழில் செய்து வருகின்றார்கள்.

இந்நிலையில் பழைய மாணவர்கள் பலர் தாம் நிர்வாகத்தால் புறக்கணிக்கணிக்கப்படுவதாகத் தெரிவித்து மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடைய கோரிக்கைகளுக்கு நிர்வாகத்தினர் இணக்கம் தெரிவித்ததையடுத்து பழைய மாணவர்கள் நேற்று முன்தினம் இரவு போராடத்தை நிறுத்திக் கொண்டனர். (9-281)

சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை
- அப்துல்கலாம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூட்டமைப்பு பக்கம் சார்ந்தால் சிங்கள மக்களும் பக்கம் சார்வர்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செல்லும் இடமெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன் செல்கின்றனர்.

இஃது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடும் கோபத்தை உண்டு பண்ணும் என்பது தெரிந்த உண்மை.

நாம் தமிழர்கள். எமக்கு இருக்கக்கூடிய பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பது தான் எங்களின் அதிமுக்கியமான பணி.

எனவே எங்கள் இலக்கை அடைவது தொடர்பிலேயே நாம் சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்தித்தால்; பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய இருவருடனும் நாம் இணைந்து சென்று எங்கள் இலக்கை அடைய வேண்டும்.

(இங்கு இணைந்து செல்லுதல் என்பது தமிழ் மக்களின் இலக்கை அடைவதற்கானது என்பதை மீள வலியுறுத்துவது அவசியம்.)

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சி அரசின் அங்கத்துவக் கட்சி போலவே நடந்து கொள்கின்றது.

இதைப்பார்க்கும்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை ஆகிய விடயங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருசனை கொள்வார் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

உண்மையில் தமிழ் மக்களின் ஆதரவு என்பது ஜனாதிபதி மைத்திரிக்காகவே இருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் போட்டியிட்டபோது, தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தனர்

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதில் ஒன்று, வன்னி யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்புகளுக்குக் காரணமாக இருந்தவர் மகிந்த ராஜபக்ஷ என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் அவரை எதிர்த்தனர்.

தவிர, மைத்திரிபால சிறிசேன முன்வைத்த தேர்தல் பிரசாரங்களும் மைத்திரிபால சிறிசேனவை ஆதரியுங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கையும் காரணமாயிற்று.

இக்காரணங்களின் அடிப்படையில் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க அவரே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால் பொதுத் தேர்தல் நடந்து முடிந்து தேசிய அரசு அமைந்தபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவக் கட்சி போல செயற்படலாயிற்று.

இங்குதான் தமிழ் அரசியல் தலைமையின் இலக்கின்மை தெரிகிறது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவுக் கட்சியாகச் செயற்படுவதென்பது கூட்டமைப்பினரிடம் தமிழ் இனம் பற்றிய எந்தச் சிந்தனையும் இருந்திருக்கவில்லை என்பதற்கான சாட்சியமாகும்.

ஆக, தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுக் கட்சியாகக் கூட்டமைப்பு இருக்குமாயின் அடுத்த தேர்தலில் சிங்கள மக்கள் மகிந்த ராஜபக்ஷ தரப்பையே ஆதரிப்பார்கள்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பக்கசார்பின்றி தங்கள் இலக்கோடு செயற்பட வேண்டும். அப்போதுதான் சிங்கள மக்களும் நடுநிலை நின்று சிந்திப்பார்கள்.

# இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ள இலங்கைக்கு 6 மில்லியன் அமெ.டொலர்

இலங்கையில் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மீண்டும் மீண்டும் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளக்கூடிய வல்லமையை காலநிலை மாற்றம் மற்றும் வாழ்வாதாரங்கள் பன்முகப்படுத்தல் மூலம் கட்டியெழுப்ப கொரியா 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட சமூகங்களின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் முயற்சியில் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOICA) கடந்த 19 ஆம் திகதி தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுடன் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டது. இதில் இலங்கையில் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மீண்டும் மீண்டும் ஏற்படக் கூடிய இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளக்கூடிய வல்லமையை காலநிலை மாற்றம் மற்றும் வாழ்வாதாரங்கள் பன்முகப்படுத்தல் மூலம் கட்டியெழுப்ப இலங்கை அரசுக்கு 2019 - 2020 ஆண்டுகளுக்காக 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாக வழங்கப்படவுள்ளது. இதற்காக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி மற்றும் இலங்கை அலுவலகத்திற்கான கொய்கா நாட்டுப் பணிப்பாளர் திருமதி. கவ்யூன் ஹவா ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தனது தொடக்கவுரையில், இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கிவருகின்ற கொய்கா நிறுவனத்திற்கு தனது நன்றிகளைத் தெரிவித்ததோடு இத் திட்டத்திற்கான முக்கியத்துவத்தை யும் வலியுறுத்தினார். இலங்கை அலுவலகத்திற்கான கொய்கா நாட்டுபணிப்பாளர் திருமதி. கவ் யூன்ஹவா தனது உரையில், இத்திட்டத்தின் ஊடாக அமைச்சிற்கும் மற்றும் கொய்காவிற்கும் இடையிலான இந்த ஒத்துழைப்புக் குறித்து கொய்கா மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

மேலும், பாதிக்கப்பட்ட சமூகங்களை மேம்படுத்துவதுநாட்டின் பொருளாதார வளர்சசிக்கு பெரும் பங்களிபபாகுமென அவர் தெரிவித்தார்.

இத்திட்ட அமுலாக்கத்தின் போது கொய்காவுடன் ஒத்துழைப்பை வழங்க முற்படும் உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் திருமதி. பிரெண்டா பார்டனும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

இத்திட்டமானது பாதிக்கப்பட்ட சமூகங்களான மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, மாத்தளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களின் வறட்சியான காலங்களில் சிறந்த முறையில் நீர் கிடைப்பதற்கும்,வீட்டு வருமானங்களை அதிகரிக்கச் செய்வதற்கும் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களை செயற்படுத்துவதுமாகும்.

இத் திட்டம் குறிப்பிடப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்களை புனரமைத்தல், விவசாயக் கிணறுகள், பண்ணைக்குளங்கள்போன்றவற்றை புனரமைத்து அறுவடை வசதிகளை ஏற்படுத்துவதனால் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் வருமானங்களை உயர்த்த உதவுவதாக இருக்கும். அததோடு மேலதிகமாக விவசாயிகளுக்கான தொழில் நுட்பப் பயிற்சிகளையும், சந்தைப் படுத்தலை விரிவுபடுத்துவதற்கும் இத்திட்டம் உதவுவதாகஅமைகின்றது. மேலும், நீர் முகாமைத்துவம் மற்றும் உள்ளூர் மட்டத்தில் முன்கூட்டிய எச்சரிக்கை செய்வதற்கானமுறையை நிறுவுவதற்குமான பங்களிப்பையும் அரசஊழியர்களுக்கான பயிற்சிகளையும் இத் திட்டம் மூலம் மேற்கொள்ள முடியும் என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ)

## தாதியர் தலைவர் கௌரவிப்பு மேல் அதிகாரிகளால் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெறவிருந்த வடமாகாணத்தின் சிறந்த தாதியர் தலைவரைக் கௌரவிக்கும் நிகழ்வை உடனடியாக இடைநிறுத்துமாறு மேல் அதிகாரிகளால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை தாதிய சமூகத்தினரால் (2019) ஆண்டிற்கான புளோரன்ஸ் நைற்றிங்கேள் சாமர்த்திய தாதியத்தலைவரை கௌரவிப்பதற்கான ஏற்பாடு நாளை திங்கட்கிழமை இடம்பெறவிருந்தது.

இந்தநிலையில் குறித்த வைத்தியசாலையின் தாதியர் உத்தியோகத்தர் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் கௌரவிப்பு நிகழ்வு மக்கள் சேவையிலுள்ள ஏனைய தாதிய உத்தியோகத்தர்களின் சேவை மனப்பாங்கை அளவுகோல் கொண்டு அளப்பதாகவும் இதனால் அவர்களின் சேவை மனோநிலையை பாதிப்பதாக தெரிவித்து குறித்த நிகழ்வை நிறுத்துமாறு ஒருபகுதித் தாதியர்கள் சங்கம் மேலதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்தது.

இக் கோரிக்கைக்கு அமைய குறித்த தாதியர் தலைவர் கௌரவிப்பு இடைநிறுத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரனை தொடர்பு கொண்ட போது குறித்த நிகழ்வை நடத்துவதற்கு முல்லைத்தீவு தாதியர் சங்கங்கள் உரிய அனுமதியைப் பெறாத நிலையில் குறித்த நிகழ்வைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு உத்தரவு வழங்கியதாகத் தெரிவித்தார்.(ம-3,10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில கொழும்புத்துறை வீதி, பழைய பூங்கா வீதி, குருசோ வீதி, அச்சுகூட வீதி, சுவாமியார் வீதி, வைடன்ஸ் லேன், துண்டி, கொழும்புத்துறை 1ம், 2ம், 3ம், 4ம் குறுக்குத் தெருக்கள், வளன் புரம், நெடுங்குளம், புங்கன் குளம் வீதி, இலந்தைக்குளம் வீதி, உதயபுரம், மணியம்தோட்டம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், மானுசந்தி, பாரதிதாசன் படிப்பகம், முத்துமாரியம்மன் கோவிலடி, நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், இலகடி, காந்தியூர், மந்திகை, உபயகதிர்காமம், வராத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை நகரம், பருத்தித்துறை இலங்கை போக்குவரத்து சபை, சாரையடி, கிராமக்கோடு, தம்பசிட்டி, கல்லூரி வீதி, வி.எம் வீதி, சாளம்பை, பருத்தித்துறை அரச வைத்தியசாலை, கற்கோவளம் ஜெயந்தா இன்டஸ்ரியல் பார்க் பிறைவெற் லிமிடட், வல்லிபுரம் தேசிய நீரவழங்கல் மற்றும் வடிகால் சபை, றூபின்ஸ் வைத்தியசாலை, சாரு & சகாலு பிறைவேற் லிமிடட், நெல்லண்டை வெளிச்சவீடு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

## நெடுந்தீவில் நான்கு இந்திய மீனவர்கள் கைது

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் நால்வர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீவகம், நெடுந்தீவு பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் குறித்த மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் இராமேஸ்வரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த 44 வயது முதல் 54 வயது வரையானவர்கள் என யாழ்ப்பாண நீரியல்வள திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

குறித்த நால்வரையும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ கவலையை ஒழியுங்கள். உடலுக்கு ஊறுவராதபடி காத்துக் கொள்ளுங்கள். குழந்தைப் பருவமும் இளமையும் மறையக் கூடியதே.

❖ இளைஞர் சோர்வுற்றுக் களைப்படைவர். வாலிபர் நிலைதடுமாறி வீழ்வர். ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர்.

❖ வாழ்வு அளிக்கும் நீரூற்றுகளுக்கு வழி நடத்திச் செல்லும் கடவுள், அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார்.

❖ தந்தையைக் கொடுமைப்படுத்தி, தாயைத் துரத்திவிடும் மகன், வெட்கக் கேட்டையும் இழிவையும் வருவித்துக் கொள்வான்.

❖ அடிமையை இளமைப் பருவம் முதல் இளக்காரம் காட்டி வளர்த்தால், அவர் பிற்காலத்தில் நன்றி கெட்டவராவார்.

❖ நீ இளவயதின் இச்சைகளை விட்டு ஓடிவிடு. தூய்மையான உள்ளத்தோடு ஆண்டவர் பெயரை அறிக்கையிட்டு வழிபடுவோருடன் நீதி, நம்பிக்கை, அன்பு, அமைதி ஆகியவற்றை நாடித் தேடு.

❖ நீங்கள் தர்மம் செய்யும் போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடித்துக் கொள்ளாதீர்கள்.

# பெரியவிளான் இளைஞர் கழகத்தை வென்று சம்பியனாகியது நவாலி வடக்கு இளைஞர் அணி



கடந்த 23 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக வருடாந்த விளையாட்டு போட்டி மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் உதைபந்தாட்ட இறுதி போட்டியில் நவாலி வடக்கு இளைஞர் கழகத்தை எதிர்த்து பெரியவிளான் இளைஞர் கழக அணி மோதியது போட்டியின் நேர முடிவில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பெற்றுக்கொள்ளவில்லை. தண்ட உதை மூலம் 4 -3 என்ற கோல் கணக்கில் நவாலி வடக்கு இளைஞர் கழகம் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. (க)

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடர் வெண்கலம் வென்றது மன்னார் மாவட்டம்



வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான பெண்களிற்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட அணி வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய மன்னார் மாவட்ட அணி 30:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது. (க-60)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.


உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# எவ்.எ. கிண்ண உதைபந்தாட்டம் அடுத்த சுற்றிற்கு தெரிவானது பாடும்மீன்



எவ்.எ. கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப்போட்டியில் பொற்பதி அணியை எதிர்கொண்டு பாடும்மீன் அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எந்த வித கோல்களையும் போடாமையால் வெற்றியை தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 4:3 என்ற கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது குருநகர் பாடும்மீன் அணி (ஜ-106)

# டோனி- கோலி சிறந்த வீரர்கள் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி புகழாரம்



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கோலி மற்றும் விக்கெட் கீப்பர் டோனி இருவரும் மிகச் சிறந்த ஆளுமைகள் என்று பயிற்சியாளர் ரவி சாஸ்திரி கருத்து தெரிவித்துள்ளார்.


இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை தொடரில் இந்திய அணி 6 போட்டிகளில் 5 வெற்றிகளை பெற்றுள்ளது. ஒரு போட்டி மழையால் இரத்தானதால் தோல்வியையே சந்திக்காமல் வீறுநடை போட்டு வருகிறது.

எனினும், மேற்கிந்திய தீவு மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு எதிரான போட்டிகளில் இந்திய அணியின் துடுப்பாட்டம் விமர்சனத்திற்குள்ளானது. குறிப்பாக, இந்தப் போட்டிகளில் டோனியின் ஆட்டம் குறித்து முன்னாள் ஜாம்பவான் வீரர்களான சச்சின், சேவாக் ஆகியோரே விமர்சனம் செய்திருந்தனர்.

இந்நிலையில் இந்திய அணியின் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி டுவிட ஒன்றை பதிவிட்டுள்ளார். அதில், 'டோனி மற்றும் கோலி ஆகிய இருவருமே மிகச் சிறந்த ஆளுமைகள். இவர்கள் இருவரும் மிகவும் வலிமையானவர்கள் மற்றும் சம்பியன் வீரர்கள்' எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஆட்டத்தை மாற்றுவது குறித்து டோனியிடம் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆலோசித்து வருவதாகவும், இந்திய அணியின் வீரர்களிடமும் அணியின் முன்னேற்றம் குறித்து அவர் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருவதாகவும் பந்துவீச்சு பயிற்சியாளர் பரத் அருண் தெரிவித்திருந்தார். (க)

# மத்திய வரிசை ஆட்டம் படுமோசம் தோல்வி குறித்து கருணாரத்ன காட்டம்



தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான தோல்வியினால் இலங்கை அணி உலகக் கோப்பை அரையிறுதிக்கு தகுதி பெற கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் இலங்கை அணியை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

தோல்விக்கு பின் பேட்டியளித்த இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தோல்விக்கு மத்திய வரிசை வீரர்களின் பொறுப்பற்ற துடுப்பாட்டமே காரணம்.

ஆரம்பத்தில் இலங்கை அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 67 ஓட்டங்களை எடுத்திருந்தது.

எனினும், மத்திய வரிசையில் விட்ட தவறினால் 96 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்தது.

இதற்கு முன் நடைபெற்ற பெரும்பாலான போட்டிகளிலும் இதே நிலைமையை காண முடிந்தது. குறிப்பாக அனுபவமிக்க வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமும் இதற்கான காரணமாக அமைந்திருந்தது என இலங்கை அணித்தலைவர் திமுத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும், எதிர்வரும் போட்டிகளில் இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் வங்கதேச அணிகள் தோல்வி அடைந்தால் இலங்கை அணி அரையிறுதி சுற்றுக்கு தகுதிபெற வாய்ப்புள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

## தென்பகுதிக்கு...

படையினர் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது காட்டில் பதுக்கி வைக்கப் பட்டிருந்த சுமார் 195 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

இச் சம்பவத்தில் உடுப்பிட்டிப் பகுதியை சேர்ந்த ஒருவர் ஈடுபட்டுள்ளதாக அரச புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்த நிலையில் அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கஞ்சா நெல்லியடி பொலிஸா ரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3,10,60)

## இலங்கைக்கு...

துள்ளன.

சட்டத்தை அமுல்படுத்தும் ஒத்துழைப்பிற் கான ஜகார்த்தா மத்திய நிலையம் ஏற்பாடு செய்திருந்த பயங்கரவாத ஒழிப்பு மாநாடு இந்தோனேசியாவில் நடைபெற்றது. இதன்போதே இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க இணங்கப்பட்டுள்ளது.

இதற்காக ஒத்துழைப்பு வழங்கும் நாடு களில் அமெரிக்கா, பிரித்தானியா, நெதர் லாந்து, இந்தோனேசியா, அவுஸ்ரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் உள்ளடங்கு கின்றன.

இந்த பயங்கரவாத ஒழிப்பு மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, பயங்கரவாத தடுப்பு பிரிவு, அரச புலனாய்வு பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக் களம் ஆகியவற்றின் சிரேஷ்ட பிரதிநிதிகள் சிலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, பயங்கரவாத தடுப்பு தொடர் பாக அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கும்போது இலங்கைக்கு முன்னுரிமை வழங்குவதற்கு வலய நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இதனடிப்படையில், பயங்கரவாத தடுப்பு, புலனாய்வுச் சேவை, சைஃபர் குற்றம், நிதி மோசடி உள்ளிட்டவை தொடர்பாக அதிகாரி களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது. (ம-3)

## மரண தண்டனை...

பேர் கொண்ட பட்டியலை சட்டமா அதிபர் திணைக்களம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த பட்டியலுக்கு அமைய எம்.கே.பிய திலக்க, எம்.தர்மகரன், எம்.எஸ்.எம்.மஸ் தார், ஜே.ஏ.பூட், பி.ஜே.போல்சிம், எஸ். புண்ணியமூர்த்தி, கே.எம்.சமிந்த, எஸ். கணேசன், டபிள்யு.விநாயகமூர்த்தி, எஸ்.ஏ. சுரேஷ்குமார், எம்.குமார், எஸ்.மசார், டபிள்யு.ரங்க சம்பத் பொன்சேகா, எஸ். முஹம்மது ஜான், பெருமாள் கணேசன், ஆர்.பி.சுனில் கருணாரத்ன, சையித் முகமது உவைஸ், எம்.எஸ்.எம்.மிஸ்வர், பி கமிலஸ்பிள்ளை, ஷாஹுல் ஹமீத் ஹஜ் முல் ஆகியோருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் நால்வரே முதற்கட்டமாக மரணதண்டனைக்கு உட்படுத்தப்படவுள்ள னர். (ம-3)

## அரசுக்கு எதிராக...

பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்கு தலுக்கு எதிராக முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அதற்குப் பரவாயில்லை. ஆனால், நாம் சொல்கின் றோம், கடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு முழு அரசாங்கமும் பொறுப்புக் கூற வேண் டும் என்று.

பிரதமர் உட்பட சம்பந்தப்பட்ட அமைச் சுக்களில் உள்ள சகலரும் இந்த தாக்குதல் சம்பவத்துக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி கருது கின்றது. இதனாலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முழு அரசாங்கத்திற்கும் எதிராகக் கொண்டு வந்தோம்.

அரசாங்கத்தை எதிர்க்கும் கூட்டு ஏன் இதற்கு ஆதரவு வழங்காமல் இருக்கின்றது என்பது ஆச்சரியமாகவுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## அரசு உரிய...

மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதி கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வட மாகாணத்தில் இனங்காணப்பட்ட காணி பிரச்சினைகள் தொடர்பாக மாகாண மட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற கலந்துரை யாடலில் மன்னார், யாழ்ப்பாணம், கிளி நொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களை சார்ந்த பிரதிநிதிகள், வட மாகா ணத்தில் காணப்படும் நில ஆக்கிரமிப்பு உட்பட காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொறுப்புமிக்க வர்கள் உரிய கவனத்தைச் செலுத்தி உட னடியான தீர்வுகளை பெற்றுத்தர வேண்டு மென்றும் கோரிக்கை முன்வைத்துள்ள னர்.

2019.04.21ம் திகதி இலங்கையில் நடந்த கொடூர சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளை மீள கையளிப்பதை மறந்து அரசாங்கமானது இராணுவத்தை பலப்படுத்தி வருகின்றது.

எனவே அரசாங்கம் சாக்குபோக்கு சொல்லிக்கொண்டு தனது பொறுப்பிலிருந்து விலகி நிற்க முடியாது.

எனவே பொறுப்புள்ள அரசாங்கம் என் றால் இது தொடர்பாக அதிக கவனத்தைச் செலுத்தி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நில உரிமையை உறுதி செய்வதற்கான சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வட பகுதியில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வினைப் பெற்றுத் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-101)

## பயங்கரவாத...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி நேற்று முன்தினம் தெரிவுக்குழுவின் அமர்வில் தெரிவித்தார்.

தெரிவுக் குழுவில் பாராளுமன்ற உறுப் பினர் ரிஷாத் பதியுதீன் சாட்சியமளித்தார்.

இவரது சாட்சியம் மற்றும் விசாரணை கள் நிறைவடைந்தபோது பிரதி சபாநாயகர் இதனை அறிவித்தார். குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து இதுதொடர்பாக கிடைத்த கடிதத்தின் பிரதி பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது டன் தெரிவுக் குழுவின் பிரதி இணைப்பென அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பாராளு மன்ற விசேட தெரிவுக் குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி மேலும் தெரிவித்தார். (ம-3)

## தமிழரசுக் கட்சி...

முன்னணி மாநாடு, வாலிப முன்னணி மாநாடு ஆகியன நேற்று நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றன.

இதன்போது நடந்த இலங்கை தமிழரசு கட்சியின் பொதுக்குழு தெரிவின்போதே, தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதி ராசா பொதுக்குழு தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அதையடுத்து, பொதுச் செயலாளர் தெரிவு தொடர்பான விடயத்தை தலைவர் சபையில் முன்வைத்தார். அப்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் செயலாளர் குலநாயகம், இலங்கை தமிழ ரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செய லாளர் கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரிய நேத்திரன் ஆகியோரது பெயர்கள் பொதுச் செயலாளர் பதவிக்காக பரிந்துரைக்கப்பட் டன. (ம-3)

## ஜனாதிபதியின்...

இந்நிலையில் இலங்கைக்கான நோர்வே தூதரகத்தினால் வெளியிடப்பட் டுள்ள அறிக்கையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, "இலங்கையில் 43 வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரண தண்ட னையை மீண்டும் நடைமுறைப்படுத்த தீர் மானித்துள்ளமையால் நோர்வே கவலைய டைகிறது.

டிசம்பர் 2018இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் மரண தண்டனையை நிறுத்தி வைக்கும் செயற்பாட்டிற்கு ஆதர வளித்த 120 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

இலங்கையில் மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதென்பது இலங்கையின் சர்வதேச மதிப்பையும் மனித உரிமைகள் செயற்பாடுகளையும் பாதிக்கும் செயலாகும்.

கொள்கை ரீதியில் அனைத்து வகை யான மரண தண்டனையையும் நோர்வே கடுமையாக எதிர்க்கின்றது. அனைத்து குடிமக்களினதும் மனித உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்வது அனைத்து நாடுகளினதும் கடமை என நோர்வே நம்பு கிறது.

இலங்கை அரசுடன் அதி உயர்ந்த மட்டத்தில் மரண தண்டனை தொடர்பான கவலையை நோர்வே தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கையை மீண்டும் மரண தண்டனையை அறிமுகம் செய்வதை கைவிடுமாறு நோர்வே கேட்டுக் கொள்கிறது" எனக் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## சர்வாதிகாரத்தை...

பதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் நிறைவேற்று அதிகாரத்தை கோரி பலவித கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி மனித உரிமைகள் காரியாலயத் தின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற சித்திரவதைகளுக்கு உள்ளான வர்களுக்கான சர்வதேச தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

அத்துடன், சுயாதீன நிறுவனங்களுக் காக தமக்கு தேவையானவர்களை நியமிக்க முடியாது என்றும், பாராளுமன்றத்தை கலைக்க முடியாது என்றும் கூறும் ஜனாதி பதி, முன்னாள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் பாராளுமன்றத்தை பணயம் வைத்து செயற்பட்ட விதத்தில் தனக்கும் செயற்பட முடியாதுள்ளது என்பது குறித்து கவலையடைந்திருப்பதை சுட்டிக் காட்டுவதற்கு முயற்சிக்கிறார் என்று சட்டத் தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

இதனூடாக பொதுமக்கள் கோரியிருந்த சுயாதீன ஆட்சி முறைக்கு பதிலாக மீண்டும் சர்வாதிகார ஜனாதிபதி ஆட்சியை ஸ்தாபிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சிப் பதாக அவர் குறிப்பிட்டார்.

இன்றளவில் இலங்கை மக்களின் மனிதவுரிமைகள் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாகவே பாதுகாக்கப்பட்டுள் ளது. அதன் முழு கட்டுப்பாடும் சுயாதீன ஆணைக்குழுவின் வசம் உள்ளது.

பொலிஸ் துறையை சுயாதீனமாக செயற்படுவதற்கும் இந்த 19ஆவது திருத்தமே வழிவகுத்துள்ளது. அதனால், அமைச்சர் களின் மனைவியையோ, மகளையோ சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கும் பொலிஸாருக்கு இன்று சுயாதீன அதிகாரம் உள்ளது. அதற்கு உதாரணமாக ஜனாதிபதி செயலகத்தின் செயற்குழு பிரதானியை கைது செய்வதற்கு அண்மையில் வாய்ப்பு கிடைத்தது.

அதேபோன்று கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற அரசியல் சதித்திட்டத்தை முறியடிக்கும் வகையில் நீதிமன்றத்தினால் சுயாதீன தீர்ப்பை வழங்க முடியுமாக இருந்தது. எனினும் துரதிர்ஷ்ட வசமாக இந்தப் போராட்டத்தை மறுபுறம் புரட்டுவதற்கு நாட்டின் பிரதானியான ஜனாதிபதி செயற்பட்டமை வருந்தத்தக்கது.

தனக்கு ஏறத்தாழ 60 இலட்சம் பேர் வாக்களித்தார்கள் என்று ஜனாதிபதி கூறுகி றார். எனினும் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வருமாறு வலியுறுத்தித்தான் பொதுமக்கள் வாக்களித்தார்கள்.

அதிலுள்ள விதிகளை நடைமுறைப் படுத்துமாறும், சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பது அவசியம் என்று வலியுறுத்தியே நாட்டு மக்கள் வாக்களித்தார்கள் என்று சட் டத்தரணி லால் விஜேநாயக்க தனதுரையில் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்து, அவற்றை பாராளுமன்றத்திடம் கையளிக்கு மாறு பொதுமக்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருந்தார்கள். எனினும் துர திர்ஷ்டவசமாக அந்த செயற்பாடுகள் எதுவும் சீராக இடம்பெறவில்லை என்று அவர் வருத்தம் வெளியிட்டார்.

இந்தத் தருணத்தில் ஜனாதிபதி மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவது சரியானதல்ல என்பதுடன் பொதுமக்களை திசை திருப்பும் விதமான செயலாகவே இது பார்க்கப்படு கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ம-3)

## யாழ்.போதனா...

திலிருந்து வீசப்பட்ட மலக்கழிவே தாதியர் விடுதிப் பகுதியில் வீசப்பட்டுள்ளதாக யாழ போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனானந்தா நேற்று முன் தினம் இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள் ளார்.

கடந்த 26 ஆம் திகதி மதியம் 2 மணிக்கு விமானம் மூலம் ஆகாயத்தில் இருந்து விசிறப்பட்ட மலக்கழிவுகள் யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதியர் விடுதிப் பகுதியில் விழுந்துள்ளது.

இதன்படி யாழ்.மாவட்ட அரச அதிபர் விமானப்போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சபையினூடாக குறித்த விடயத்தை தெரியப் படுத்தும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.

இதேவேளை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த ஆகாய விமானம் ஒன்று கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் யாழ் வேம்படி பாடசாலை மைதானத்தில் இவ் வாறான கழிவுகளை விசிறியமை குறிப்பிடத் தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

கொவிசெத
திகதி 2019.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 2163
ஆங்கில எழுத்து Z
வெல்லப்பட்ட இலக்கங்கள் 05 29 40 64

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29-06-2019
சீட்டிழுப்பு இலக்கம் 952
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 7 9 5 4 8 9

சுபிரி வாசனா
திகதி 2019/06/29
சீட்டிழுப்பு இலக்கம் 1438
எழுத்து 22
வெற்றி இலக்கம் 04 36 39 66 50 05

சேவன
திகதி 29/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 0196
ஆங்கில எழுத்து F
வெல்லப்பட்ட இலக்கங்கள் 16 28 33 38

## துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
**0777 554 528**

(9192)

## Northern Technical Institute

107. 2/1 YMCA Building, Kandy Road, Jaffna
July - August 2019 - 02 Months,
Week day / Weekend classes
**Spoken / Business English,**
**Ms Office- ICT,** *equivalent to NVQ level 3*
**Up to 100% scholarships Registration Rs;1000/=**
**NTI Main center (1) Regional Centers:** Nunavil (2), Paandaveddai (3), Moolai (4), Urumbirai (5), Navaly YMCA (6) **For admission** *contact:*
**(M) - 077 650 5580, 0758507463, 076 852 5406**

(8418)

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றிற்கு கிளை உதவியாளர் (ஆண்) தேவை.

தகைமைகள் :
1. A/L சித்தி
2. நகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை
3. வயது எல்லை (18 - 30)

**தொடர்புகளுக்கு : 076 690 8993, 076 690 8961**

(8416)

## கணனி திருத்தம்

**IPhone, IPad, ICloud Unlock**

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம். கணனிகள் விற்றல், வாங்குதல். பழைய கணனிகளும் வாங்கப்படும்

தொடர்புகளுக்கு :
**ALM Computer System - 077 243 8537**

(8412)

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
**UK - 525.00, Germany - 675.00, France - 830.00**
நிபந்தனைகள் எதுவும் இல்லை

**அருள்** இல.1, பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
**076 443 1576**

(C-6615)

## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
### ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

இருபாலை சந்திக்கு அண்மையில் (கிழக்கு வீதி)

திருமணத்தடை, புத்திரபாக்கியம் / புத்திரபாக்கியதடை, தொழில் வியா பாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக் குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் - வவுனியா)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:-
**076 328 7119**

(C-6798)

## Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்ப்பாணம்)

**A/L 2021**

**தொழில்நுட்பப் பிரிவு**

*மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா...*

**கண்டி** **நுவரெலியா**

(ஆராய்ச்சி நிலையம், பண்ணை, Tissue Culture Lab பார்வையிடப்படும்.)

**தொடர்புகளுக்கு : 077 017 5346, 077 170 8549**

## சிங்கள வகுப்புகள்

அடிப்படை வகுப்பு தொடக்கம் க.பொ.த சாதாரணதர இரண்டாம் மொழி சிங்கள பாட வகுப்புகள் நடைபெறும்.
தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகளும் நடைபெறவுள்ளன
அரச ஊழியர்களுக்கான பரீட்சை வகுப்புகளும் நடைபெறும்.
நிலையம் - யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம்

தொடர்புகளுக்கு
**077 086 4649**

(C-6812)

## விற்பனைக்கு

பாவித்த இரண்டு இரும்பு சுருக்குக் கதவுகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு : 077 129 8201**

(8404)

## உடன் காணி தேவை

A9 வீதியில் மிருசுவிலில் இருந்து ஓமந்தைப் பகுதிக்குள் உறுதிக் காணி தேவை.

**தொடர்புகளுக்கு : 077 129 8201**

(8405)

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் கடை ஒன்றிற்கு பொறுப்பு வாய்ந்த சிட்டை எழுதுநர் தேவை (சனி - ஞாயிறு தினங்களில் விடுமுறை வழங்கப்படும்.)

**தொடர்புகளுக்கு :**
**076 611 1244**

(8422)

## வேலையாள் தேவை

வாகன உதிரிப்பாக ஸ்தாபனத்துக்கு கணனி அறிவும், உதிரிப்பாக விற்பனைதிறன் கொண்டவரும், Accounting அறிவுள்ளவர் தேவைப்படுகின்றார்.

நேரம்: காலை 9.00 - மாலை 6.00 மணி வரை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு : 021 222 4605**
**021 222 6887**
**076 717 3234**

(8423)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி திண்ணை கோட்டல் அருகாமையில் பல்கலைக் கழக மாணவர்களுக்கு தளபாடமிடப்பட்ட அறைகள் வாடகைக்கு உண்டு. **தொடர்புகளுக்கு : 077 515 1352**

(9421)

## உடனடி வேலைவாய்ப்புக்கான அரிய சந்தர்ப்பம்

எமது EBC நிறுவனத்தில் புதிய கிளைகளுக்கான முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் புதிதாக இணைக்கப்பட உள்ளனர். O/L, A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ஏனையவர்களுக்கு அடிப்படை பயிற்சியுடன் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும். புதிய கிளைகள் ஆரம்பிக்கப்பட உள்ள இடங்கள்,

- யாழ்ப்பாணம்
- வவுனியா (வவுனியா செட்டிகுளம்)
- மன்னார் மாவட்டம் (முல்லைத்தீவு, மாங்குளம்)
- திருகோணமலை மாவட்டம்
- அம்பாறை மாவட்டம்
- கண்டி மாவட்டம்

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் EPF, ETF மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வசதிகள், மருத்துவ வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்க விரும்பியவர்கள் உங்களுடைய முழுப்பெயர், தே.அ.அ. இலக்கத்தை 0766564030 இவ் இலக்கத்திற்கு SMS செய்யவும். **தொடர்புகளுக்கு : 0770064030, 0217223317**

(9413)

## காணி தேவை

விலைக்கு அல்லது குத்தகைக்கு இருபோக நெற் செய்கைக்கு 30 - 50 ஏக்கர் காணி தேவை.

### பண்ணை அமைப்பதற்கு

மேட்டு நிலக் காணி தேவை.
15 - 30 ஏக்கர் வரையான காணி தேவை.

குறிப்பு : யாழ்ப்பாணம்
கிளிநொச்சி
முல்லைத்தீவு.
ஆகிய மாவட்டங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்**
**076 684 2555, 076 965 0436**

(9417)

## வீடு வாடகைக்கு

சுன்னாகம் பெரிய மதவடியில் 100 M தொலைவில் உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள 4 பரப்புக் காணியில் 3 Rooms, Dinning Hall, Kitchen, Living Room, Visiters Hall, Verandah, Attached Bathroom, Servant Toilet and Bathroom, Vehicle Garage உடன் தற்சமயம் பயன்தரும் தென்னை, பலா, மா மரங்கள் அடங்கிய சோலையுடன் 4 புறமும் சுற்றுமதிலுடன் வசதியான வீடு வாடகைக்குண்டு.

(C-9411)

**077 611 9313, 077 605 1971**

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

| | |
|---|---|
| UK - 550 | /=Kg |
| கனடா - 900 | /=Kg |
| ஜேர்மனி - 700 | /=Kg |
| நெதர்லாந்து - 700 | /=Kg |

(C-6532)

● மானிப்பாய் 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

## பணிநிலை வெற்றிடம்

எமது நிறுவனத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தேர்வாளர்களின் அனுபவம், ஆற்றலுக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

- **பைண்டிங் (திருமண அழைப்பிதழ்)**
- **காகிதாதி ஒட்டுதல் (Envelop)**

(அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புவோர்)

சுயவிபரக்கோவையுடன் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (02-07-2019) 9.30 தொடக்கம் 12.00 மணிக்குள் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

(C-6822)

**PRINT Master**
கே.கே.எஸ். வீதி, குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில்
T.P. : 021-205 3322 Mobile : 077-6622981

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி.

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

(C-6784)

## CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT



July 2019 க்கான புதிய பிரிவு ஆரம்பம்

G.C.E O/L உடன்

TUITION FEE 30,000/- ONLY

CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0771041923 | 0213146171

(C-6789)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 223

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 30.06.2019 தொலைபேசி : 021 222 3378



# நாங்கள்தான் அரசாங்கம் திருமலையில் எடுப்பு







உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** அதுசரி, எங்கட சம்பந்தர் ஐயா எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குரிய இரண்டு வாகனங்களையும் வாசஸ்தலத்தையும் தன்னோடு வைத்திருக்கிறார். அதால வாகனம் இல்லாமல் தான் கஷ்டப்படுகிறதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில குற்றம்சாட்டியிருக்கிறார்.

**கங்காணி:** என்ர கடவுளே! இனி மகிந்த ராஜபக்ஷ தன்னைச் சந்திக்கிற வெளிநாட்டுத் தூதுவர்களிட்ட எல்லாம் சம்பந்தர் வாகனத்தைத் தராமல் தன்னோட வைத்திருக்கிறார் எண்டு சொல்லப் போறாரே.

**மூப்பர்:** அது மட்டுமல்ல, இனி தமிழ் மக்களின்ர உரிமை தொடர்பில சம்பந்தர் ஐயா ஏதும் கதைத்தால் அதைக் கேட்பவர்கள் அவற்ற நேர்மையீனத்தைத் தானே முதலில நினைப்பினம். இதால தமிழர்களின்ர உரிமை விடயமும் நலினப்படும் பாருங்கோ.

**மூப்பர்:** சம்பந்தர் ஐயாவுக்குத் தான் வயது போட்டுது. கூட்டமைப்பில இருக்கிற ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாவது சம்பந்தருக்கு ஆலோசனை சொல்லக் கூடாதோ.

**பண்டிதர்:** சம்பந்தர் ஐயாவுக்கு ஆலோசனை கூறுகிறதோ. அண்மையில யாழ்ப்பாணத்தில இலங்கைத் தமிழரசுக் கட்சியின்ர இளைஞர் சந்திப்பொன்று நடந்ததல்லோ. அந்தச் சந்திப்பில தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை இளைஞர்கள் கண்டபாட்டில ஏசினவியளாம்.

**சாத்திரியார்:** அட, சங்கதி அப்பிடியோ.

**பண்டிதர்:** நேர்மைத்தனம் இல்லை எண்டால் எதிர்காலம் கஷ்டம் தான்.

**விதானையார்:** அதுசரி, தொண்டர் ஆசிரியர்களுக்கு திருகோணமலையில வைத்து நிரந்தர நியமனம் வழங்கிய போது கூட்டமைப்பு எம்.பிக்கள் கனபேர் அந்த நிகழ்வில கலந்து கொண்டவியள் அல்லோ. தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்திற்கும் தமிழரசுக் கட்சி எம்.பிக்களுக்கும் ஏதும் தொடர்பு இருக்குதோ.

**வாத்தியார்:** தொண்டராசிரியர்கள் போராட்டம் நடத்தி தங்கட பதவியை நிரந்தரமாக்கிய பின்பு அதில உரிமை கொண்டாடுறது தானே எங்கட ஆட்களின்ர வேலை.

**சிறாப்பர்:** அது மட்டுமல்ல பாருங்கோ. அபிவிருத்தி என்ற போர்வையில நாங்கள் எங்கட உரிமையை ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டம் எண்டு அந்த நிகழ்வில வைத்து சம்பந்தர் ஐயா சொன்னவராம். அதிலும் பிரதமர் ரணிலுக்கு முன்பாகவே சொல்லியிருக்கிறார் எண்டு சிலர் புளுகுகினம்.

**பண்டிதர்:** என்ன எங்கட உரிமையை விட்டுக் கொடுக்கமாட்டம் எண்டு பிரதமர் ரணிலுக்கு முன்பாக சம்பந்தர் சொன்னவராமோ? அப்ப இவ்வளவு காலத்திற்குப் பிறகு இப்ப தானோ சம்பந்தர் ஐயா உரிமை பற்றி பிரதமர் ரணிலுக்கு முன்பாகச் சொல்லியிருக்கிறார். (பண்டிதர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது).

**மூப்பர்:** அபிவிருத்தி என்ற விடயம் தேவையாயினும் அதற்கு முதலில தமிழ் மக்களின்ர உரிமை சார் விடயம் தான் முக்கியம் எண்டு எங்கட நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா சொன்னவர். அவர் அப்படிக் கூறியபோது சிச்சி அபிவிருத்தி தான் உடன் தேவை எண்டு சொன்ன தமிழரசுக் கட்சி இப்ப, உரிமை பற்றிப் பேசத் தலைப்பட்டிருக்கினம்.

**கங்காணி:** அப்ப இந்த வருடம் இரண்டு மூன்று தேர்தல் நடக்கும் போல.

**சிறாப்பர்:** அதெண்டால் உண்மை தான். தேர்தல் காலங்களில எங்கட அரசியல்வாதிகள் தங்களை மாற்றிக் கொண்டு தமிழ் மக்களுக்காக உயிரையும் கொடுக்கத் தயார் என்பது போலப் பேசுவினம்.

**வாத்தியார்:** நீங்கள் இப்படிச் சொல்லுறியள். முப்பது வருடப் போராட்டம், பல்லாயிரக்கணக்கான போராளிகளின் உயிர்த்தியாகம், இதுக்குக் கிடைத்தது குச்சொழுங்கைகளுக்குக் கருங்கல்லும் தாரும் சேர்ந்த றோட்டு. இதைப் பெற்றுத் தந்த பெருமக்கள் எங்கட பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்டு தானே எங்கட சனங்கள் நினைப்பினம்.

**விதானையார்:** எத்தனையோ தியாகங்கள், உயிரிழப்புகள், காணாமல் போனவர்கள், சிறைகளில வதைபடும் தமிழ் அரசியல் கைதிகள், சொந்த இடங்களைப் படையினர் ஆக்கிரமித்துள்ள அநியாயங்கள் எண்ட துன்பப்பட்டியலை யாரு நினைக்கப் போகினம். தார் போட்ட ஒழுங்கையோட எங்கட சனங்கள் எல்லாவற்றையும் மறந்து போய் விடுவினம்.

**பண்டிதர்:** விதானையார் நீங்கள் அப்படி ஒருக்காலும் நினைக்காதீங்க. எங்கட மக்கள் கம்பரெலியத் திட்டத்தோட தங்கட இனஉணர்வை இழக்கிறவர்கள் அல்ல.

குச்சொழுங்கைக்குத் தார் போடுகிற கடமை அரசாங்கத்திற்குரியது. தமிழ் மக்களின்ர பிரச்சினையை றோட்டுப் போடுகிறதோட மழுங்கடிக்கலாமெண்டால் எங்கட தியாகம், எங்கட அர்ப்பணிப்பு எல்லாம் அர்த்தமற்றதாகப் போகும்.

என்னைப் பொறுத்தவரை, எங்கட மக்கள் ஒருக்காலும் எங்கட பிள்ளையள் செய்த தியாகத்தையும் எங்கட போராட்டத்தைத் தோற்கடிக்க சிங்களப் பேரினவாதம் எங்கட உறவுகளைக் குழறக் குழறக் கொலை செய்ததையும் ஒருக்காலும் மறக்க மாட்டினம்.


உந்த தமிழ் அரசியல்வாதிகள் கோடிக்கு விலைபோவினம். ஆனால் எத்தனையோ மாவீரர்களின் பெற்றோர்; வன்னி யுத்தத்தில் உறவுகளை இழந்த குடும்பங்கள் இன்னமும் தங்கள் உறவுகளை நினைந்து கண்ணீர் வடிக்கினம். இந்தக் குச்சொழுங்கைத் தார் றோட்டு எங்கட தியாகத்திற்குக் கிட்ட வருமோ.

குச்சொழுங்கைக்குத் தார் போடுகிறவையள் அதைச் செய்யட்டும். எந்தவித சம்பந்தமும் இல்லாமல் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் அவர்கள் பங்கு பற்றட்டும். எங்கட மக்கள் உண்மை எது என்பதை நிச்சயம் தெரிந்து வைத்திருக்கினம். உரிய நேரத்தில உரியவாறு பதில் கொடுப்பினம்.

**சாத்திரியார்:** அதுசரி மன்னார் திருக்கேதீச்சரத்தில வளைவு கட்டுறதுக்கு அனுமதி வழங்கிய மன்னார் பிரதேச சபை ஏனாம் அதை திரும்ப இரத்துச் செய்தது.

**வாத்தியார்:** விடுதலைப் புலிகள் இருக்கிற காலத்தில அவர்களோடு சேர்ந்து நிண்டினம். பிறகு இராணுவத்தின்ர விருந்தில கலந்து கொண்டினம். இப்படியே ஒரு தரப்பு சனங்களையும் கடவுளையும் ஏமாற்றுகினம். இப்ப மன்னாரில பொலிஸ், பிரதேச சபை, படையினர் என எல்லாரையும் கட்டுப்படுத்துகிற சக்தியாக அந்தத் தரப்பு இருக்குதெண்டால் அதற்குப் பின்னணியில என்ன எல்லாம் இருக்கும் என்பதை ஊகிக்கிறதில கஷ்டம் இருக்காது தானே.

இப்படி வாத்தியார் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.




## பிரதமருக்கு முன்னாலேயே சம்பந்தர் சொல்லிப் போட்டாராம்

ஆதித்தன்



# சிவபூமியில் சிவசேனை வலிமைபெற வேண்டும்



உலகில் எல்லா நாடுகளிடமும் ஆயுதங்கள் இருப்பதனால்தான் நாடுகளிடையே சண்டையில்லாமல் இருக்கிறது என பிரிட்டிஷ் பிரதமராக இருந்த மார்க்கிரட் தட்சர் கூறியிருந்தார்.

அவரின் அந்தக் கூற்று மிகவும் ஆழ்ந்த பொருள் உடையது. சமபலம் பெற்றிருக்கும் போதுதான் சமாதானம் என்பது பற்றி உணரப்படுகிறது என்பதே உண்மை. இந்த உண்மையைப் பல உதாரணங்கள் மூலம் காட்ட முடியும்.

சமபலம் என்பதில் குறைவு ஏற்படுகின்ற போது வலியவர் எளியவரை அடக்குமுறைபடுவர் என்பதே நிதர்சனமானது. இந்த நிதர்சனத்தை நம் நரட்டில் இந்து சமயம் யதார்த்தபூர்வமாக அனுபவித்து வருகிறது.

சிவபூமி என்று போற்றப்பட்ட இலங்கையை சிவபக்தனான இராவணேஸ்வரன் ஆட்சி செய் தான் என்பதும் அவனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவத்தலமே திருக்கோணேச்சரம் என்பதும் வரலாறு நமக்கு உணர்த்தி நிற்கும் பாடம்.

ஆனால் இன்றைய சமகால நிலைமை இலங்கையில் சைவசமயம் நின்று நிலைக்குமா? தப்பிப் பிழைக்குமா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்நியராட்சியில் சிவாலயங்கள் அழிக்கப்பட்டன. நல்லூர் முருகனின் ஆதிக்கோயில் தேவாலயமாக மாற்றப்பட்டது. அதனோடு சேர்ந்த நிலபுலங்கள் தேவாலயத்தின் ஆதனங்களாக்கப்பட்டன.

இன்றுவரை அவற்றை சைவ சமயத்தவர்களால் மீட்க முடியவில்லை. எல்லாச் சமயங்களும் வாழட்டும் என்ற உயரிய எண்ணத்தில் விட்டுவிட, இப்போது அதுவே சைவசமயத்தவர்களுக்குத் தீவினையாயிற்று.

தற்போது இலங்கையில் சைவசமயத்திற்குச் சமாதி கட்டுவதில் பிற சமயங்கள் மும்முரம் காட்டிவருகின்றன. அதனை எதிர்த்தால் மதக் கலவரங்களை ஏற்படுத்தி சைவ ஆலயங்களை உடைத்தழிக்கவும் சைவ சமயத்தவர்களை வெட்டிச் சரிக்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கலாமோ என்று ஊகிக்குமளவிற்கு நிலைமை மோசமாகி உள்ளது.



அதிலும் குறிப்பாக, இந்த அக்கிரமம் மன்னாரில் ஆரம்பிக்கப் பட்டு விட்டது. மன்னாரில் இருக்கக்கூடிய கத்தோலிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு உடந்தையோ என்று நினைக்குமளவிற்கு அங்குள்ள கத்தோலிக்க மதகுருமார் சிலர் (தயவுசெய்து இச்சொற்றொடர் எல்லோரையும் குறிப்பிடாது என்பதைக் கருத்திற் கொள்க) சைவசமயத்தை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இந்த நாட்டின் ஆதிச்சமயமாகிய சைவசமயத்தையும் மன்னாரில் இருக்கக்கூடிய பாடல்பெற்ற திருக்கேதீச்சரம் ஆலயத்தையும் இலக்கு வைத்து கத்தோலிக்க மதகுருமார் சிலர் முன்னெடுக்கும் செயற்பாடுகள் மிகவும் வேதனை தருவதாகும்.

அதிலும் ஒரு பெரும் பழைமை வாய்ந்த சிவத்தலத்திற்கென ஒரு நுழைவாயில் வளைவைக் கூட அமைக்கமுடியவில்லை என்றால், மன்னாரின் நிலைமை எப்படியாகும் என்பதை ஒவ்வொருவரும் நினைத்தாக வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக தமிழை, தமிழினத்தை அழிக்க வேண்டுமாயின் சைவசமயத்தை அழிப்பதே அதற்கான ஒரேவழி என்பதைத் தமிழினத்திற்கு எதிரான சக்திகளும் மதமாற்ற பிரகிருதிகளும் தீர்மானித்துவிட்டனர்.

ஆம், தமிழ் பக்திமொழி என்றழைக்கப்படுவது- பக்தி என்பதன் பொருள் தமிழ் தெய்வீகத் தன்மை வாய்ந்தது என்பதை மட்டும் எடுத்துக்கூறவில்லை. மாறாக தமிழ்மொழியின் உயிர் என்பது தேவாரத் திருமுறைகளிலும் பிரபந்தங்களிலும் உள்ளடங்கியுள்ளது.

எனவே தமிழை அழிப்பதாக இருந்தால், அதற்கான ஒரேவழி சைவசமயத்தை இல்லாது செய்வது தான். அதற்கான திட்டங்கள் இலங்கைத் தீவில் ஆரம்பித்துவிட்டன. ஆனால் இதை ஆரம்பித்தவர்கள் பௌத்த சிங்களவர்கள் அல்ல என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

அப்படியானால் இந்தத் திட்டத்தின்தோற்றுவாய் எங்குள்ளதென நீங்கள் யாரேனும் கேட்கலாம். அவ்வாறானதொரு கேள்வி எழுந்தால் அதற்கான பதில் வெளிநாடுகள் என்பதாகச் சுட்டுவிரல் காட்டிக்கொள்ளும்.

ஆம், வெளிநாட்டிலுள்ள மதமாற்ற சபைகள் ஏகப்பட்ட சலுகைகளை வழங்கி ஈழத்தில் ஆட்களை நியமித்து சைவசமயத்தவர்களை மதமாற்றம் செய்கின்ற பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்த முயற்சியில் கணிசமான வெற்றியும் கிடைத்துள்ளது.

இதுதவிர, சைவசமயத்திற்கு எதிரான செயற்பாடுகளையும் முன்னெடுத்து சைவ அடையாளங்களை இல்லாது செய்வதிலும் ஒரு தரப்பு ஈடுபட்டுள்ளது. இவற்றுக்கான ஏகப்பட்ட நிதிகள் கைமாறப்படுகின்றன என்ற உண்மைகளுக்கு அப்பால், இலங்கைத் தீவில் சைவ சமயத்தை அழிப்பது, அதனோடு தமிழை ஒழிப்பது, சமயப்பாகுபாடுகளை முன்னெடுத்து தமிழ் மக்களிடையே இருக்கக்கூடிய இன ஒற்றுமையை வேரறுப்பது என்ற அக்கிரமம் தலைதூக்கி விட்டது.

இந்த அக்கிரமத்தின் வித்திடல் மன்னார் மண்ணில் நடந்துள்ளது. இந்த அக்கிரமத்தை அடியோடு வெட்டி அழித்து, சிவபூமியாகிய இலங்கையில் சைவசமயத்தைப் பாதுகாப்பதாக இருந்தால், சிவசேனை என்ற அமைப்பை வலிமைப்படுத்துவது மிகமிக அவசியமாகும்.

தலைமைப்பீடம் என்று எதுவுமில்லாத சைவசமயம் எல்லா மதங்களையும் போற்றுகிறது. இந்த நல்ல குணமே சைவத்தின் பலவீனமாகிவிடுகிறது என்பதை சைவசமயத்தவர்கள் முதலில் உணர்ந்தாக வேண்டும்.

ஆக, இலங்கையில் சிவசேனை என்ற அமைப்பில் சைவ இளைஞர்கள் அங்கம் பெறுவதும் அதை வலிமைப்படுத்துவதும் இலங்கை சிவபூமி. இங்கு இந்து சமயமே ஆதிச்சமயம் என்பதை நிரூபிப்பதும் அவசியமாகிறது.

இதைவிடுத்து பிற மதகுருமார் சிவாலய வளைவை தள்ளிவிழுத்தி, சிவ சின்னங்களை தங்கள் சப்பாத்துக் கால்களால் உழைக்கி வெறியாட்டம் ஆட, அதனை சைவ சமயத்தவர்கள் வெறுமனே நின்று பார்ப்பார்கள் என்றால், அதை எப்படிச் சொல்வதென்பதை இவ்விடத்தில் தவிர்த்துக் கொள்கிறோம்.

எனவே, சைவத்திற்கும் தமிழுக்கும் மேன்மைப்பணி செய்துவரும் பெரியார் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள் சிவசேனை அமைப்பை இலங்கையில் விஸ்தரிக்க வேண்டும். இதனோடு இந்தியாவின் உறவும் பலமும் எங்களுக்குக் கிடைப்பதற்கான பெருவாய்ப்பு ஏற்படும். இந்தவாய்ப்பு இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் தமிழர் தரப்பிற்குச் சாதகமாக அமையலாம்.

எதுவாயினும் சிவசேனை அல்லது அதற்கு ஈடான ஒருபெரும் அமைப்பை ஈழத்து சைவத்தமிழ் மக்கள் உருவாக்கத் தவறுவார்களாயின் இன்னும் பத்துப் பதினைந்து வருடங்களில் சைவசமயம் தன் இருப்பை இழந்து போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

உருத்திரதாண்டவன்

# மனிதனாக வாழ்வோம்!

மனிதனுடைய மனமானது ஒரு விநோதமான விந்தையான களஞ்சியம். நம் உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு சத்தான உணவுகள் தேவைப்படுகின்றன. அதேபோல் நம் மனம் வளமாக இருப்பதற்கு, தூய்மை அடைவதற்கு நற்சிந்தனைகள் அதிகமாக வேண்டும். தன்னை அறியும் அறிவைப்பற்றி திருமூலர் பாடியிருக்கிறார்.

"தன்னை அறிந்திழல் தனக்கொடு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அர்ச்சிக்கத்தான் இருந்தானே"

எங்கே நாம் வழி தவறிப்போனோம் என்று யோசித்து வழியைத் தேடுவதற்கு பதிலாக நாம் எங்கிருந்து வந்தோம் என்று பின்னோக்கிப் பார்த்துச் சிந்திக்க வேண்டும்.

இறைவன் மனிதனுக்கு எதையும் நேரில் வந்து கொடுப்பதில்லை. பிறர் மூலமாகத் தான் கொடுக்கிறான். ஏழைகளுக்கு, ஊனமுற்றவர்களுக்கு, முதியோர்களுக்கு நாம்



உதவுவது தான் இறைவனுக்குச் செலுத்தும் நன்றியாகும்.

மறைந்தவர்களுக்கே நன்றி செலுத்தும் பண்பாட்டைப் போற்றும் நம் சமுதாயம் உயிருடன் இருப்பவர்களுக்கு உதவுவது தானே கடமை.

அறிவுரைகள் யாரிடமிருந்தும் நமக்கு கிடைக்கலாம். ஆனால் சாதனை புரிந்தவர்கள் அறிவுரையே விலை மதிப்பற்றவை. மனிதன் சொத்தையோ பொருளையோ இழக்கும் போது தான் அதன் மதிப்பை உணர்கிறான். வாழ்க்கையில் சோதனைகள், பிரச்சினைகள், சவால்கள் ஏற்படும் போது தான் புதிய கோணங்கள் தென்படுகின்றன. புதிய அர்த்தங்கள், சக்திகள், வாய்ப்புக்கள் தோன்றுகின்றன. எந்த அளவிற்கு உயர் சிந்தனைகள், நம் உள்ளத்தில் ஏற்படுகிறதோ அந்த அளவிற்கு வாழ்க்கையில் வெற்றி ஏற்படும். சாதனை படைக்க முடியும். மனதில் தெளிவும் செயலில் உறுதியும் கலங்காத சிந்தனையும் கனிவான போக்கும் தான் ஒரு நல்ல மனிதனுக்கு அடையாளங்கள்.

நமக்கு ஆயுளையும் ஆரோக்கியத்தையும் புத்தியையும் இறைவன் கொடுத்திருப்பது நாம் சோம்பேறிகளாக இருந்து கொண்டு வாழ்க்கையை பாழாக்க அல்ல. நெருப்பினால் உணவு சமைக்கலாம். வீட்டையும் எரிக்கலாம். கத்தியால் காய்கள் நறுக்கலாம் உயிரை காப்பாற்றிக் கொள்ளவோ உயிரை போக்கவோ முடியும்.

புகழைத் தேடி அதன்பின் ஓடாமல் பூரண மகிழ்ச்சிக்காகவும் மனநிறைவுக்காகவும் தூய்மையான எண்ணத்துடன் நல்ல செயல்களில் ஈடுபடுவது தான் வளமான வாழ்க்கைக்கு வழி. மனிதனுக்குள்ள அறிவுத்திறன், உணர்வுத்திறன் இரண்டும் இணைகோடுகளாக செயற்படுவது நன்மை பயக்கும். அறிவு முதிர்ச்சியால் மனிதாபிமானமும் அன்பும் மேலோங்கும்.

-சிவனடியான்-




## பொது அறிவுத்தகவல்கள்

- முதன் முதல் 1893 ஆம் ஆண்டு நினைவு தபால் தலையை வெளியிட்ட நாடு அமெரிக்கா.
- தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் மூச்சு கருவியின் பெயர் ஸ்கியூபா ஆகும்.
- தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் மூன்று அடிப்படை நிறங்கள் பச்சை, நீலம், சிவப்பு.
- பிளாஸ்ரிக்குகளை எரிக்கும் பொழுது டையாக்சின் என்ற நச்சுப் புகை வெளியாகிறது.
- பாம்பு நாக்கின் மூலம் வாசனையை உணர்கிறது.
- காண்டா மிருகத்தின் கொம்புகள் உண்மையில் எலும்புகள் அல்ல. அவை மிகக் கடினமான மயிரிழைகளால் உருவானவை.

### சிந்தனைத்துளிகள்

- நம்மிடம் பெரிய தவறுகள் இல்லை எனக் குறிப்பிடுவதற்கே, சிறிய தவறுகளை ஒப்புக்கொள்கிறோம்!
- ஓடுவதில் பயனில்லை. நேரத்தில் புறப்படுங்கள்.
- எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால் பழகிக்கொள்ளுங்கள்.
- நல்லவர்களோடு நட்பாயிரு. நீயும் நல்லவனாவாய்.
- காரணமே இல்லாமல் கோபம் தோன்றுவதில்லை. ஆனால் காரணம் நல்லதாய் இருப்பதில்லை.
- யார் சொல்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே முக்கியம்.
- நோயை விட அச்சமே அதிகம் கொல்லும்!

## 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்







கே.அக்ஷிதா,
தரம் 1 ஏ, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

குருவைச் சந்தித்து ஞானோதயம் பெறுவது எப்படி என்ற தம் சந்தேகத்தைக் கேட்டார் அறிஞர் ஒருவர்.

"மழை பெய்யும் போது இரு கைகளையும் உயரத் தூக்கியவாறு நில்லுங்கள் ஞானோதயம் கிடைக்கும்" என்றார் குரு.

"குருஜி! நீங்கள் சொன்னவாறே நேற்று மழையில் நின்றேன். தண்ணீர் என் கழுத்து வழியாக கீழே இறங்கி ஓடிய போது, நான் ஒரு முட்டாளைப் போல உணர்ந்தேன்" என்றார் அந்த நபர்.

"முதல் நாள் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஞானோதயம் அது தான்" என்றார் குரு.








**தெரிவுக்குழு விசாரணை பெரிய நாடக மேடை என்கிறாரே ஜனாதிபதி?**

**உன்விதியை நீயே நிர்ணயம் செய். இல்லையேல் மற்றவர்கள் நிர்ணயித்து விடுவார்கள். தமிழினத்தின் தலைவிதியை யார் நிர்ணயிப்பது?**

**இனப்படுகொலை நடந்த நாட்டில் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டுமாமே?**

*கயல்* — *வதிரி*

**கிழக்கு தமிழ் பிரதேச செயலக தரமுயர்வு வாக்குறுதி நிறைவேறுமா?**

என்னமோ கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி விட்டது பேரினவாத அரசு. இனி நிறைவேற்ற இது மட்டும்தான் இருக்கிறது என்பது போல கேட்கிறீர்கள்.

தமிழன் செய்ய வேண்டிய ஒன்று என்ன வென்றால் எங்கள் செருப்பைக் கழற்றி எங்களையே நாங்கள் அடித்துக் கொள்ள வேண்டியதுதான்.

ஏனென்றால் நாம் காலங்காலமாக யாரை நம்பி பாராளுமன்றம் அனுப்புகிறோமோ அவர்கள் அரசுக்கு விசுவாசம் காட்டி எம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தவறு செய்தது நாங்கள். எனவே எம்மை அடிப்பதுதான் முறை. முடிந்தால் அடுத்த தேர்தலில் வாக்கென்ற செருப்பால் அவர்களை அடிக்க முடிவெடுப்போம்.
இப்போது சொல்லுங்கள் தரம் உயர்த்தப்படுமா? இல்லையா?

*ஜுயா* — *கரவெட்டி*

**தெரிவுக்குழு விசாரணை பெரிய நாடக மேடை என்கிறாரே ஜனாதிபதி?**

தெரிவுக்குழுவை உடன் கலைக்க வேண்டும். இல்லையேல் நடவடிக்கை எடுப்பேன் என்றார் ஜனாதிபதி.

இல்லை தெரிவுக்குழு நடைபெற்றே தீரும் என்றது அரசு.

மீண்டும் அது ஒரு நாடக மேடை என்கிறார் ஜனாதிபதி. அரசுக்கும் ஜனாதிபதிக்குமான அதிகாரப்போட்டி மக்களைப் பாதிக்கிறது. இதை யாரும் அறியவில்லை.

என்னவோ நடத்தி முடியுங்கள். வாழ்க்கையே ஒரு நாடக மேடைதானே.

*தமிழ்* — *பருத்தித்துறை*

**உங்களின் கடந்த வார அரசியல் கேள்விகளுக்கான பதிலில் கம்பீரம் குறைந்து விட்டதே வியாசரே?**

ஓ... அதுவா. கடந்த வாரம் எனக்கும் என் மனைவிக்கும் கொஞ்சம் மனக்கசப்பு அது டெவலப் ஆகி அடிதடியில் முடிந்து விட்டது. பெரிதாக எனக்கு காயம் ஒன்றுமில்லை. கைகளைத்தான் மேலே தூக்க முடியவில்லை. இந்த வாரம் சும்மா கதறும் பாருங்கள் நான் கதறியது போல.

*நிலா* — *சுழிபுரம்*

**உமக்கு தாயா? தாரமா? பிரதானம். பிணக்கு வரும் போது யார் பக்கம்?**

மாமியார் -மருமகள் சண்டை நடக்கும் போது அம்மா பக்கமும் நிற்காமல் மனைவி பக்கமும் நிற்காமல் அலுமாரியின் ஓரத்தில் ஒரு பக்கமாய் நிற்பவன்தான் கணவன் என்று முகப்புத்தகத்தில் படித்த ஞாபகம்.

தாய்க்குப்பின் தாரம் என்கிறார்களே அதை ஏனோ பல மகன்கள் மறந்து விடுகிறார்கள். திருமணமானதும் சின்னச் சின்ன விடயங்களில் கூட தாயைப் புறந்தள்ளி மனைவியை முன்னிலைப்படுத்தினால் தாய் மனம் படும் பாட்டை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. எப்போதுமே முதன்மையானவள் தாய். அதன் பின்தான் தாரம். இதுதான் உலக நியதி.

*சனா* — *கந்தர்மடம்*

**சண்டையிட்டு சென்ற நண்பனுடன் மீண்டும் சேர்வது தவறா?**

நட்புக்குள் ஏது சண்டை, நட்பில் ஏது பிரிவு. நண்பனின் கோபம் என்பது நீருக்குள் அமுக்கி விட்ட பந்தைப் போன்றது. எவ்வளவுதான் உள்ளே சென்று அமுக்கினாலும் அது மேலே வந்தே தீரும். அதை யாராலும் தடுத்து விட முடியாது.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

*தர்ஷிகா* — *கௌந்தில்*

**இனப்படுகொலை நடந்த நாட்டில் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டுமாமே?**

இறையாண்மை ஏதோ இடுப்பில் சொருகிக் கிடக்கிறது .அதை, அடிக்கடி தொட்டுப் பார்த்து பாதுகாப்பாக இருக்கிறதா என்று உறுதிப்படுத்துவது போல பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அடித்தவனுக்கு விசாரணையில்லை.,அடி வாங்கியவனுக்கு நீதியில்லை, இங்கு யாருக்குமே மனச்சாட்சியில்லை இந்த இலட்சணத்தில் இறையாண்மையாவது பாதுகாக்கப்படுவதாவது.. சும்மா போங்கையா கடுப்பேறுது.

*ஏ.ஜே.தாஸ்*

**படிக்கும் மாணவர்களுக்கு தொலைபேசி நன்மையா? தீமையா?**

படிக்கும் பிள்ளைகள் கையில் கொப்பி புத்தகம் இருக்க வேண்டியதே தவிர தொலைபேசி இருக்கக்கூடாது. இதை ஏனோ இப்போதைய பெற்றோர் புரிந்து கொள்வதில்லை.

பிள்ளை அழுகிறது, எதற்கும் அடம்பிடிக்கிறது என்கின்ற காரணத்திற்காக தொலைபேசியை அதன் கைகளில் கொடுத்து விடுகிறார்கள். பிறகென்ன மிதமிஞ்சிய வளர்ச்சி பிள்ளையின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கிவிடுகிறது.

ஏனோ பெற்றோருக்கு இது புரியவில்லை.

*யனுசன்* — *ஸ்கந்தபுரம்*

**இலங்கைக்கு மரண தண்டனை பொருத்தமான தீர்வா?**

பொருத்தம், பொருத்தமற்றது என்பதற்கப்பால் அதிகரித்து வரும் போதைப் பிரயோகம், அதனால் ஏற்படும் கொலை, கொள்ளை, வன்புணர்வு இவற்றைத் தடுப்பதற்கு ஆகக் கூடிய சட்டம் ஒன்று தேவை.

இல்லையேல் இந்த நாடு கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போய்விடும்.

அந்த அதிகூடிய தண்டனை மரணதண்டனையாக இருப்பதில் தவறேதும் இல்லை.

2009றகு முன் குற்றச் செயல் இல்லாதிருந்தது. அந்த நேரத்தில் குற்றவாளிகளுக்கான தண்டனையும் வேறு மாதிரியே இருந்தது.

*திகழன்* — *யாக்கரு*

**பிரபாகரனால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு இப்போது என்ன செய்கிறது?**

அரச பிரதிநிதிகளாகத் திகழ்கிறது.

*செழியன்* — *வேலணை*

**உன்விதியை நீயே நிர்ணயம் செய். இல்லையேல் மற்றவர்கள் நிர்ணயித்து விடுவார்கள். தமிழினத்தின் தலைவிதியை யார் நிர்ணயிப்பது?**

எம் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தி 2009 உடன் முடிந்து போனது. இப்போது அந்த சக்தி ஒரு வேடதாரிக் கூட்டத்திடம் இருக்கிறது. தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்று அவர்கள் கூட்டாக முடிவெடுத்து முயற்சித்தால் முடியும். ஆனால் துரதிர்ஷ்டம். அவர்கள் இப்போது பேரினத்தின் துதி பாடுவதும், அவர்க்கு தூபம் காட்டுவதும், அவர்களை விழாது தூக்கிவிடுவதும் என எடுபிடி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். என்னமோ புரிந்தவர்கள் புரிந்து கொள்ளுங்கள். புரியாதவர்கள் புரிந்து கொள்ள முயற்சியுங்கள். நன்றி வணக்கம்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**




# மாசு மனிதர்கள்

சு.ஆர்த்திகா
தொல்புரம் கிழக்கு

விதி என்பார்கள்
சதி செய்வார்கள்
கதி இது என்பார்கள்
சுதிபோட்டு நிற்பார்கள்

பதி நான் இங்கு
மதி கெட்டுப் போனால்
நதி நீ என்பார்கள்
குதி இங்கென்பார்கள்

துதி என்பார்கள்
ஓதி நிற்பார்கள்
நிதி கொஞ்சம் பிழைத்தால்
கொதி கொண்டு எழுவார்கள்

பாதி தான் தருவார்கள்
மீதி நான் கேட்கையில்
நாதி அற்றவன் நீயென
ஊதித் தள்ளுவார்கள்

வாதி நீ என்பார்கள்
மீதி இங்கென்பார்கள்
சாதி சொல்லி நிற்பார்கள்
ஆதி அறியாப் பேதையர்கள்

கைதி நீ என்பார்கள்
நீதி இது என்பார்கள்
பீதி கொள்ளச் செய்து
சேதி இது என்பார்கள்

வதி இங்கு என்பார்கள்
தேதி பார்த்துச் சொல்வார்கள்
வீதி இது என்பார்கள்
மோதிவிட்டுப் போவார்கள்

மற்றவரைத் தாழ்த்த- பல
மனங்களுண்டு இங்கே
மாசு நிறைந்த மனிதர்கள்
மாநிலத்தில் உண்டு பாரீர்

வில்லங்கங்கள் பல கூறி
விரட்டியடிக்கும் இவர்களை
விலக்கிவிட்டு வாழ்வில்
விந்தைகள் பல படைத்திடுவீர்

# பரிமாணம்

மதுவிலே மதி கெட்டு
மயங்கிவரும் மானிடமே
மமதையினால் போதையுண்டு
அகமகிழ்வு வாழ்வு என்ன
ஏனிந்த வாழ்வு என்று
ஏமாந்துப் போவோரும்
ஏககால வாழ்வு என்று
ஏங்கி மண்ணில் வாழ்வோரும்
ஏமாளியாகப் போவதுதான்
வாழ்க்கையதா
ஊதாரி ஊர்த்தெருவில்
போந்திவரும் போதைக்கெலாம்
பொறுப்பற்ற காரணங்கள்
பொய் வடிவமாயிரங்கள்
உழைத்ததிலே உடலலுப்பாம்
உறங்கிடவே உண்டதென்பார்
வீட்டிலே வில்லங்கம்
விபரீத போதையென்பார்
கோதாரிக் காதலால்
கொதித்தே மனம்
குடித்தேனென்பார்
நகுமி நண்பர்கள்
கலந்து தந்தவர் என்பார்கள்
பிறந்த வீடும் போதையடா
இறந்த வீடும் போதையடா
போதையற்ற வாழ்வொழிய
பாரில் பல காரணங்கள்
போதை பல வடிவத்தில்
பாதை மாறிப் போகுதடா
பேரினத்தின் இன அழிப்பில்
ஊறித்தவம் கொள்ளுதடா
பேரியலில் பாதியுயிர்
போதையிலே மீதி உயிர்
ஊதிப்பருத்து ஊருக்கோர்
மதுக்கடை
மதிகெட்ட மானிடர்க்கு
சதி தீட்டும்
புது வலை இதுவடா

யாழ். வாகீஷ்

# வரலாறு கூறும்

வெடிச் சத்தத்தை விரும்பியதில்லை
வெடித்துச் சிதறுவதை நினைத்ததுமில்லை
கழுத்தில் நஞ்சை கட்டிய போது
உயிரை நினைத்து கலங்கியதுமில்லை
பரமசிவன் கழுத்தில் நஞ்சைக் கண்ட
பார்வதி தேவி கலங்கியதுண்டு
தமிழன் வரலாறு தழைக்க வேண்டும்
தனித்துவாழ தனியிடம் வேண்டும்
என்னும் கொள்கையை மனதில் இருத்தி
மரணித்த வரலாறு வளர்க்க வேண்டும்
எழுந்து நடந்தால் எரிமலையும் வழிவிடும்
படுத்துக்கிடந்தால்
சிலந்தியும் சிறைப்பிடிக்கும்
சிந்தனைத் தமிழன் சீறியெழ வேண்டும்
சிதறுண்ட தமிழனை ஒற்றுமைப்படுத்த

அராலியூர் ப.தர்மகுமாரன்

# விவாகரத்து பத்திரம்

ஆண்டவன் போட்ட முடிச்சொன்று
முறைதவறிப் போனது இங்கொன்று
நாளும் கோளும் நலமாய் பொருந்த
அம்மி மிதித்து அருந்ததி பார்த்த
செய்திமெல்லாம் வீணாய்ப் போச்சே
விதியென்று சொல்லி விலகிவிடவே
நினைக்குது ஏனோ இரு நெஞ்சம்
இவர்கள் வழியில் பூத்த மலரொன்று
இடைநடுவே தவிக்குது இங்கொன்றாய்
தாயின் அன்பு அறிந்திட ஒரு வீடு
தந்தையின் அன்பு புரிந்திட மறு வீடாய்
துண்டாய் உடையுது அவன் உள்ளம்
இருதரப்பு வாதம் அறிந்திட்ட மன்றம்
அவன்தரப்பு வாதம்- இறைவா
நீயும் கேட்டிட மறந்ததும் என்ன
விதைத்தவன் யாரோ விதித்தவன் யாரோ
வினைகள் எல்லாம் இவனிடம் தானோ
தெருவோரம் போனதே திருமணப் பத்திரம்
வீட்டிற்குள் நுழைந்தது விவாகரத்துப் பத்திரம்

ரூ.லக்ஸ்மனன், நல்லூர்

# மதம் பிடித்த யானைகளின் மதப்பரம்பலை யார் தடுப்பார்

அன்பே சிவம் என்றும்
ஆமேன் என்று அரவணைத்தும்
அல்லாஹு அக்பர் என்றும்
எல்லா மதத்தோரும்
அன்பையே உதிர்க்கிறார்

ஏனோ!
தன்னை மறந்து
மதத்தில் மதம்பிடித்து
எண்ணுதற்கரிய செயலை
இயல்பாய் செய்கிறார்

உண்ணும் உணவெடுத்து
ஈ எறும்பிற்கொருபிடி கொடுத்து
உலகில் உள்ள உயிரினங்களில்
கருணை கொண்டதுதான் மனிதம்


வேகம் கொண்ட மனித இனமின்று
மதம் கொண்ட யானைபோல்
உருவெடுத்து பின்
மதம் மறைத்து சாதுக்களாய்
வாசல்படி தேடி வருகிறது

மனிதனோ மதமென்று அறியாது
மனித மதம் விலகவேண்டுமென்று
இன்புற்றழைக்க...
மதங்கொண்ட யானைகள்
மதம் மறைத்து மதம்தனை
வாழைப்பழத்து ஊசியாய்
ஏற்றுகிறார் ஏனோ ஏறுகிறார்

மதம்கொண்ட யானைகளின்
அட்டவணை எதுவோ அதன்படி
மதமின்றி நடக்கின்ற
மதப்பரம்பலை யார் தடுப்பாரோ?

மாவை. நா.கஜேந்திரன்


# மௌனத்தின் தேடல்- 453



# இழிசெயல்

நீர் இளைஞனாய்
இருந்தும் ஏது பயன்
சுயதொழில் ஏதுமின்றி
பலரின் பழி பாவங்களை
சுமந்து செல்வது ஏன்?
இதுவே உன் தாய்
தங்கையெனில்
கழுத்தில் கைவைத்திருப்பாயா?
யாராய் இருந்தென்ன
பெண்கள் என்றும்
தாய்க்கு சரி நிகரே
இந்த இழிசெயலை
விடுத்து கோயில்களிலும்
கடைத் தெருக்களிலும்
கையேந்துங்கள்
சில்லறையேனும் விழட்டும்...

த.ஜானிகா
உரும்பிராய், யோகபுரம்



# மௌனத்தின் தேடல்-454

அன்பு வாசகர்களே! உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

# சீரழியும் சமூகம்

நம் நாட்டில் ஒரு காலத்தில்
கல்வியில் சிறந்து விளங்கிய
நம் இளைய தமிழ்ச் சமூகம் இன்று
இப்படி வழிப்பறி, வாள்வெட்டு என
சட்டவிரோத செயல்களில்
ஈடுபட்டுச் சீரழிகின்றதே...
இதைத் தடுக்க உரிய தரப்புக்கள்
விரைந்து செயற்படுமா?

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

# நம்மினத்து தாயிடமா வழிப்பறி

விலையுயர்ந்த
மோட்டார் சைக்கிளில்
அழகான இளைஞன் நீ
நம்மினத்து தாயிடம்
ஆபரணத்தைப் பறிப்பது
எத்தனை பாவமடா?
உழைத்துவாழத் துணிந்துகொள்!
வழிப்பறி உன்னை
கம்பி எண்ண வைக்கும்--உன்
வாழ்க்கை எங்கே கேள்விக்குறியாகும்

அபிகுலமாலிகா, சங்கானை

# மரணம்தான் முடிவுரையோ

உடலில் வலிமையுண்டு
உழைத்துண்ணத் திறானியுண்டு
விடமாகிச் சமுதாயத்தில்
விழுந்து விட்ட பால்குடமாய்
அட மானுடமே சென்றழைக்க
அருகதையேயிலாதவரா நின்
மடத்தனத்தை உணருதற்குள்
மரணம் தான் முடிவுரையோ

வை.கஜன்
கொக்குவில்

# நீதி நேர்மையற்று!

திறந்த பொருளாதாரக் கொள்கை
சாய உற்பத்திகள் இல்லா வர்த்தகப்
பொருளாதாரம் பணவீக்கம்!
அந்நியச் செலாவணியே நாட்டின்
பொருளாதாரத்தை தீர்மானிக்கிறது
வாழ்க்கை வசதிகள் அதிகரிப்பு
ஆடம்பர வாழ்க்கை- போதைப்
பொருள் வியாபாரம்
குறுக்கு வழியில் வாழும்
போக்குகள்
நீதி நேர்மையற்ற சமூகங்களை
தோற்றுவிக்கிறது

இ.ஜெ.பாலன்

# பிறர் உழைப்பை பறிக்காதே!

பட்டப் பகலில் நடுவீதியில்
கெட்டித்தனமாக பெண்ணிடம்
வழிப்பறி செய்யும் வாலிபனே!
விட்டு வைத்திடுமா இப்பழி
உன் நெஞ்சே உன்னைச் சுடும்
அப்போது உணருவாய்
தவறுகளை
உணர்ந்தும் பயனில்லை
விட்டுப் போகுமா உனைவிட்டு
கெட்டவன் என்ற நாமம்
உடம்பில் உயிரிருக்க
உள்ளத்தில் துணிவு கொண்டு
உழைத்துவாழப் பழகு
பிறர் உழைப்பைப் பறிக்காதே!

சி.கஜா, மூளாய் கைமோட்டை

# பாதையை மாற்று

தாலியை அறுக்கும்
தறுதலையே நீ
தாயிடம் பிறந்ததில்லையோ
உனக்கு தன்மான
உணர்வில்லையோ?
காலந்தோறும்
கள்வர்கள் பயம்
கலங்கியிங்கே
வாடும் மக்கள்
காவல்துறை சட்டங்கள்
போட்டுத் தந்தனர்
கள்வர்கள் திட்டங்கள்
போட்டுத் திருடினர்
திருட்டு ஒழியாது நீ
சிந்தித்தாலன்றி
சிறுமையை விடு சிறப்பை நாடு
பட்டுக்கோட்டைப் பாடலை
நீ கேட்டு உன் பாதையை
நீ மாற்று மனம் மாறிப்புணர்ந்து

சி.திவ்வியா
யாழ்.வே.ம.வி.


# திருடன்

பஞ்சமா பாவங்கள் மண்டியிட்ட
மண்ணிலே- இன்று
அவை விலை மலிந்து
போனது ஏனோ?
பட்டப்பகலில் வாள்வெட்டு
கோயிலுக்குச் சென்ற பெண்ணின்
தாலி அறுப்பு
இதுதான் இன்றைய
தலைப்புச் செய்தி
மனித உயிர்கள் இன்று
விலை மதியற்றுப் போனது
பண்பாடு இன்று பரலோகம் போனது
கயவர்கள் கைகள் ஓங்கிப் போச்சு
நல்லவர்கள் கைகள்
அடங்கிப் போச்சு
இருப்பவர்கள் இருந்தால்
இது நடக்குமா?
எனப் பலரது புலம்பல் இன்று
கவலை வேண்டாம் இந்த
கலியுக கல்கி அவதாரத்தை
மீண்டும் ஒருமுறை பார்ப்பீர்கள்

அ.அகிலன், யார்க்கரு

# பயணப்பை

சிறுகதை



"எல்லோரும் அவசரப் பட்டு இறங்கும் போது சோமண்ணை மட்டும் சும் மாவா தானும் ஏதோ அவசர மாய் போறவனாய் தான் வைத்த இடத்தில் தனது நீலப் பயணப்பையைத் தூக்கிக் கொண்டு இறங்கி பேருந்து நிலையத்தை விட்டு வெளி யில் போகும் போது பய ணப்பை மிகவும் கனதியாக கிடந்தது. அப்பத்தான் பார்த் தார் அது வேறு யாரோ ஒரு வரின் பை. எப்படியாவது கொடுத்து விட்டு நனது பையை எடுக்க வேண்டும் என்று விட்டு மாமாவை வாச லில் நிறுத்தி விட்டு பேருந்து தரிப்பிடத்தை நோக்கி ஓடிப் போனார்"

நாளாந்த வாழ்க்கை நடத்தப் போது மான சம்பளத்தை உழைக்கும் ஒரு சாதாரண அரசாங்க ஊழியர் தான் இந்தச் சோமண்ணை... சோமண் ணைக்கு இந்த ஆறாம் மாதத்தில நெரு ங்கிய உறவினர் கொழும்பில் இறந்த தாகச் செய்தி வந்ததால் அந்தரப்பட்டு பதைபதைத்து கொழும்புப் பயணத் திற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்திற் குச் செல்வதற்காக... நகுலன் அண் ணையின் மகனுக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்திய சோமண்ணை; "ஹலோ சுதன் ஒன்பதரை பேருந்துக்கு கொழும்புக்குப் போகனும் என்னையும் மாமாவையும் கொண்டு போய் விட இரவு ஒன்பது மணிக்கு ஒருக்கா வரு வியா" "என்றவர் மனதில் ஓர் ஏக்கம்". "உயிர்த்த ஞாயிறுக் குண்டுவெடிப்புக் குப் பிறகு இன்றுதான் கொழும்புக்குப் போறன்.

பயணப்பை நல்லதா இருக்கனும். இன்றைக்கு மகளுக்கு வாங்கிக் கொடு த்த பையை கொண்டு போகலாம்..ஆனா நாளைக்கு அவளுக்குப் பள்ளிக்கூடம் என்றெண்ணியவர் ஆழ்மனதிலிருந்து நேற்று மகள் சொன்ன வார்த்தைகள் ஒலித்தது "அப்பா என்னுடைய ரீச்சர் என்னையே நம்பவில்லை.. என்னு டைய புத்தகப் பையை அவரே சோதிக் கிறார்.

எங்களுடைய பள்ளிக்கூடத்திற்கு நாங்களே குண்டு வைப்பமா?.. உண் மையில் ஆண்டு இரண்டு படிக்கும் மக ளின் நியாயமான கேள்விதான் அது. இந்தகைய உளவியல் பாதிப்புக்களிலி ருந்து விடுபட வேண்டும் என்பதற் காகவும் ஆசிரியர்-மாணவர் இடை வினை உறவு நல்லதாக அமைய வேண் டும் என்பதற்காகவும் உள்ள கடை யெல்லாம் ஏறி இறங்கிப் பார்த்து ஒரு பையைத் தனது மகளுக்கு வாங்கிக் கொடுத்தார்...

அந்தப்பை உள்ளுக்குள்ளே இருக்கிற தெல்லாம் தெரியக் கூடியவாறான ஒரு கண்ணாடிப்பை. அந்தப் பையை மகளே கொண்டு போகட்டும். நான் எனது பழ மையான பயணப்பையை கொண்டு போவம் என்றெண்ணியவர்.. பழைய பயணப்பையை எடுத்து ஒரு நாளுக்குத் தேவையான எல்லாவற்றையும் அடிக்கி ட்டு கடவுளைக் கும்பிட்டார்

"அப்பனே முருகா கொழும்புக்குப் போய் வரும் வரை எந்தவொரு குண்டு வெடிப்பும் இடம்பெறக்கூடாது. என்ர குடும்பத்தையும் பார்த்துக் கொள்" என ஒன்றுக்குப் பலதடவை முருகனைக் கும்பிட்டுவிட்டு தேநீர் குடித்து முடிக்கக் கணக்காக... சுதனின் மூன்று சக்கர வண்டி வந்தது. "அண்ண... சோம ண்ண என்ன வெளிக்கிடுவமா?... என்ற சுதனின் குரலுக்கு விடையளித்தார்.

"வா இப்படி உக்காரு நீயும் ஒரு தேநீர் அருந்திவிட்டு போகலாம்.நேரம் கிடக்குத் தானே மாமாவும் வரக் கணக்காக இருக்கும்" என்றவாறு தேநீரை சுதனு க்கு நீட்டினார். சுதன் தேநீர் குடித்து முடிக்கவும் கணக்காக மாமாவும் வந்து சேர்ந்தார்.

எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மனைவி பிள்ளைகளுக்கு பலதடவை பத்திரம் சொல்லிவிட்டு புறப்பட்டார். யாழ்ப்பாண பேருந்து நிலையம் செல் லும் வரை ஒரே பழைய நினைவுகள் தான். பங்கருக்குள்ளே இருந்து படித்த காலம் தொட்டு எல்லாம் நினைவில் வந்து போயின...

பேருந்து புறப்பட இன்னமும் நாழிகை கிடக்கு. கவனமாகக் கொண்டு வந்து நேரத்துடன் விட்டதற்கு நன்றி சுதன் என்றவாறு தனது சட்டைப்பையிலும் இருந்து சுதனின் வண்டிக் கூலியைச் செலுத்தினார்... ஒருவாறு உள்ளே சென்று பேருந்தில் பார்த்தால் ஒரு நாலு ஐந்து ஆட்கள் தான் இருந்திச்சினம். நான் மாறி ஏறிவிட்டேனோ என்றெண் ணியவர் நடத்துநரை நோக்கி "இது கொழும்பு போற பேருந்து தானே" என்ற தும் நடத்துநர் ஓம் அண்ண குண்டு வெடிப்புக்குப் பின்னர் இப்படித்தான்...

சோமண்ணைக்கு மெய்யபடிபோகனை தொட்டு போய் வாறவரையும் கட வுளே எல்லாரையும் காப்பாத்து வந்ததும் உனக்கு ஒரு பொங்கல் வைப்பன்... என்றவாறு வசதியான இரு இருக்கை யைப் பார்த்து அமர்ந்தார். தன் கையில் இருந்த பயணப் பையை கவனமாக மேல வைத்தார். அப்போது தெரியவி ல்லை இது வில்லங்கத்தில் போய் முடி யும் என்று ... வைத்துவிட்டு மனை விக்கு பேருந்தில் ஏறிட்டன் என்று எடுத்துச் சொன்னார்.

மெல்லக் கண் உறங்குவம் என்ற வாறு கண்ணை மூடினார். பேருந்து மிக வேகமாகச் சென்று முகமாலையைச் சோதனைச் சாவடியில் நின்றது. அது வரை பயணிகளோ ஏறாத பேருந்தில் விடுமுறையில் வீடு செல்லும் இராணு வத்தினர் பலர் ஏறி அமர்ந்து கொள்ள பேருந்தின் முக்கால் பங்கு நிறைந்தது. மீண்டும் பேருந்து வேகமாகப் போய் மாங்குளத்தை அடைய மீதி இராணு வமும் ஏற பேருந்து நிரம்பியது. சோம ண்ணை மனதில் அருட்சகோதரி யூட் பிரான்சின் நினைவுகள் ஓடியது.

அன்றொரு நாள் வற்றாப்பளை கண் ணகை அம்மனைக் கும்பிட்டு வருவம் என்று போனவர் வரும் வழியில் தான் அருட்சகோதரியைச் சந்தித்தார். அருட் சகோதரி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறு வர்களை வளர்க்கும் உன்னத புனித மான சேவையைச் செய்து வருபவர்.

உண்மையில் போற்றப்பட வேண்டி யவர். யுத்தம் உயிரைக் கொல்லும், ஊனமாக்கும், உடைமைகளை அழிக் கும் என்பதற்கு போலாக பலருக்கு உள வியல் ரீதியான பாதிப்புக்களை கொடுத் தது தம் கண்முன்னே உறவுகளை இறந்தவர்கள்.

கருவில் இருக்கும் போது அதிர்வு களை அதிகம் உணர்ந்த கருக்கள் சேயாக பிறப்பினும் உளவியல் பாதிப் புக்களுடன் பிறந்திருந்தன. இவ்வாறு உளவியல் பாதிப்புக்களுக்குள்ளான சுமார் பதினைந்து பிள்ளைகளை வைத்துப் பராமரித்து வருகின்றார். தாய் தந்தை கைவிட்டாலும் இறைவனின் அரவணைப்பு அந்தப் பிள்ளைகளுக்கு இருந்தது.

இயலவர்கள் தமது கொண்டாட் டங்கள், நினைவு தினங்கள் விஷே தினங்களுக்கு இந்தப் பிள்ளைகளுக்குத் தேவையான உணவுகளை வாங்கிக் கொடுப்பதாலும் ஒரு இருபது போத்தல் பால் கறக்கின்ற பசுமாடு வளர்ப்பதால் காலை உணவில் ஆரோ க்கியமான பசுப்பால் கொடு ப்பதாலும் பிள்ளைகளை இயன்ற வரை வடிவாகக் கவனிக்கக் கூடியதாக உள் ளது. இனியொரு யுத்தம் வேண்டாம் அது எல்லோ ரையும் கொன்று தின்று விடும். இப்படிப் பழைய நினைவுகளை குழப்பக் கூடியதாக அருகில் இரு ந்தவர் நித்திரை செய்து சோமண்ணையின் தோள் பட்டையில் விழ சோம ண்ணை திடுக்கிட்டு நிஜ வுலகிற்கு வந்தார்.

உண்மை தான் பாவம் என்று இடத்தைக் கொடுக்க மடத்தை கட்டிய கதை யாச்சு. அந்த கவிஞன் மா.கா எழுதிய பனையும் அரசும் கவிதை முழுக்க முழுக்க உண்மை என்ற வர் எட்டிப் பார்த்தார்.

இன்னமும் ஓரிரு நாழிகையில் கொழும்பு வந்துவிடும். இனி முழித் திருப்பம் என்றெண்ணி யவாறு காலுக்குள் கிடந்த தண்ணீர் போத்தலை எடுத்து தண்ணீர் அருந்தினார். பேருந்து கொழும்பு பேருந்து நிலையத்தை அடைந்தது.

எல்லோரும் அவசரப்பட்டு இறங்கும் போது சோமண்ணை மட்டும் சும்மாவா. தானும் ஏதோ அவசரமாய் போறவனாய் தான் வைத்த இடத்தில் தனது நீலப் பயணப்பையைத் தூக்கிக் கொண்டு இறங்கிப் பேருந்து நிலையத்தை விட்டு வெளியில் போகும் போது பயணப்பை மிகவும் கனதியாக கிடந்தது.

அப்பத்தான் பார்த்தார் அது வேறு யாரோ ஒருவரின் பை. எப்படியாவது கொடுத்து விட்டு தனது பையை எடுக்க வேண்டும் என்றுவிட்டு மாமாவை வாசலில் நிறுத்தி விட்டு பேருந்து தரிப்பிடத்தை நோக்கி ஓடிப் போனார் சோமண்ணை... எல்லா பேருந்தும் ஒரே மாதிரி எங்க எப்படிக் கண்டுபிடிப்பது என்று அவதிப்பட்டு அங்குமிங்கும் திரிந்த சோமண்ணைக்கு கடவுளா பார்த்து நடத்துநர் கண்ணுக்குள் தென் பட்டார் அப்பன் ராசா... இந்த என்ர பயணப் பை மாறிவிட்டது.

பாவம் யாரும் தேடிக் கொண்டு நிற்கப் போகுதுகள் ஒரு ராசா கொண்டு போய்க் கொடுப்பம் என்று சொல்லி பேருந்தை நோக்கிப் புறப்பட்டனர். அங்கு சோமண்ணையை விட கட்டை யான ஒருவன் பையைத் தேடிக் கொண்டு நின்றான். சோமண்ணை பெருமிதத்துடன் "இந்தாங்கோ உங்கட பை" என்றதும் எதிர்பாராமல் அந்த நபர் எட்டிக் கன்னத்தில் அறைந்தார்.

சோமண்ணைக்கு தலை கால் புரியல என்னடா? தவறுதலாக நடந்ததற்கு இப் படியா? உடனே அந்த நபர் தனது மொழி யில் ஏதோ கத்திக் கொண்டு மீள கை வைக்க வர சோமண்ணை தடுத்து தாக்க நடத்துநர் அண்ணை வாங்கோ எல்லாம் கடவுள் பார்த்துக் கொள்வார் என்றதும் தனது ஆத்திரத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டார். எல்லாம் எங்கட விதி என்று மனதுக்குள் நினைத்தவர் மனச்சுமையுடன் பேருந்து நிலை யத்திலிருந்து வெளியேறினார் மரணச் சடங்கில் பங்கு கொள்வதற்காக...

அரியாலையூர்
குணரத்தினம் பிரதீபன்

# நிறத்திலா இருக்கிறது நீதி?



ஆயிரம் குற்றவாளிகள் தப்பினாலும், ஒரு நிரபராதிகூட தண்டிக்கப்படக் கூடாது. ஆனால், அந்த நிரபராதி கறுப்பினத்தவராக இருந்தால்?! 'சென்ட்ரல் பார்க் ஜாக்கர் கேஸ்' மொத்த அமெரிக்காவையுமே புரட்டிப் போட்ட பிரபல வழக்கு. ஏப்ரல் 19, 1989 நியூயோர்க் சென்ட்ரல் பார்க்கில் இரவு ஜாக்கிங் சென்ற பெண் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

அதேநேரத்தில் மற்றும் சிலரும் பூங்காவின் மற்ற பகுதிகளில் தாக்கப்படுகின்றனர். இதற்குக் காரணமானவர் யார் என்று தெரியவில்லை. ஆனால், 14 முதல் 16 வயதிலான ஐந்து பதின்மபருவத்தினர்தான் இந்தக் குற்றத்தைச் செய்திருக்க வேண்டும் என்று நிறத்தை வைத்து மட்டுமே முடிவெடுக்கின்றனர் பொலிஸார்.

கைதானதில் நான்கு பேர் கறுப்பினத்தவர், ஒருவர் ஹிஸ்பனிக் இனத்தவர். இவர்களை எப்படி அமெரிக்க நீதி அமைப்பு குற்றவாளி ஆக்குகிறது, அப்பாவிச் சிறார்களின் வாழ்வை அந்தச் சம்பவம் எப்படி மொத்தமாகத் திருப்பிப் போடுகிறது என உணர்வுபூர்வமாகப் பகிர்கிறது, நெட்ஃப்ளிக்ஸின் **'When they see us'** மினி சீரிஸ்.

இன்றைய சூழலில், அமெரிக்காவின் இனவாத அரசியலைப் படமாக்குவது டொனால்ட்ட்ரம்ப்பைக் காட்டாமல் நிறைவு பெறாது. அவருடைய பேட்டிகளும் இத்தொடரில் இடம்பெறுகின்றன. இந்த வழக்கு நடக்கும்போது, 'மரண தண்டனையை மீண்டும் கொண்டுவர வேண்டும்' என நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்கிறார் அவர். தொலைக்காட்சிகளில் பேட்டி அளிக்கிறார்.

**"Maybe hate is what we need if we're gonna get something**




**done"** என்கிறார். இரண்டு வரியில் வெறுப்பரசியலை விளக்குக என்று கேள்வி கேட்டால், இதை எழுதிவைத்து வந்துவிடலாம். இன்றும் இவற்றில் எதையும் திரும்பிப் பெறமாட்டேன் என்று ட்ரம்ப் நிலையாக நிற்பதுதான் இன்னும் பயமாக இருக்கிறது.

அமெரிக்க வழக்கில் குற்றம் சாட்டப்படுகிறவர்கள் சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான். ஒரே விடயம் நிறம்தான். வன்கொடுமை செய்யப்பட்டது, வெள்ளைப் பெண், குற்றம் சாட்டப்பட்டவர்கள் வேறு நிறம். இதுபோதும், விசாரணை தொடங்குவதற்கு முன்பே இவர்கள்தான் குற்றம் புரிந்திருப்பர் என முடிவெடுக்கின்றன அன்றைய வெள்ளை அமெரிக்க ஊடகங்கள்.


ஆதாரங்கள் இல்லை, சம்பவ இடத்தில் கிடைத்த **DNA**-க்கள் எவருடனும் ஒத்துப்போகவில்லை. பொலிஸாரின் அழுத்தத்தில் இந்தச் சிறார்கள் கொடுத்த வீடியோ வாக்குமூலத்தை மட்டுமே வைத்துத் தீர்ப்பளிக்கிறது, நீதிமன்றம்.

2002இல் உண்மைக் குற்றவாளி மத்தியாஸ் ரெய்ஸ் தானாக வந்து சரணடைகிறார். ஆதாரங்கள் பொருந்திப் போகின்றன. நீதிமன்றம் தனது தீர்ப்பைத் திரும்பப்பெற்றது.

ஆனால், இவை யெல்லாம் நடப்பதற்குள் கிட்டத்தட்ட முழுத் தண்டனையையும் பெற்று விடுகின்றனர் இந்த 'சென்ட்ரல் பார்க் ஃபைவ்.' இழப்பீடுகள் இவர்களது வாழ்க்கையைத் திருப்பித் தரப்போவதில்லை. எல்லாவற்றையும் விட, பார்ப்பவர்களுக்கு இவர்களின் மனநிலையை எடுத்துரைப்பதிலேயே கவனம் செலுத்துகிறது.

வெளியான நாள் முதல் நெட்ஃப்ளிக்ஸில் அமெரிக்கர்கள் அதிகம் பார்த்தது, இதைத்தான். இது அவர்களின் குற்றவுணர்வின் வெளிப்பாடாகக்கூட எடுத்துக் கொள்ளலாம். இந்த வழக்கை விசாரித்த அதிகாரிகளுக்கு எதிராக மக்கள் இப்போது கொதிக்கின்றனர்.

அதில் முக்கியமானவரான லிண்டன் ஃபேர்ஸ்டீன், தற்போது க்ரைம் நாவல்கள் எழுதுகிறார். கிளம்பியிருக்கும் எதிர்ப்பால் இவரது பதிப்பகம் இவரை நீக்கியிருக்கிறது. என்றோ நடந்த ஒரு நிகழ்வுக்கு இன்று எதிர்வினைகளை ஏற்படுத்தும்



சக்தி என்றுமே காட்சி ஊடகத்திற்கு உண்டு என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

"எனக்கு ஒரு கனவு இருக்கிறது. ஒரு நாள் நிறத்தால் இல்லாமல் குணத்தால் மட்டும் ஒருவரை மதிப்பிடும் நிலை இந்த தேசத்தில் உருவாக வேண்டும். எனது நான்கு குழந்தைகளும் அதில் வாழ வேண்டும்" என்பார், மார்ட்டின் லூதர் கிங்.

ஆனால்,ட்ரம்ப் போன்றவர்கள் இந்தக் கனவிலிருந்து அமெரிக்காவைப் பின்னோக்கியே இழுத்துச் செல்கின்றனர். இதிலும் குற்றத்தைக் குற்றமிழைத்தவரே ஒப்புக்கொள்ளாமல் இருந்திருந்தால், இன்றுவரையும் குற்றவாளிகளாகவே ஐந்து கறுப்பினச் சிறுவர்களும் வாழ்ந்திருப்பர். இப்படி இதுவரை எத்தனை பேர் இந்த அதிகாரச் சக்கரத்தில் சிக்கியிருக்கின்றனர் என்பது யாருக்கும் தெரியாது.

என்றையும்விட, இந்த டிஜிற்றல் யுகத்தில் எல்லா இடங்களிலும் வெறுப்பரசியல் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியிருக்கிறது. இனமோ, நிறமோ, மதமோ, சாதியோ இது எல்லா இடங்களிலும் இருக்கிறது. இதனாலேயே இன்றைய அரசியல் சூழலில் முக்கியமான தொடராக மாறுகிறது. **'When they see us.'**

# 'அம்மாவுக்கு கல்யாணம்'

## நெகிழும் மகன்

தன் அம்மாவுக்கு மறுமணம் செய்து வைத்து ஆனந்தக் கண்ணீர் வழித்திருக்கிறார் இளைஞர் கோகுல் ஸ்ரீதர். இந்த இனிய நிகழ்வை நெகிழ்வுடன் கொண்டாடித் தீர்க்கிறது கேரளம்!

கேரள மாநிலம் கொல்லத்தைச் சேர்ந்தவர் மினி. இடுக்கி மாவட்டம் தொடுபுழாவைச் சேர்ந்தவர் வேணு. இவர்கள் இருவருக்கும்தான் திருமணம் நடந்திருக்கிறது. இருவருக்குமே இது இரண்டாம்திருமணம்.


திருமணத்தை செய்துவைத்தவர் மினியின் மகன் கோகுல். இதை, 'அம்மாவுக்குத் திருமணம்' என்று குறிப்பிட்டு, தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்துள்ளார் பட்டதாரி இளைஞர் கோகுல்.

**கோகுலிடம் பேசினோம். "நான்சின்னப் பையனாக இருந்த போதிருந்தே அப்பா தினமும் குடித்துவிட்டு வந்து, அம்மாவை** அடிப்பார். உதடு கிழிந்து, இரத்தம் வழியும். ஆனால், என் எதிர்காலத்தை நினைத்து எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார் அம்மா.

சண்டை முற்றியதால் 2010ஆம் ஆண்டு நாங்கள் வீட்டிலிருந்து வெளியேறி விட்டோம். அப்போது எனக்கு 14 வயது. என் அம்மா நிம்மதியாக இருக்க வேறு ஒரு திருமணம் செய்துவைக்க வேண்டும் என்று அப்போதே உறுதி பூண்டேன்.

சொன்னால் அம்மா திட்டுவார் என்பதால், இதை யாரிடமும் சொல்லவில்லை. பி.டெக் முடித்து வேலை தேடினேன். கூடவே, அம்மாவுக்கு நல்ல கணவரையும் தேடிக்கொண்டிருந்தேன்.

இன்னும் எனக்கு வேலை கிடைக்கவில்லை. ஆனால், அம்மாவுக்கு நல்ல




கணவர் கிடைத்துவிட்டார்.

நான் படிக்கும்போதே கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்தேன். இப்போது இந்திய மாணவர் சங்கத்தின் கொட்டியம் பகுதிச் செயலாளராக இருக்கிறேன்.

என் அம்மாவின் உறவினர்கள் கம்யூனிஸ்ட் சிந்தனையில் ஊறியவர்கள். எனவே, அம்மாவுக்கு வேறு திருமணம் செய்து வைப்பது குறித்த என் எண்ணத்தைக் கூறியபோது அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அம்மாவைத் திருமணம் செய்திருக்கும் முன்னாள் இராணுவ வீரர் வேணு, நல்ல மனிதர். ஆரம்பத்தில் அம்மா, திருமணத்துக்கு ஒப்புக்கொள்ளவில்லை. பின்பு உறவினர்கள் பேசி சம்மதம் பெற்றோம். இப்போது அம்மா மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்.

என் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அம்மா பல கொடுமைகளைத் தாங்கிக் கொண்டார். இனி வரும் நாட்களில் என் பெற்றோர் முகத்தில் நான் மகிழ்ச்சியை மட்டுமே பார்க்க வேண்டும்" என்றார் நெகிழ்வுடன். மகன் தாய்க்காற்றும் நன்றி!


# இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு தன் வழக்கை தானே நடத்துவாரா நளினி?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான நளினிக்குச் சிறப்பு நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை உச்ச நீதிமன்றமும் உறுதிசெய்தது. தனக்கு மன்னிப்பு அளித்து தண்டனையை இரத்துச் செய்யுமாறு அன்றைய தமிழக ஆளுநர் ஃபாத்திமா பீவிக்கு அவர் கருணை மனு அளித்திருந்தார். தமிழக அமைச்சரவையை கலந்தாலோசிக்காமலேயே அவருடைய கருணைமனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதை எதிர்த்து அவர் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகினார் (1999). ஆளுநர் உத்தரவை இரத்துச் செய்து முதலமைச்சர் கருணாநிதியின் அமைச்சரவையை கலந்தாலோசித்து கருணை மனுவில் உத்தரவிடுமாறு உயர் நீதிமன்றம் பணித்தது. அதன் பின்னரே அவருடைய மரண தண்டனை, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. 25 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.

இதற்கிடையில் பலமுறை அவர் நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டியிருக்கிறார். நன்னடத்தை காரணமாகத் தனது தண்டனைக் காலத்தைக் குறைத்து விடுதலை செய்யுமாறு பல மனுக்களை அனுப்பியுள்ளார். அதில் ஒரு மனு சென்னை உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வொன்றில் விசாரணைக்காகக் காத்திருக்கிறது. சட்டத்தரணிகளை வைத்து வாதாடிக் களைத்துப் போன நளினி, தன் மனுவைத் தானே வாதாட அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். நீதிபதிகள் அது பற்றி அரசின் கருத்தைக் கேட்ட போது அரசுத் தரப்பில், 'நளினி சிறையிலிருந்தே காணொலி மூலம் தனது கருத்தை நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கலாம்' என்று ஆலோசனை வழங்கியுள்ளது. இதுகுறித்துப் பரவலான சர்ச்சைகள் வெளியாகியுள்ளன. ஆனால், இதில் சட்டப்பிரச்சினை ஏதும் இருப்பதாகத் தெரிய வில்லை.

சிறையில் தண்டனை பெற்ற கைதி வேறொரு பிரச்சினைக்காக நீதிமன்றத்தை அணுகும் போது அவர் வழக்கை அவரே நடத்திக்கொள்ளலாமா? அதற்குச் சட்ட அனுமதி உண்டா? என்ற கேள்விகள் பொதுவெளிகளில் எழுப்பப்பட்டுள்ளன. 1948 இல் மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்றதற்காக நாதுராம் கோட்சே சிறையில் அடைக்கப்பட்டார். அன்றைக்கு நாடு முழுவதும் அதிர்ச்சியில் இருந்தது. சட்டத்தரணிகள் 'கோட்சேவுக்காக ஆஜராக மாட்டோம்' என்று முடிவெடுத்திருந்தார்கள். நீதிமன்றத்தில் தன் வழக்கைத் தானே வாதாடிக்கொள்கிறேன் என்று கோட்சே கூறியபோது அதற்கு அரசுத் தரப்பில் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. கோட்சேவைச் சிறையிலிருந்து நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்து, திருப்பிக் கூட்டிச்செல்வது கடினமான காரியம் என்றும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்றும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அவருடைய மனுவை விசாரித்த பஞ்சாப் உயர் நீதிமன்ற நீதிபதி ஹர்னாம் சிங், 'கோட்சே தன் மேல் முறையீட்டை வாதாட தடை எதுவும் இல்லை. அவரை உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்' என்று உத்தரவிட்டார்.

## முன்னாள் நீதிபதி



1980 களில் இளைஞர்கள் பலர் நக்சலைட் என்ற பெயரில் பல்வேறு குற்றங்களில் இணைக்கப்பட்டு, தனிமைக் கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்தனர். சிறைச்சாலைகளில் நடக்கும் கொடுமைகளைப் பற்றி அவர்கள் பல மனுக்களை சென்னை உயர் நீதிமன்றத்துக்கு அனுப் பியிருந்தனர். உச்ச நீதி மன்ற உத்தரவுப்படி அந்த மனுக்கள் ஆட்கொணர்வு மனுக்களாகக் கருதப்பட்டுப் பல வழக்குகள் விசா ரிக்கப்பட்டன. அதற்காக இலவச சட்ட உதவி சட்டத்தரணிகள் நியமிக்க ப்பட்டனர். தோழர் தியாகு, 'நக்ச லைட் கைதி களைத் தனிமைக் கொட்டடியில் அடைத்து வைத்திருப்பது தவறு' என்று புகார்க்கடிதத்தை நீதி மன்றத்துக்கு அனுப்பியிருந்தார். அந்த வழக்கில் தோழர் தியாகு சார்பில் நான் வாதாட நேரிட்டது. அப்போது அவர் கடலூர் சிறை யில் கார்ல் மார்க்ஸின் மூலதனம் நூலைத் தமிழாக்கம் செய்து கொண்டிருந்தார். அவர் சென்னை சிறைக்கு மாற்றம் பெற விரும்பினார். ஆனால், அரசோ அப்படிப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றத் தயா ராகவில்லை. நீதிமன்றத்துக்குச் சென்றாலும் வெற்றிபெற வாய்ப்பு இல்லாத நிலை.

அவரை நான் சிறையில் சந்தித்தபோது இது குறித்து வினவினார். 'உங்கள் வழக்கை நீங்களே நடத்த விரும்பினால் ஒரு வேளை சென்னைச் சிறைக்கு மாற்றம் செய்வார்கள்' என்று ஆலோசனை கூறினேன். அவரும் சம்மதிக்கவே அடுத்த நாள் இரு நீதிபதிகள் அமர்வில், 'சிறைக் கைதி தன் மனுவைத் தானே நடத்த விரும்புகிறார்' என்று கூறினேன். முதலில் ஆச்சரியமடைந்த நீதிபதிகள் அவரை உடனடியாக நீதிமன்றத்துக்கு அழைத்து வரும்படி உத்தரவிட்டனர்.

அவருக்கும் சென்னைச் சிறைக்கு மாற்றல் கிடைத்தது. தன் வழக்கை நடத்துவதற்காக ஒருநாள் நீதி மன்றத்துக்கு அழைத்து வரப் பட்டிருந்தார். அப்போது நீதிப திகளுக்கும் அவருக்குமிடையே நடைபெற்ற உரையாடல் மறக்க முடியாதது. அதை இங்கு பதிவு செய்கிறேன்.

நீதிபதிகள்: "தியாகராஜன், உங்களை மற்றக் கைதிகளுடன் சேர்த்து வைத்தால் நீங்கள் அவர்களை மூளைச் சலவை செய்துவிடுவீர்களே?"

தியாகு: "மை லார்ட்ஸ், Some brains can never be washed. But, they will have to be smashed" (சில மூளைகளைச் சலவை செய்ய முடியாது. சலவைக் கல்லை வைத்து நசுக்கத்தான் வேண்டும்) என்று எதுகை மோனையுடன் பதில் அளித்தவுடன் நீதிமன்றமே குலுங்கிச் சிரித்தது. தர்மசங்கடத்துக்குள்ளான நீதிபதிகள் வழக்கை ஒத்தி வைத்தனர். தியாகுவும் தன் வேண்டிய காலத்துக்கு சென்னை சிறையில் காலத்தைக் கடத்தினார்.

விரைவில் நளினியும் நீதி மன்ற வளாகத்துக்கு வருவார் என்றே நம்பலாம்!

ஜூனியர் விகடன்

# தமிழ் அவமானம் அல்ல! அடையாளம்




என் அன்புத் தமிழ்ச் சொந்தங்களுக்கு வணக்கம்.இரண்டு தமிழர்கள் சந்தித்து உரையாடும் பொழுது அவர்களிற்கு மத்தியில் ஆங்கிலம் தேவையா? என்பது தான் இன்றைய கேள்வி. ஏன் இந்தக் கேள்வியைக் கேட்க அவசியம் இருக்கென்றால் உலகின் தொன்மையான மொழிகள் என்று சொல்லக் கூடிய கிரேக்கம்,இலத்தீன் ,சமஸ்கிருதம், ஹித்துரு போன்ற மொழிகளெல்லாம் இன்று எந்த தேசத்திலும் பேசுவது கிடையாது.வெறும் ஏட்டில் மாத்திரமே இருக்கிறது. அதாவது வழக்கொழிந்து விட்டது. பிறமொழிகளின் ஆளுமையினாலும் பிற மொழிகளின் தாக்கத்தினாலும் தொன்மையான இதுபோன்ற மொழிகள் எல்லாம் வழக்கொழிந்துவிட்டன. ஆனால் உலகினில் தொன்மையான மொழி என எல்லோராலும் கூறப்படுகின்ற எம் தமிழ்மொழியானது தனது கம்பீரத்துடன் பயணித்துக் கொண்டே உள்ளது. இன்னும் சொல்வதானால் செம்மொழிகளே தனித்துவம் வாய்ந்த மொழி தமிழ் என்பது உலக வல்லுநர்களின் கருத்து. உங்களிற்கு சந்தேகமிருப்பின் 'Which is the oldest language' என்று Google இல் தட்டிப் பாருங்கள் தமிழ் என்று தான் இருக்கும். அப்படிப்பட்ட உயர் மொழி, உயர்தனிச் செம்மொழி கால வெள்ளத்தால் கரைந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த பதில். நண்பர்களே உங்களை நீங்களே எடை போட்டுப் பாருங்கள். பத்துவார்த்தைகள் பேசினால் அதில் மூன்று, நான்கு வார்த்தைகள் அதிகமாக ஆங்கிலம் கலந்தே பேசுகின்றோம். எமது எதிர்காலத்தில் நாம் பேசும் தமிழ் வார்த்தையில் தமிழே இல்லாத ஆங்கிலமே பேசக் கூடிய நிலை ஏற்பட்டு விடும் போலும். தமிழே பேசாதே ஒருவனின் அடையாளம் என்னவாயிருக்கும்.- உன் அடையாளம் என்ன? என்று கேட்கும் போது அவர்களது பதில் என்னவாகவிருக்கும். உலகின் முதல் மொழிக்குச் சொந்தக்காரன் நான். உலகையே ஆண்ட பரம்பரைக்குச் சொந்தக்காரன் நான்.ஆனால் எனது அடையாளத்தை தொலைத்து விட்டு அநாதையாக நிற்கின்றேன் எனக் கூறுவானா? உலகில் அதிகம் பரவலாகப் பேசப்படும் மொழி எது என்று நினைக்கின்றீர்கள்? ஆங்கிலமா! ஏறக்குறைய நூறு நாடுகளில் தான் ஆங்கிலம் பேசப்படுகின்றது. ஆனால் ஏறக்குறைய நூற்று எண்பது நாடுகளுக்கு மேல் தமிழைப் பேசக்கூடிய, எழுதக்கூடிய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதில் நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும். எப்படி அது முடிந்தது. வாஸ்கொடகாமா இந்தியாவிற்குச் சென்றார். கொலம்பஸ் அமெரிக்கா சென்றார் என நாம் வரலாறு படிக்கின்றோம். இவர்களுக்கு பல்லாயிரம் ஆண்டுகளிற்கு மேல் எனது பாட்டனும் முப்பாட்டனும் கடல் கடந்து பயணித்துள்ளனர். அங்கு சென்று குடியேறி இருக்கின்றான். அங்கு சென்று ஆட்சி செய்திருக்கின்றான். பெயரை நிலை நாட்டியிருக்கின்றான்.அதன் வெளிப்பாடாக தான் நூற்று எண்பது நாட்டிற்கு மேல் தமிழைப் பேசக்கூடிய, எழுதக் கூடிய மக்கள் வாழ்ந்து கொண்டுள்ளனர். கடல் சார் ஆய்வாளர் ஐயா ஒரிசா பால் மிக அழகாக கூறுவர். உலகின் மிகப் பெரிய நாகரிக தொட்டில் எனும் எகிப்திய நாகரித்திற்கோ சீன நாகரிகத்திற்கோ குவாங்கோக்கோ இல்லாத சிறப்பு தமிழ் பண்பாட்டிற்கு இருக்கிறதென்றால் அது உலகளவிய தமிழர்களின் தொடர்பு எனக் கூறுவர். அவர்கள் பரவியிருந்து ஆதாரத்தை திரட்டியுள்ளனர். கனடாவில் கூட்டணி என்றும் காமாட்சி என்றும் ஆயி என்றும் வாழ்கின்றனர். அமெரிக்காவில் தம்ரேன் எனப்படுவோர் வாழ்கின்றனர். மக்கா,ஆயன் என்போர் வசிக் கின்றனர். அப்படிப்பட்ட ஒரு மொழியை பாரம்பரியத்தை அப்படிப்பட்ட பண்பாட்டை அவ்வளவு எளிதில் தொலைத்து விட முடியாது தொலைக்க அனுமதிக்க முடியாது.

எனினும் தமிழ் பேசத் தயங்கின்றார்கள். தமிழ் பேசினால் சில நேரம் அவமானமாக கூட கருகின்றனர். தமிழ் உன் அவமானம் அல்ல உன் அடையாளம். நவீன நாகரிகத்திற்கு சொந்தக்காரர் எனப் பீற்றித்திரிவோர் வேட்டையாடி காட்டுவாசியாயிருந்த காலத்தில் எழுதுவதற்கும் பேசுவதற்கும் அரிச்சுவடி தெரியாது வாழ்ந்த காலத்தில் மொழிக்கென தங்கம் வைத்து தமிழ் வளர்ந்தவன் தமிழன். அப்படிப்பட்ட இம் மொழி செம்மொழி உன் அவமானமல்ல அடையாளம் .உலகில் ஆங்காங்கே தோன்றிய மக்களெல்லாம் பல குழுக்களாக பிரிந்து ஒருவரோடு ஒருவர் மோதி சண்டையிட்ட காலத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சொன்னானே என் பாட்டன். அப்படிப்பட்ட சிந்தனை உன் அவமானமா! அடையாளம். தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா! என்றானே அப்படி தலையை உயர்த்தி நில் லுங்கள் உலகமே உங்களை வியந்து பார்க்கும்.

திருச்செல்வம் கௌதம்
யாழ். ஹாட்லிக் கல்லூரி

# உலகின் முதல் கணனி



இப்போது நாம் பார்க்கும் கணனியின் தொடக்கம் சார்லஸ் பபேஜ் (Charles Bab bage) என்பவரால் (1791-1871) இல் உருவாக்கப்பட்டது. கணிதத்தையும் எந்திரத்தையும் இணைத்துப் பகுப்பாய்வுப் பொறி என்ற முதல் கணனியை அவர் உருவாக்கினார். அவருடன் இணைந்து பணியாற்றியவர் புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் பைரன் என்பவரின் மகளான அகஸ்டா அடா கிங் (1816-1852). உலகின் முதல் கணனி புரோக்கிராமரான இவர் மிகச் சிறந்த கணித அறிஞராகவும் இசைக் கலைஞராகவும் திகழ்ந்தார்.

தொடக்க கால கணிப்பீட்டு பொறிகளான அனலிடிக்கல் இன்ஜின் மற்றும் டிவ்ரன்ஸ் இன்ஜினை வடிவமைத்தவர் சார்லஸ் பபேஜ். தன்னுடைய 18 வயதில் பபேஜ் உடன் சேர்ந்து பணியாற்றினார். அடா பபேஜ் அனலிட் டிக்கல் இன்ஜின் வடிவமைப்பில் ஈடுபட்ட போது அதன் ஆற்றலை மற்றவர்களை விட மிகச் சரியாக புரிந்து கொண்டார். அனலிட்டிக்கல் இன்ஜினை இயக்கத் தேவையான புரோக்கிராம்களையும் எழுதினார். கணனிகள் மூலம் இசையமைக்க முடியும் என முன்னறிந்து கூறினார் அடா. கணனியின் ஆரம்ப வடிவம் மிகப் பெரிய அறைக்குள் திணிக்கப்பட்ட ஏராளமான எந்திரங்கள் என்பதே வியப்பூட்டும் உண்மையாகும். 60 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கணனியை வைக்க ஒரு மிகப் பெரிய அறை தேவைப்பட்டிருக்கிறது. இப்போது இருப்பது போல வசதிகள் மொனிட்டர், கீபோர்ட், எதுவும் இல்லாத புள்ளிகளும் கோடுகளும் இணைந்து செயற்பட்ட முதல் கணனியின் எடை ஆயிரம் கிலோ. அந்தக் கணனியின் வேகமும் மிகவும் குறைவு. தற்போதைய சாதாரண கணனியின் நினைவாற்றல் அந்த முதல் கணனியின் நினைவாற்றலை விட 10 இலட்சம் மடங்கு அதிகம் என்றால் நினைத்துப் பாருங்கள். கணனித் துறையில் நீங்காத இடம்பெற்றுள்ள இவர் தன்னுடைய 36 வயதில் புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார். கணனியின் முன்னோடி அடாவின் நினைவைப் போற்றும் வகையில் அமெரிக்க பாதுகாப்புத்துறை 1980 இல் கணனி நிரல் மொழி ஒன்றுக்கு அடா என்று பெயர் சூட்டியது. பல வருடங்களுக்கு முன்னால் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது என்றாலும் இந்தச் சாதனை அதிகாரபூர்வமாக 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் திகதி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அந்த முதல் கணனி நிரூபித்த விநாடியே உலகில் மாபெரும் தொழில்நுட்ப, அறிவியல் விஞ்ஞான வளர்ச்சிக்கான பிள்ளையார்சுழி விநாடி எனலாம். அந்த விநாடியைப் போல உன்னதமான நிமிடம் என் வாழ்வில் வந்ததில்லை என அதைக் கண்டு பிடித்த பேராசிரியர் பிரடி வில்லியம்ஸ் ஒருமுறை குறிப் பிட்டிருந்தார். தற்போது அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள மொத்த கணனிகளின் எண்ணிக்கை உலகின் மற்ற எல்லா நாடுகளிலுள்ள கணனிகளின் எண்ணிக்கையை விட அதிகமாகும்.

வி.பிரணவன், யாழ்.
கலட்டி.

---


# சமூக சீரழிவைச் சுட்டிக்காட்டும் 'போதையை ஒழியடா' குறும்படம்

"மாவைக்கவி" கலையகமும் இடைக்காடு குறும்பட சிற்பிகள் கூடமும் இணைந்து தயாரித்து வழங்கிய பா.இரமணாகரனின் "போதையை ஒழியடா" எனும் குறும்படம் அண்மையில் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள "செல்வா பலஸ்" மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இளங்கலைஞர் பா. இரமணாகரன் மாவிட்டபுரத்தினைப் பிறப்பிடமாகவும் இடைக்காட்டினை வதிவிடமாகவும் கொண்டவர். மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்தில் சித்திர பாட ஆசிரியராகப் பணிபுரிபவர். சித்திரம், சிறுகதை ஆகிய துறைகளில் பல விருதுகளை வென்றவர்.

இக்குறும்படம் போதைப்பொருட்களால் ஏற்படும் விளைவுகளை, குறிப்பாக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை 33 நிமிடங்களில் சித்திரிக்கின்றது. எனினும் சமகால சமூக அவலங்களான வாள் வெட்டுக் கலாசாரம், வழிப்பறிக் கொள்ளைகள், நவீன தொடர்பாடல் தொழில் நுட்ப சாதனங்களின் வருகையால் குடும்ப உறவுகள் சிதைவடைதல் போன்ற பல்வேறு அம்சங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### அறுபதிற்கு மேற்பட்ட பாத்திரங்கள்

பெரும்பாலானவர்கள் மாணவர்கள் இக்குறும்படம் "ஓலைக்குடிசையிலே ஓய் வெடுக்கும் மனிதா மார் தட்டிப் பேசிவிட தைரியம் தேடு" எனும் இனிய பாடலுடன் ஆரம்பமாகின்றது. இப்பாடல்களை பா.இரமணாகரன் எழுதி R.சியாமளன் இசையமைத்து R.சந்திரராஜ் யதுஷன் பாடியுள்ளனர்.



"போதையை ஒழியடா தமிழா – அதற்கு

போதுமென்ற மனம் வேண்டுமோடா?

பாதையை மாற்றிடடா – பழி

தீர்க்கும் எண்ணத்தை விட்டிடடா"

எனும் பாடலுடன் "போதையை ஒழியடா" எனத் தீர்க்கமாகச் சொல்லி நிறைவு பெறு கிறது. பாடல் காட்சிகளில் யாழ்.மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற இடங்களான யாழ்ப்பாணக் கோட்டை பொதுநூலகம், சங்கிலியன் சிலை, மந்திரிமனை போன்ற பல்வேறு இடங் கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

போதைப் பொருட்களின் தீமைகள் பற்றி சட்டத்தரணி சுகாஸ் மாணவர்களுக்கு உரையாற்றும் காட்சியில் மாணவர்களை இலக்கு வைத்து மாவாப்பாக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனுடன் கைதாகும் மாணவர்கள் சிறைக்கோ அல்லது சீர்திருத்தப் பள்ளிக்கோ அனுப்பப்படுகின்றனர்.

அங்கு தொடர்ச்சியான குற்றங்களைச் செய்பவர்களை சந்திப்பதால் மேலும் குற்றவாளிகள் ஆகின்றனர் எனக் குறிப்பிடுகிறார். இடையிடையே பத்திரிகைச் செய்திகளை வாசித்து விமர்சனம் செய்யும் ஜனரஞ்சகமான பாத்திரமொன்று படைக்கப்பட்டுள்ளது.

தமிழ் சமூகத்தை சீரழிக்கும் சூழ்ச்சிகளை அறிவு பூர்வமாக அணுகி மீண்டும் பலம் பெற முடியும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

இரா.ஜெயக்குமார்

---

# உயிர்களைக் காப்பாற்றினால் சிறை! இது இத்தாலியக் கொடுமை

கடந்த 2017 ஆம் ஆண்டின் கோடைக்காலம் அது. மத்தியத் தரைக்கடல் பகுதியில் தொலைநோக்கியில் பார்த்தபடி தனது 'லுவேந்தா' கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்தார் பெண் கப்டன் பியா க்ளெம்ப். சுமார் ஐந்து கடல் மைல் தொலைவில் நான்கைந்து படகுகளில் பெரும் கூட்டம் ஒன்று தத்தளித்துக் கொண்டிருந்தது.

அவர்களை நோக்கி தனது கப்பலைச் செலுத்தினார் க்ளெம்ப். நெருங்கிச் சென்று பார்த்தால், லெபனான் நாட்டிலிருந்து கிளம்பிய அகதிகள் அவர்கள். குழந்தைகள், பெண்கள், வயதானவர்கள் எனச் சுமார் 1,000 பேர் கொண்ட கூட்டத்தில் பாதிப்பேர் உணவும் குடிநீரும் இல்லாமல் மயக்கத்தில் இருந்தனர். தன் கப்பலில் அவர்களை மீட்டு, அருகிலிருந்த நிலப் பகுதியான இத்தாலியின் லம்பேடுசா தீவில் பத்திரமாகத் தரையிறக்கினார் க்ளெம்ப்.

இப்படி இதுவரை இவர் காப்பாற்றியிருக்கும் மனிதர்களின் எண்ணிக்கை மட்டுமே ஆறாயிரத்தைத் தாண்டுகிறது. உலகமே இவரது சேவையைப் பாராட்டிவரும் நிலையில், இத்தாலி அரசு இவருக்கு 20 ஆண்டு சிறைத் தண்டனையுடன் 50,000 யூரோ டொலர் அபராதத்தையும் விதித்திருக்கிறது!

அகதிகளை மீட்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் சர்வதேசக் கடல் பரப்பில் விட்டிருக்கும் கப்பலின் கப்டன்தான் பியா க்ளெம்ப். ஜேர்மனியைச் சேர்ந்த 35 வயதுப் பெண்மணியான இவர் கடந்த பல ஆண்டுகளாகவே இந்தப் பணியைச் செய்து வருகிறார்.





இப்படியான நிலையில்தான் இவர் மீது இத்தாலிய அரசு, 'தன் நாட்டின் சட்டங்களை மீறியது, அகதிகள் சட்டவிரோதமாக இத்தாலிக்குள் நுழைய உதவியது' என்று குற்றங்களைச் சுமத்தி, அவரது கப்பலையும் பறிமுதல் செய்துள்ளது. இதைத் தொடர்ந்தே க்ளெம்ப்புக்கு இந்தத் தண்டனையை அறிவித்துள்ளது இத்தாலிய அரசு.

"பன்னாட்டு விதிகளின்படி நடுக்கடலில் உயிருக்குப் போராடும் குழந்தைகள், பெண்களைக் காப்பாற்றுவது ஒரு கப்பல் கப்டனின் தலையாயக் கடமை. அதைத்தான் நான் செய்தேன்" என்று தன் தரப்பை உறுதியாக எடுத்து வைக்கிறார் க்ளெம்ப். மேலும், தனக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் தண்டனைக்கு எதிராக ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தையும் அவர் அணுகவுள்ளார்.

க்ளெம்ப்பை இத்தாலிய அரசு குற்றவாளியாகப் பார்த்தாலும் மக்கள் அவரை 'ஹீரோ'வாகவே பார்க்கின்றனர். "மீட்புப் பணியாளர்களைத் தண்டிப்பது, நோயாளிகளை அம்புலன்ஸில் ஏற்றிச்செல்பவர்களைத் தண்டிப்பதற்குச் சமம்' என்கிறார் மெடைசன்ஸ் சான்ஸ் ஃப்ரெண்டியர்ஸ் என்ற சேவை அமைப்பின் தலைவர் க்ளாடியா லொடேசனி.


இதற்கிடையே க்ளெம்ப்பை தண்டனையிலிருந்து காப்பாற்ற பல்வேறு தன்னார்வ அமைப்புகள் FreePia ஹேஷ்டேக்கை முன்னெடுக்க... அந்தப் பிரசாரம் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. தவிர, அவருக்காக எழுதப்பட்ட மனுவில் இதுவரை 80,000 பேர் க்ளெம்ப்புக்கு ஆதரவு தெரிவித்து கையெழுத்திட்டுள்ளனர். ஒரு ஹோட்டல் 'பியா பியரை' அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு பியர் வாங்கினால், அதில் 50 யூரோ சென்ட் பியாவுக்கு நன்கொடையாகச் செல்லும்.

சிரியா, லெபனான், சூடான், ஏமன் நாடுகளில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்ததால், இத்தாலிக்கு வரும் குடியேறிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. இதுவரை 1.35 இலட்சம் வெளிநாட்டினர் அடைக்கலம் கேட்டு விண்ணப்பித்துள்ளனர். கடந்த 2018 ஜூன் மாதம் வலதுசாரிகள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் குடியேறிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. அகதிகள் முகாம்களில் இருந்த ஐந்து இலட்சம் பேரை நாட்டைவிட்டு வெளியேற உத்தரவிட்டது இத்தாலிய அரசு.

பின்னர் சட்டவிரோத குடியேறிகளின் வருகையைத் தடுக்க, உள்துறை அமைச்சர் மாட்டியோ சால்வினி, ஒரு சட்ட வடிவை முன்மொழிந்தார். அதன்படி இத்தாலியின் கடல் எல்லைக்குள் கப்பலோ, படகோ சட்டவிரோதமாகக் குடியேறிகளை ஏற்றிக்கொண்டு வந்தால், அதன் கப்டன் அல்லது கப்பல் உரிமையாளருக்குச் சிறைத் தண்டனை, 50,000 யூரோ வரை அபராதம் விதிக்கப்படும். இந்த ஆணை, குடியேறிகளின் உரிமைக்கு எதிரானது என்றது ஐ.நா. ஆனாலும், பிடிவாதமாக இந்த ஆணையைச் செயற்படுத்தி வருகிறது இத்தாலி.

இத்தாலியைப் போலவே, பல்வேறு ஐரோப்பிய நாடுகளும் மத்தியத் தரைக்கடலில் ஆயிரக்கணக்கான அகதிகள் மூழ்கிச் சாவதைக் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றன. சமீப காலமாக மத்தியத் தரைக்கடலில் பயணிக்கும் இத்தாலி, பிரான்ஸ் நாட்டுப் போர்க் கப்பல்கள், கடலில் வழிதவறியவர்களைக்கூட மீட்க முன்வருவதில்லை. மீனவர்களுக்கும் சாமானியர்களுக்கும் இருக்கும் மனித நேயம்கூட வலதுசாரி ஆட்சியாளர்களுக்கு இருப்பதில்லை. அதனால் தான், அவர்களை ஏதேச்சதிகார ஆட்சியாளர்கள் என்கிறோம்!

# அலறவிட்ட ஆப்கான் பையன்கள்



சென்ற வாரம் மழையோ மழை... இந்த வாரம் அதிர்ச்சியோ அதிர்ச்சி... உலகக் கோப்பை 2019 இல் இந்த வாரம் பரபரப்புக்குக் குறைவேயில்லை.

• "பாவம் இலங்கை... இங்கிலாந்துகிட்ட என்ன அடி வாங்கப்போகுதோ" என்று நினைத்தால், சிங்கத்தை அதன் குகையிலேயே வைத்துச் சின்னாபின்னமாக்கிவிட்டனர் லங்கன் லயன்ஸ். இதுதான் இந்தத் தொடரின் மிகப்பெரிய அதிர்ச்சி என்று நினைத்தால்... அடுத்த நாளே 'உள்ளேன் ஐயா' போட்டனர் ஆப்கான் போய்ஸ்!

• இந்திய அணியின் துடுப்பாட்டத்தைக் குலைத்து, 49 ஆவது ஓவர் வரை இலக்கை நெருங்கி மொத்த இந்திய ரசிகர்களின் வயிற்றிலும் புளியைக் கரைத்தது அந்தக் கத்துக்குட்டி அணி. ஷமியின் யார்க்கர்கள் வெற்றியைப் பறிக்காவிட்டால், சரித்திரம் படைத்திருக்கும் ஆப்கானிஸ்தான்.

• 'நீங்களெல்லாம் அப்செட் பண்ணினா அப்போ நாங்க யாரு' எனக் கிளம்பியது வெஸ்ட் இண்டீஸ்.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் 286 என்ற இலக்கைத் துரத்திய வெஸ்ட் இண்டீஸ், 164 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்துவிட்டது. இனி டெயிலெண்டர்ஸ் வந்து என்ன பண்ணப்போகிறார்கள்... ஆஃப் பண்ணுங்கடா டிவியை என்று நினைத்தபோது, தனி ஒருவனாக பட்டையைக் கிளப்பினார் பிராத்வெயிட். மான்செஸ்டர் மைதானத்தின் நாலாபுறமும் பவுண்டரிகளையும் சிக்ஸர்களையும் பறக்கவிட்டார். மெல்ல மெல்ல இலக்கை நெருங்க நியூசிலாந்து வீரர்களுக்கு இதயம் வாய்வழியே எட்டிப்பார்த்திருக்கும். 3 ஓவர்களுக்கு 33 ரன்கள் தேவை என்றபோது, மாட் ஹென்றியின் ஒரே ஓவரில் 25 ரன்கள் எடுத்து மொத்த உலகையும் மிரள வைத்தார் பிராத்வெயிட்.

• 2016 இருபது-20 இறுதிப் போட்டியில், ஸ்டோக்ஸுக்கு எதிராகத் தொடர்ந்து 4 சிக்ஸர்கள் அடித்தது தான் எல்லோருக்கும் நினைவில் வந்தது. மீண்டும் அதைச் செய்து விடுவார் என்று நினைத்தபோது பவுண்டரி லைனில் கட்சாகிவிட்டார். 5 ரன்களில் தோற்றது வெஸ்ட் இண்டீஸ். சில அங்குலங்கள் பந்து தள்ளிப் போயிருந்தால் போட்டியின் முடிவு மாறியிருக்கும்.



போட்டியின் முடிவு சாதகமாக இல்லையென்றாலும் இந்தப் போராட்டத்தின் மதிப்பு குறையப் போவதில்லை. அவரது இந்த இன்னிங்ஸ் நிச்சயமாக இந்த உலகக் கோப்பையின் பெஸ்ட் பட்டிங் பர்பாமென்ஸாக நினைவுகூரப்படும்.

• இலங்கை இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் வெற்றிபெறும் என்று யாரும் நினைக்கவில்லை. அதுவும் 232 ரன்னுக்கு ஓல் அவுட் ஆன பின், 1 சதவிகிதம்கூட அவர்களுக்கு வெற்றிவாய்ப்பு இல்லை என்றே எல்லோரும் கணித்தனர். ஆனால், தன் அனுபவத்தால் மொத்த மட்சையும் பரோட்டாவாகப் புரட்டிப் போட்டார் மலிங்க. முதல் ஸ்பெல்லில் விக்கெட், மிடில் ஓவரில் விக்கெட், கடைசி ஸ்பெல்லிலும் விக்கெட் என அணிக்குத் தேவையான நேரங்களிலெல்லாம் ஸ்டம்புகளைச் சிதறடித்தார்.

இந்த விக்கெட்டுகளை எல்லாம் தாண்டி, அவருடைய யார்க்கர்கள் தான் இங்கிலாந்து பட்ஸ்மேன்களைத் திணறடித்தன. ஓவருக்கு மூன்று அல்லது நான்கு பந்துகள் துல்லியமான யார்க்கர்களாக வீசினார். இஞ்ச்டேப் வைத்து அளந்து பார்த்தால் கூட மில்லி மீற்றர் பிசகாத துல்லியம். இலங்கைக்கு எல்லாம் ஓவர்... ஓவர்... என்று நினைத்த இடத்தில் அவரது இந்தச் செயற்பாடு ஒட்டுமொத்த இலங்கை அணிக்கு மட்டுமல்ல அந்த நாட்டுக்கே கிடைத்த எனர்ஜி டொனிக்!

• 'எந்த டீம் உத்வேகத்தோட ஆடினாலும், நாங்க மாறமாட்டோம். எங்க வேலை சொதப்புறது மட்டும் தான்' என உலகக் கோப்பையின் முதல் நாளிலிருந்து ஒரே மாதிரி ஆடிக்கொண்டிருக்கிறது தென்னாபிரிக்கா. ஏதோ நடுவில் ஆப்கானிஸ்தானிடம் ஜெயித்தவர்கள் மீண்டும் தோற்கத் தொடங்கிவிட்டனர். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் வழக்கம் போல் விளையாடித் தோல்வியடைந்த அந்த அணி, உலகக் கோப்பையிலிருந்தும் வெளியேறியுள்ளது. "இதுக்கெல்லாம் காரணம் ஐ.பி.எல்.தான்.

அதனால் தான் எங்கள் ப்ளேயர்ஸ் சரியாக ஆடவில்லை" என மொத்தப் பழியையும் இப்போது



ஐ.பி.எல். மேல் போட ஆரம்பித்திருக்கிறது அணி நிர்வாகம். சரி, ஏதாவது காரணம் சொல்லித்தானே ஆகணும்.

இருந்தாலும் இலங்கையுடனான போட்டியில் வென்று ஆறுதல் அளித்திருக்கிறார்கள்!

• இங்கேயும் வெஸ்ட் இண்டீஸ் வீரர்தான்! நமக்குக் கன்டென்ட் கொடுக்காவிட்டால் இவர்களுக்குத் தூக்கம் வராது போல. இந்த வாரம் ரணகளம் செய்தது வேறு யாருமில்லை, கிறிஸ் கெய்ல்.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் ராஸ் டெய்லர் விக்கெட்டை வீழ்த்திய கெய்ல், சந்தோஷத்தில் எகிறிக் குதித்துக் கொண்டாடினார்.

குதிக்கும் போது கையில் பலமாக வெற்றிக்குறி போட்டவருக்கு, லேண்ட் ஆனதும் தோள் பட்டையில் வலி எடுக்கத் தொடங்கிவிட்டது.

'கிரிக்கெட்ல இதெல்லாம் சகஜமப்பா' என வழக்கம்போல் அப்படியே சிரித்துச் சமாளித்துவிட்டார் யுனிவர்சல் பாஸ்.

• இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஹர்த்திக் பாண்ட்யாவுக்கு பயிற்சி தர தயாராக இருப்பதாக, முன்னாள் பாகிஸ்தான் அணி வீரர் அப்துல் ரசாக் தெரிவித்துள்ளார்.

வெஸ்ட் இண்டீஸுக்கு எதிராக நடந்த லீக் போட்டியில், இந்திய அணியின் ஓல்-ரவுண்டர் வீரர் ஹர்த்திக் பாண்ட்யா 48 ஓட்டங்கள் விளாசினார்.

ஆனால், அவரது துடுப்பாட்டத்தில் டெக்னிக்கலாக தவறு இருப்பதாக கூறி முன்னாள் பாகிஸ்தான் வீரர் அப்துல் ரசாக் தெரிவித்துள்ளார்.

• உலகக்கோப்பை தொடரில் இந்திய அணி தொடர்ந்து வெற்றிகளை குவித்து வருவதற்கு டோனி தான் முக்கிய காரணம் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் லட்சுமணன் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை தொடரில் கோலி தலைமையிலான இந்திய அணி மிரட்டலான ஆட்டத்தை கொடுத்து வருகிறது.

இந்த தொடரில், டோனியின் மந்தமான ஆட்டம் பல விமர்சனங்களை பெற்றிருந்தாலும், டோனி தான் இந்திய அணியின் துருப்புச் சீட்டு என்று முன்னாள் வீரர் லட்சுமணன் கூறியுள்ளார்.

• உலகக் கோப்பையில் விளையாடும் இந்திய கிரிக்கெட் அணியின் சீருடை மாற்றப்பட்டுள்ளது.

நைக் நிறுவனம் இந்திய கிரிக்கெட் அணியின் புதிய சீருடையை வெளியிட்டுள்ளது.


உலகக் கோப்பை தொடரில் இன்று இந்திய அணி, இங்கிலாந்து அணியை மிக முக்கியமான போட்டியில் சந்திக்கிறது. இந்தப் போட்டியில் இந்திய அணியின் சீருடை மாறுகிறது.

# தெளிவு

அன்பார்ந்த சங்குநாத வாசகர்களுக்கு அன்பான ஜிம்மிக்குட்டியின் இனிய காலை வணக்கங்கள். இப்ப கொஞ்ச நாளாய் காலைப் பொழுதுகள் நல்ல இதமான குளுமையோடை ஆரம்பிக்குது. ம்...ம்...கொஞ்சம் பொறுத்திருங்கோ எல்லாரும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிற மாரியாச்சி வரப் போறா. என்ன... யோசிக்கிறியள்...விளங்கேல்லையோ. அதுதான் மாரி எண்டால் மழைதானே. அதுவும் எங்கடை தாய்தானே. தண்ணீர்த் தாகம் தீர்க்கிற மாரியாச்சியைத்தான் சொல்லுறன். நிலமெல்லாம் பாளம் பாளமா வெடிச்சுக் கிடக்கு. பெரிய கல் வீடுகளெல்லாம் போறணை மாதிரிக் கிடக்கு. மரங்களும் கருகி ஒரே பாலைவனம் தான். ஆனாலும் எங்கடை சனம் தண்ணியை எவ்வளவு எழும்புது போல. இண்டைக்குப் பின்னேரம் வர இருந்தனான். ம்...சொல்லு என்ன விசயம்..."

பெரியவர் பிள்ளையார் சுழி போட்டிட்டு ஒரு கொக்கி மாதிரி திறந்த வினாவிலை முடிச்சிருக்கிறார். என்ன யோசிக்கிறியள்... உளவியலில மூடிய வினா-திறந்த வினா எண்டு ரெண்டு விசயம் இருக்காம். நல்ல ஆரோக்கியமான உரையாடலுக்கு திறந்த வினா எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் விரிவாக, விளக்கமாக விசயத்தை முன்வைக்க உதவும். இதெல்லாம் அந்த யூனிவசிட்டி உளவியல் பிள்ளைகள் வந்து கதைக்கிறதிலை பொறுக்கின விசயம். ம்...ம்...கேப்பம்... சின்னாம்பியண்ணை தொடங்கிறார்.

"ஒரு சின்ன விண்ணப்பம் 'அண்ணை' எண்டு கூப்பிடப்டே...மற்ற மாதிரிக்னம் எண்டால் எல்லாரும் உதைபந்தாட்டம், கிரிக்கெட், கோஷ்டி அது இது எண்டு வைக்க முன்வருவினம். அதாலை பிரச்சினையள் வரும். எங்கடை குஞ்சுகளின்ரை கண்ணாடி மாளிகை, நீச்சல் குளம், விளையாட்டு முற்றம், பூங்கா, காய்கறித் தோட்டம் எல்லாம் சின்னா பின்னப்படுத்திப் போடுவினம் எண்டுதானே பயப்படுறியள் அண்ணை. அதுக்கும் என்னட்டைத் திட்டம் இருக்கு. தியான மண்டபம் கட்டுவம் எல்லே அதிலை எங்கடை இளைஞர், யுவதிகள், முதியவர் எண்டு எல்லாரையும் கூப்பிட்டு அறக்கருத்து, யோகா, தியானம் எண்டு வைக்கப் போறம். அது மட்டுமில்லை, பெரிய நாடக விழாக்கள் எல்லாம் வைக்கப் போறன். பகிடி என்னவெண்டால் ஒழுங்கு, கட்டுப்பாட்டைக் கவனிக்கப் போறவை



வீணாக்குது. எங்கடை சாதியை விடுங்கோ...எங்களுக்கு நடுக் கடலிலும் நக்குத் தண்ணிதானே. ம்...பெரியவர் சாப்பிட்டுத் தண்ணி குடிக்கிறார்.

கேற் திறக்குது. ம்... அண்டைக்கொரு நாள் வாடிச்சுருண்டு பைத்தியக்காரன் மாதிரி வந்தார் சின்னத்தம்பி அண்ணை. அவர் தான் அட என்ன ஒரு கம்பீரம். பளிச்சென்று உடையும் ஒரு படிச்ச மனிசனுக்குரிய நிமிர்வும் பெரியவர் கதிரையைக் கிட்ட இழுத்துப் போட்டு இருக்கச் சொல்லுறார். நல்ல ஆறுதியா இரண்டு பேரும் கதைக்கத் தொடங்கினம். வாரிசுகளும்...அதுதான் இரண்டு பேரின்ரை மாணாக்கர்களும் சுற்றிவர திண்ணையிலை இருக்கினம் ...விசயம் ஏதோ பெரும் எடுப்பிலைதான் நடக்கப் போகுது பார்ப்பம்.

"என்ன சின்னாம்பி... வலு கலாதியா வந்து நின்கிறாய். தட்சணாமூர்த்தி சபைக்கு வார மாதிரி. கட்டடம் கிசுகிசு எண்டு கூப்பிட ஏதோ அந்நியமாத் தெரியுது..." பெரியவர் வாய் விட்டுச் சிரிக்கிறார்.

"எட பைத்தியக்காரா இதுக்கே இப்பிடிப் பதுங்கினனி...நீ கேட்டால் என்ன கேக்காட்டி என்ன-நீ என்ரை தம்பிதானடா. ம்...சொல்லு"

பாத்தியளே அன்பு, பாசம், பண்பு, அறிவு இதுதான் பெரிய மனுசத்தனம் எண்டிறது...மனம் நிறைஞ்ச பாசத்தின்ரை வெளிப்பாடு தான்.

"ஓமண்ணை வேலையள் வலு வேகமாகப் போகுது. மழைக்கு முன்னம் கூரை வேலை முடிக்க வேணும். சரி...சரி நான் வந்தது... விளையாட்டு மைதானத்தைக் கொஞ்சம் பெரிசாப் போட்டால் என்ன...எங்கடை ஊருக்குள்ள பெரிசா வேறை ஒண்டும் இல்லையண்ணை..." பெரியவர் ஆச்சரியமாப் பார்க்கிறார். கொஞ்சம் யோசிக்கிறார். பிறகு ஏதோ சொல்லத் தொடங்கி சின்னாம்பியண்ணை குறுக்கிடுறார்.

"அண்ணை எனக்கு விளங்குது. பெரிய மைதா இந்த யோகா, ஆன்மீகச் சிந்தனையை ஊட்டி வளர்க்கப் போற எங்கடை இளம் சமுதாயம் தானண்ணை. இப்ப சொல்லுங்கோ கண்ணாடி உடையுமோ கல்லுகள் வருமோ பூக்கள் சிதையுமோ... சொல்லுங்கோ...?"

கடவுளே...என்ன வேகம். மூச்சு வாங்கிறார். பெரியவர் எழும்பி அப்பிடியே கட்டிப் பிடிக்கிறார்...


"சின்னாம்பி...என்ரை கனவுகளை நனவாக்க வந்த சிற்பியடா. எத்தனை பெரிய தொலைநோக்கு. எத்தனை தீர்க்கதரிசனத்தோடை, சிந்தனைத் தெளிவோடை கோவையா வினையும் அதன் விளைவும் பார்த்து திட்டமிட்டிருக்கிறாய். ஐயா... நீ நல்லா இருப்பியடா"

ம்...இதுதான் செயற் வீரர்களுக்கு அழகு. ம்... அநேகமாக என்னைத்தான் காவலுக்குப் போடுவினம் போல. சரி வாறன்.

**திருமதி.பாரதி கனேஷ்**
**சுன்னாகம்.**

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : முதலாளி
இயற்றியவர் : கா.மு.ஷெரீப்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்





ஏரிக்கரையின் மேலே
போறவளே பெண் மயிலே
என்னருமை காதலியே
என்னை கொஞ்சம் பாரு நீயே
என்னருமை காதலியே
என்னை கொஞ்சம் பாரு நீயே
அன்னம் போல நடை நடந்து
சென்றிடும் மயிலே
அன்னம் போல நடை நடந்து
சென்றிடும் மயிலே
ஆசை தீர நில்லு கொஞ்சம்
பேசுவோம் குயிலே
ஆசை தீர நில்லு கொஞ்சம்
பேசுவோம் குயிலே

தென்னைமர சோலையிலே
சிட்டு போல போற பெண்ணே..ஏ..ஏ.......அ.....
தென்னைமர சோலையிலே
சிட்டு போல போற பெண்ணே
சிட்டு போல போற பெண்ணே
நில்லு கொஞ்சம் நானும் வாறேன்
சேர்ந்து பேசி போவோம் கண்ணே
நில்லு கொஞ்சம் நானும் வாறேன்
சேர்ந்து பேசி போவோம் கண்ணே
அன்னம் போல நடை நடந்து
சென்றிடும் மயிலே
அன்னம் போல நடை நடந்து
சென்றிடும் மயிலே
ஆசை தீர நில்லு கொஞ்சம்
பேசுவோம் குயிலே
ஆசை தீர நில்லு கொஞ்சம்
பேசுவோம் குயிலே

மாமர தோப்பினிலே
மச்சான் வரும் வேளையிலே
மச்சான் வரும் வேளையிலே
மாமர தோப்பினிலே
மச்சான் வரும் வேளையிலே
கோபம் கொண்ட மானை போலே
ஓடலாமோ பெண் மயிலே
கோபம் கொண்ட மானை போலே
ஓடலாமோ பெண் மயிலே
அன்னம் போல நடை நடந்து
சென்றிடும் மயிலே
அன்னம் போல நடை நடந்து
சென்றிடும் மயிலே
ஆசை தீர நில்லு கொஞ்சம்
பேசுவோம் குயிலே
ஆசை தீர நில்லு கொஞ்சம்
பேசுவோம் குயிலே.

# சிந்துபாத் விமர்சனம்



விஜய் சேதுபதியின் படங்கள் என்றால் மக்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். ஆனால் அண்மைக்காலமாக அவரின் படங்கள் பணப்பிரச்சினைகளால் ரிலீஸ் விடயத்தில் சிக்கல் நிலவுகிறது. அப்படித்தான் தற்போதும். இந்த சிந்துபாத் வெளியாக வேண்டிய நாளில் வராமல் படம் தள்ளிபோய் இப்பொழுது களத்தில் இறங்கியுள்ளது. படம் எப்படி என பார்க்கலாம்.

கதைக்களம்

விஜய் சேதுபதி ஊரில் அனைவரும் அறிந்த திருடன். அவருடன் சூர்யா என்ற குட்டிப் பையன் அவரின் ஆதரவாக இருந்து வருகிறார். இவர் வேறு யாருமல்ல அவரின் நிஜ மகன். சேதுபதிக்கு காதில் வேறு சற்று பிரச்சினை. ஏதோ ஒரு பிழைப்பு. ஏதோ ஒரு வாழ்க்கை என இருந்தாலும் ஜாலியாக கொண்டு செல்கிறார்.

அதே ஊரில் சாதாரண குடும்பத்து பெண்ணாக அஞ்சலி. ஒருநாள் இவரை எதேச்சையாக சேதுபதி பார்த்துவிட காதல் வயப்படுகிறார். அஞ்சலி பேசினால் ஊரே கேட்கும் என்பது போல சத்தமான குரல். ஆனால் இவர் செய்யும் அட்டகாசம் குறும்புத்தனம்.

இப்படியிருக்க எப்படியோ ஒருவழியாக இவரும் அவரின் மேல் காதலில் விழுகிறார். இதற்கிடையில் வேலைக்காக தாய்லாந்து செல்கிறார். அங்கு ஒரு பெரும் சமூக விரோத சம்பவமே நடைபெறுகிறது.

அஞ்சலி அதில் சிக்க விடயம் தெரிந்து அதிர்ச்சியான விஜய் சேதுபதி அவர் இருக்கும் இடத்தை தேடி பயணப்படுகிறார். அங்கு இவரும் வேறொரு பிரச்சினையில் மாட்டிக் கொள்ள. போன காதலி என்ன ஆனார். என்ன பிரச்சினை. சமூக நீதி கிடைத்ததா. வாழ்க்கையில் இருவரும் இணைந்தார்களா என்பதே இந்த சிந்துபாத.

விஜய் சேதுபதி எப்போதும் நல்ல கதைகளை தேர்ந்தெடுத்து நடிப்பவர். அப்படியானவருக்கு கையில் சிக்கியது இந்த சிந்துபாத். படத்திற்கு படம் வித்தியாசமான நடிப்பை வெளிப்படுத்தும் அவர் இந்த படத்திலும் காட்டியுள்ளார். காது கேளாமை என்றாலும் அவரின் செய்கை. நடந்து கொள்ளும் விதம் என கரக்டரில் ரியல் பிரதிபலிப்பு.

அவருடன் இப்படத்தின் மூலம் அவரின் மகனும் சினிமாவில் நடிக்க தொடங்கியுள்ளார். அப்பாவை போல பிள்ளை என்பது சரியாக தான் இருக்கிறது. சிறு பையன் என்றாலும் நடிப்பை உள்வாங்கி கடைசிவரை தன் அப்பாவுடன் கதையில் டிராவல் செய்கிறார். மகனுக்கு சேதுபதி நல்லா கிளாஸ் எடுத்திருப்பார் போல.

அஞ்சலி பற்றி சொல்ல வேண்டாம். அனுபவம் வாய்ந்த நடிகை. அவரின் திறமைக்கு இப்படம் ஒரு நல்ல வாய்ப்பு. சத்தம் போட்டு பேசுவது அவரின் நச்சுரல் ஸ்டைல் போல. சில இடங்களில் அவரின் ரியாக்சன் அங்காடி தெரு படத்தின் பார்த்ததை போல உணரலாம்.

இவர்களோடு பலரும் அறிந்த விவேக் பிரசன்னா முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். வழக்கம் போல அவ்ரும் தனக்கான இடத்தை படத்தில்பில் பண்ணி விடுகிறார்.

படத்தின் இயக்குநர் அருண் குமார் சிந்துபாத் மூலம் நவீன அழகு மருத்துவம் என்ற பெயரில் உலகளவில் நடக்கும் பெரும் அநியாயத்தை வெளிச்சம் போட்டு காட்டி மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

தாய்லாந்து. தென்காசி என ஒளிப்பதிவாளர் காட்சிகளை படம் பிடித்த விதம் இயற்கையாக அமைந்துள்ளது படத்திற்கு கூடுதல் பலம். யுவனின் இசை படத்தின் ஓப்பனிங் தீம் மூலம் எண்ட் வரை கதைக்கு பொருத்தமான உணர்வுகளை தருகிறது. பாடல்களும் ஓகே..

விஜய் சேதுபதியின் சின்ன சின்ன ரியாக்ஷன் கூட இம்பிரஸன். அஞ்சலியின் எமோஷலான நடிப்பு. இருவருக்குமான ரொமான்ஸ் சுப்பர். சூர்யா விஜய் சேதுபதியின் குட்டி குட்டி காமெடி செய்கை படத்தில் எனர்ஜட்டிக்.

படம் நீண்ட கால அளவாக சிலருக்கு தெரியலாம். அதனால் பொறுமையாக கடைசி வரை பார்க்க வேண்டும். மொத்தத்தில் சிந்துபாத் தாமதாக வந்தாலும் சரியான அட்டம்ட். மக்கள் தெரிந்து கொள்ள வேண் டிய விழிப்புணர்வை காட்டிய இயக்குநருக்கு நன்றி.




இலங்கையிலிருந்து, கடந்த 2019 மே 29 ஆம் திகதி 20 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுடன் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஆட்கடத்தல் படகு ஒன்று தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- கடந்த ஐந்து ஆண்டுகளில், அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த அனைத்து ஆட்கடத்தல் படகுகளின் நடவடிக்கைகளும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.
- சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் அனைவரும் நிச்சயம் கைது செய்யப்படுவார்கள்.
- சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவில் குடியேறுவதற்கு உங்களுக்கு எந்தவித வாய்ப்பும் கிடையாது.

Australian Government

சைபர் வாய்ப்புக்கள்

# தேசிய அளவில் பரிணமித்த கல்முனை விவகாரம்

"கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரம் தீவிரமடைந்து, மூவின மககளிடையேயும் மனக் கசப்பையும் வெறுப்புணர்வையும் வளர்த்துச் செல்கின்ற ஒரு மோசமான நிலைமை உருவாகி இருந்த போதிலும், அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் இந்த விடயத்தில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருவது கவலைக்குரியது."




கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி நடத்தப்பட்ட போராட்டமும், அதனை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமும் இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லுறவு மோசமடைந்து செல்வதைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றன.

இந்த செயலகத்தை முழுமையான தொரு பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை மூன்று தசாப்தங்களாக நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு அரசு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்தி, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பௌத்த, இந்து மதங்களின் தலைவர்கள் இரண்டு பேருடன், கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள் இரண்டு பேரும், தமிழ் வர்த்தக சங்கப் பிரமுகர் ஒருவரும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று தினங்களுக்குப் பின்னர், இதற்கு எதிரான போராட்டம் ஒன்றை முஸ்லிம்கள் ஆரம்பித்திருந்தார்கள். இதனால், கல்முனை விவகாரம் சமூக, அரசியல் மட்டங்களில் மட்டுமல்லாமல், மத ரீதியான மட்டத்திலும் சூடு பிடித்தது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக தமிழர் தரப்பில் பல இடங்களிலும் அடையாள போராட்டங்களும் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து கல்முனை பிரச்சினை தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பரிணமித்தது.

இந்தப் போராட்டங்களில் மூவின மக்களும் பங்கேற்றிருக்கின்றார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலகமாக, தரமுயர்த்துவதன் மூலம் அந்த செயலகப் பிரிவுக்கு உட்பட்ட தமிழ் மக்களின் அபிவிருத்தி மற்றும் நிர்வாக ரீதியான பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பது தமிழ் மக்கள் சார்பிலான கோரிக்கையாகும்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து பௌத்த துறவிகளும், இந்து குருக்களும், தமிழர்களும் அவர்களுடன் சிங்களவர்களும் கூட, உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். அம்பாறை மாவட்டத்தில் கல்முனை முக்கியத்துவம் மிக்க தங்களுடைய நகரம் என்றும், அந்த நகரத்தை உள்ளடக்கிய கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தமிழ் மக்களுக்கானதாக விட்டுக் கொடுக்க முடியாது என்பது அங்குள்ள முஸ்லிம்களின் நிலைப்பாடு.

இதனால் தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றக் கூடாது என்று அவர்கள் எதிர்க்கின்றார்கள். அத்துடன் தரமுயர்த்தலுக்கான போராட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அவர்களும் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்கியிருந்தார்கள்.

இந்தப் போராட்டத்தின் பின்னணியில் இன, மத ரீதியான அரசியல் மட்டுமல்லாமல், ஆக்கிரமிப்பு அரசியலும் இழையோடியிருக்கின்றது. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே, சாகும் வரையிலான இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளதாக கல்முனை ஸ்ரீசுபத்திராராம மகாவிகாரையின் விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரர் தெரிவித்திருந்தார்.

உள்ளூர் மதத் தலைவர்களினாலும், வர்த்தகப் பிரமுகர் உட்பட, உள்ளூராட்சி மன்ற அரசியல் பிரமுகர்களினாலும் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மக்களும், சிங்கள மக்களும்கூட இந்தப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் போராட்டம் கல்முனை வடக்கு உப பிரதேச செயலக முன்றலில் நடத்தப்பட்டு வந்தது. அதே வேளை, அங்கிருந்து சுமார் அரைக் கிலோ மீற்றர் தொலைவுக்கும் உட்பட்ட இடமாகிய கல்முனை நகரின் பழைய பேருந்து நிலையப் பகுதியில் முன்னைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று தினங்களின் பின்னர், எதிர்ப் போராட்டத்தை முஸ்லிம்கள் ஆரம்பித்திருந்தார்கள்.

முப்பது வருடங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்ற கல்முனை வடக்கு உப செயலகத்தைத் தரமுயர்த்த வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையை வலியுறுத்தி சிறியளவில் முன்னர் போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்த போதிலும், பௌத்த மதகுரு ஒருவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரையிலான இந்த உண்ணாவிரதப் போராட்டமே கொழும்பையும் விழித்தெழச் செய்தது. தேசிய அளவில் அனைவரையும் கல்முனையை நோக்கித் திரும்பிப் பார்க்கச் செய்திருக்கின்றது. கிழக்கு மாகாணத்தை சமூக ரீதியாகவும் மத ரீதியாகவும் கொதிநிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

கல்முனை நகரில் முஸ்லிம் வர்த்தகர்களே பெரும்பான்மையாக இருக்கின்ற போதிலும், அவர்களோ, அல்லது கல்முனை வடக்குக்கு உட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் கிராமவாசிகளோ பூர்வீகக் குடிகளல்ல என்றும், வர்த்தக நோக்கங்களுக்காக வருகை தந்த முஸ்லிம்களே இங்கு பல்கிப் பெருகியுள்ளதாகவும் அங்குள்ள வயதில் மூத்தவர்கள் கூறுகின்றனர்.

கல்முனை நகரில் வர்த்தக நிலையங்களை அமைத்தும், தமிழர்களின் சொத்துக்களாக இருந்தவற்றை காலத்துக்குக் காலம் நிலவிய அரசியல், இராணுவ, பொருளாதார நெருக்கடிகள் மிகுந்த சூழலைப் பயன்படுத்தி அவற்றைக் கொள்வனவு செய்து குடியேறியதாகவும் அவர்கள் கூறுகின்றார்கள். இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்கள் பல யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர்களுக்குச் சொந்தமாக இருந்தன என்றும் அவர்கள் நினைவுகூர்கின்றார்கள்.

சுனாமி பேரலைகள் கடலோரத்தைத் தாக்கியதையடுத்து, கல்முனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட சுனாமி குடியிருப்புக்களில் இரவோடு இரவாக அப்போது அரசியல் செல்வாக்கு பெற்றிருந்த அரசியல்வாதிகளினால் முஸ்லிம் குடும்பங்கள் கொண்டு வந்து குடியேற்றப்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

இந்தப் பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருந்த முஸ்லிம் உறுப்பினர்கள், தமிழ்க் கிராமங்களிடையே முஸ்லிம்களின் பெரும்பான்மை பலத்தை உருவாக்கும் நோக்கில் திட்டமிட்ட வகையில் குடியேற்றக் கிராமங்களை உருவாக்கியதாகவும், தமிழ் அரசியல்வாதிகளும்கூட முஸ்லிம்கள் தமிழர்கள்தானே என்ற எண்ணப்போக்கில் இந்த நடவடிக்கைகளை கவனத்திற்கொண்டு அவர்கள் கவனத்திற் கொள்ளாதிருந்ததாகவும் இதன் பயனாகவே இன்று பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன என்றும் அங்குள்ள மூத்த பிரஜைகள் குறிப்பிடுகின்றார்கள்.

இத்தகைய திட்டமிட்ட வகையிலேயே அம்பாறை மற்றும் கல்முனை பிரதேசங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமானதும், அவர்களின் பயன்பாட்டில் இருந்தவையுமான மேய்ச்சல் நிலங்களும் முஸ்லிம் மக்களினால் படிப்படியாக கையகப்படுத்தப்பட்டதாக அவர்கள் நினைவுகூர்கின்றார்கள்.

இந்த மேய்ச்சல் தரைகள் தொடர்பில் கடந்த காலங்களில் இரண்டு சமூகங்களிடையேயும் தொடர்ச்சியாகப் பிரச்சினைகள் இருந்து வந்ததையும், அவற்றுக்கு சமூக மட்டத்திலோ அல்லது அரசியல் வழிமுறையிலோ தீர்வு காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டபோது, முஸ்லிம் மக்களுக்கான பிரதேச சபைகள் உருவாகும் வகையிலேயே எண்ணிக்கை அடிப்படையில் கிராம சேவை பிரிவுகள் தொகுக்கப்பட்டிருந்தன என்ற விபரத்தையும் ஊர்ப்பிரமுகர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். இங்கு 6, 7 கிராம சேவை பிரிவுகளைக் கொண்டதாக முஸ்லிம் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்ட போதிலும், தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராம சேவை பிரிவுகள் 12, 13 என்று எண்ணிக்கையில் அதிகமாக இருந்த போதிலும், அவற்றை ஒன்றிணைத்து தமிழ் பிரதேச சபைகளை உருவாக்குவதற்கான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட வரலாற்றையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

கல்முனை மற்றும் அம்பாறை மாவட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழர்களான மூத்த பிரஜைகள் தெரிவித்துள்ள இந்தத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரிகளும், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளும், தமிழ் அரசியல் தலைவர்களும் முன்வர வேண்டும்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடையே குடியிருப்புக் காணிகள் மேய்ச்சல் தரைகள் உள்ளிட்ட காணிப்பிரச்சினைகள் தொடர்பில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இருதரப்பினரிடையேயும் சமூக மட்டத்தில் ஓர் இணக்கப்பாட்டை எட்டச் செய்வது அவசியமாகும்.

கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரம் தீவிரமடைந்து, மூவின மக்களிடையேயும் மனக் கசப்பையும் வெறுப்புணர்வையும் வளர்த்துச் செல்கின்ற ஒரு மோசமான நிலைமை உருவாகி இருந்த போதிலும், அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் இந்த விடயத்தில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருவது கவலைக்குரியது.

இந்த விவகாரம் குறித்து ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்ற போதிலும், உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பின்னால் பௌத்த துறவிகளின் உண்ணாவிரதப் போராட்ட அணுகுமுறை வலிமை பெற்று வந்துள்ள ஒரு சூழலில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மூன்று மாதங்கள் செல்லும் என்று அரச தரப்பில் கூறியிருப்பது பொருத்தமான நடவடிக்கையாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தை அல்லது இந்த நடவடிக்கைக்கான தீர்மானத்தை தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள், ஆட்சியாளர்களிடம் ஆமாம் சாமி போட்டு தலையாட்டிக் கொண்டு, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களிடம் அதனை எடுத்துச் சென்றபோது இடம்பெற்ற சம்பவங்களை நாடே அறியும். உலக நாடுகளும் அறியும்.

உண்ணாவிரதப் போராட்டத்துக்குத் தலைமை ஏற்றிருப்பவர்கள் உண்மையிலேயே பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற இதயசுத்தியுடன் ஈடுபட்டிருந்தார்களா அல்லது வெளிச்சக்திகள் ஏதேனும் பின்னால் செயற்படுகின்றதா என்ற ஐயப்பாடு இயல்பாகவே ஏற்பட்டிருக்கின்றது.

கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துகின்ற பிரச்சினையைவிட எத்தனையோ பிரச்சினைகளுக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்கள் குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்கொண்டிருந்த போது, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இத்தகைய தலைமையும் வழிகாட்டல்களும் உருவாகியிருக்கவில்லை.

மாறாக உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர், முஸ்லிம் மக்கள் பாதுகாப்பு ரீதியான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஒரு சூழலில், சிங்கள பௌத்த தேசிய தீவிரவாதிகளின் வன்முறைகளுக்கும், இன மத ரீதியான வெறுப்புணர்வுக்கும் ஆளாகியுள்ள ஒரு தருணத்தில், பௌத்த துறவிகளின் ஆளுமை இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் செல்வாக்கு பெற்றிருப்பதென்பது, தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே ஆழமான பிளவை ஏற்படுத்தி இரண்டு தரப்பினரையும் அடக்கியொடுக்குகின்ற பேரினவாதிகளுடைய மேலாண்மை நடவடிக்கையின் ஒரு தந்திரோபாய நடவடிக்கையாகவே அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

தேசிய அளவில், இது ஓர் ஆபத்தான சமூக, இன, மதவாதம் சார்ந்த ஓர் அரசியல் நகர்வு என்றும் இது இந்த நாட்டின் மூன்று சமூகங்களையும் பாதிக்கத்தக்க செயற்பாடு என்றும் அவர்கள் சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்திருப்பதைக் காண முடிகின்றது. குறுகிய அரசியல் இலாபங்களைக் கருத்திற் கொள்ளாமல் தேசிய நலனைக் கவனத்திற் கொண்டு, ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் தீர்க்கமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். இது இன்றைய சூழலில் அவசியமானது.

facebook

# உலகின் கண்களுக்கு தெரியாமல் போன இலங்கைத் தமிழர் மூவர்!



இன்று "பிக்போஸ்" பற்றித் தெரியாதவர்கள் குறைவு எனலாம். பிக்போஸ் சீசன் 3-இல் பங்கேற்றுள்ள லோஸ்லியா, தர்ஷன் ஆகிய இலங்கைத் தமிழர்களை அறிந்து கொண்ட தமிழகம் பாஸ்கரன், ரமேஷ், செல்வம் என்கிற 3 இலங்கைத் தமிழர்களைப் பற்றி தெரிந்து கொண்டதா? என்ற குமுறல் பதிவு ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

வெளிநாடுகளில் அதிக பார்வையாளர்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக இலங்கைத் தமிழர்கள் 2 பேரை இம்முறை களமிறக்கி விட்டிருக்கிறது விஜய் தொலைக்காட்சி. பிக்போஸ் சீசன் 3இல் இலங்கைத் தமிழ் செய்தி வாசிப்பாளர் லோஸ்லியா மற்றும் தர்ஷன் ஆகியோர் இணைந்துள்ளனர். இது அப்பட்டமான வணிக நோக்கம் தான் என்னும் விமர்சனம் ஒருபக்கம் முன்வைக்கப்பட்டு வருகிறது.

அதேநேரத்தில் தமிழகத்தில் இன்னமும் சிறப்பு முகாம்களில் போராடும் இலங்கைத் தமிழர்களையும் தர்ஷன், லோஸ்லியாவையும் முன்வைத்து முன்னாள் போராளியான பாலன் சந்திரன் என்பவர் எழுதிய பதிவு ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. அப்பதிவு விவரம் வருமாறு.

இலங்கைத் தமிழர் மூவர் போராட்டம் நடத்தி வருகின்றனர். தர்ஷன், லோஸ்லியா, பாஸ்கரன், ரமேஷ், செல்வம் அனைவரும் இலங்கைத் தமிழர்கள். இவர்களில் தர்ஷன், லோஸ்லியா இருவரும் பிக்போஸ் நிகழ்வில் கலந்து கொள்வதால் விஜய் தொலைக்காட்சி மூலம் பல கோடி தமிழர்கள் இவர்களை அறிந்து கொண்டுள்ளனர். இந்த இருவரையும் அறிந்துள்ள பல தமிழர்களுக்கு பாஸ்கரன், ரமேஷ், செல்வம் ஆகியோர் யார் என்று தெரிந்திருக்கவில்லை.

ஆனால் வைகோ அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. திருச்சி சிறப்பு முகாமில் இந்த மூவரும் கடந்த ஆறு நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்கள் என்பதும் தெரிந்திருக்கிறது. தெரிந்தது மட்டுமன்றி இந்த அப்பாவி இலங்கை அகதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு அவர் அறிக்கை விட்டிருக்கிறார்.

வைகோ எம்.பி. இல்லை. அவரது கட்சி ஆட்சியிலும் இல்லை. ஆனாலும் அவர் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக அறிக்கை விட்டிருக்கிறார். இப்போது தேர்தல் இல்லை. இருந்தாலும் இலங்கைத் தமிழர் பற்றி பேசுவதால் அது வைகோவுக்கு பயன் தரப் போவதில்லை. இருந்தாலும் அவர் அறிக்கை விட்டிருக்கிறார். அதுவும் 2008ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களுக்காக பேசியதற்காக அவர் மீது போடப்பட்ட தேசவிரோத வழக்கு விசாரணை ஒருபுறம் நடந்து கொண்டிருக்க மறுபுறம் அது பற்றி கவலைப்படாமல் மீண்டும் இலங்கைத் தமிழர்களுக்காக அறிக்கை விட்டிருக்கிறார்.

அண்மையில் இலங்கையில் இருந்து மாவை சேனாதிராசா எம்.பி தமிழகம் வந்து ஸ்டாலினைச் சந்தித்தார். இதே ஸ்டாலினை இலங்கைக்கு வரும்படி முன்னாள் மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் அழைத்திருக்கிறார்.

இந்த இலங்கைத் தமிழ்த் தலைவர்களும் சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டிருக்கும் இலங்கை அகதிகளை விடுதலை செய்யுமாறு இந்திய அரசிடம் கோரவில்லை. அல்லது, இந்திய அரசை வலியுறுத்தும்படி தாங்கள் சந்தித்த ஸ்டாலினிடமும் கோரவில்லை. ஆனால் யார் கேட்காமலும், எந்த விதப் பயனும் எதிர்பாராமலும் வைகோ அறிக்கை விட்டிருக்கிறார்.

பிக்போஸ் பார்ப்பவர்கள் "இப்போது இலங்கையில் யுத்தம் இல்லை. அந்தத் தமிழர்கள் இந்தியா வந்து தொலைக்காட்சி நிகழ்வுகளில் சந்தோஷமாக கலந்து கொள்கிறார்கள். அதற்கு இலங்கை, இந்திய அரசுகள் கூட அனுமதிக்கின்றன" என்று நினைப்பார்கள். அவ்வாறு உலகில் உள்ள தமிழர்கள் எல்லாம் நினைக்க வேண்டும் என்பதே இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் விருப்பமாகும். அதற்கு விஜய் தொலைக்காட்சியும் ஒத்துழைக்கிறது.

ஆனால் தமிழ்நாட்டில் சிறப்பு முகாமில் இலங்கை அகதிகள் அடைக்கப்பட்டிருப்பதையோ அல்லது இலங்கையில் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் போனவர்களின் உறவுகள் நடத்தும் போராட்டங்களையோ உலகத் தமிழர் அறிந்து கொள்வதை இந்த அரசுகள் விரும்புவதில்லை. அதனால்தான் பிக்போஸ் மற்றும் சுப்பர் சிங்கர் நிகழ்வில் இலங்கைத் தமிழர் களை காட்டும் விஜய் தொலைக் காட்சி போன்றன தமிழ் நாட்டில் இலங்கை அகதிகள் படும் துன்பத்தைக் காட்டுவதில்லை. இலங்கையில் அவர்களின் அவலத்தையும் காட்டுவதில்லை. இந்நிலையில் வைகோவின் அறிக்கை இலங்கைத்தமிழர்களின் உண்மைநிலையை வெளியுலகிற்கு காட்டியுள்ளது.

பிக்போஸ் சீசன் 3 நிகழ்ச்சியானது சென்னை உள்ளிட்ட பெரு நகரங்களைத் தாண்டி பெரியளவு தாக்கத்தை ஏற்படுத்த வில்லை. உச்சகட்ட கிரிக்கெட் போட்டிகளின் போது சிறுநகரங்களில் கூட நள்ளிரவில் பட்டாசு கொளுத்திக் கொண்டாடுகிற ரசிகர்கள் இருக்கின்றனர். பிக்போஸ் நிகழ்ச்சியின் அறிமுக விழாவை யாரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. இது தொடர்பாக திண்டுக்கல் போன்ற நகர்ப்புற இளைஞர்களிடம் கேட்டால், அதைப் பார்த்து நாம் என்ன செய்யப் போகிறோம்? அதில் எல்லாம் பெரிய ஈடுபாடு எதுவும் எமக்கு இல்லையே என கைவிரிக்கின்றனர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1763

### அபிநந்தன்

**செத்ததற்குப் பிறகு சொர்க்கத்துக்குப் போறதை நினைச்சாலே பயமாதான் இருக்கு... அங்க நமக்குத் தெரிஞ்ச பிரண்ட் ஒரு பயகூட இருக்கமாட்டான்**




### காந்தன்

**என் வாழ்க்கையை நான் பார்த்துக் கொள்கிறேன் என பெற்றோரிடம் பேசாதீர்! உங்களால் அப்படி பேச முடிவதற்கான தன்னம்பிக்கையை தந்தவர்கள் அவர்கள்தான்!**



### சியானா

**பேசினால் நல்லதையே பேசுங்கள்... அல்லது வாய்மூடி மௌனமாயிருங்கள்**




### காமினி

**சிரித்தால் தீரும் சண்டைதான்... ஆனால் யார் முதலில் சிரிப்பது என்பதுதான் பிரச்சினை**



### இனியன்

**அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்**



### ஆரோகி

**ஒருத்தன் நடுராத்திரி ஒரு மணிக்குச் சுடுகாட்டிற்குப் போய் அங்குள்ள கிணற்றில் தண்ணீர் இறைத்து குளிக்கிறான்... ஏன்? ஏன்னா அவன்கிட்ட ஹமாம் சோப் இருக்கு... ஹமாம் இருக்கப் பயமேன்**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 187

# சிசேரியன் சத்திரசிகிச்சைக்கு உட்பட்டவர்கள் தெரிந்திருக்க வேண்டியவை

***சிசேரியன் சத்திரசிகிச்சையின் மூலமான பிள்ளைப் பேற்றின் பின்னர் எனக்கு முன்னுள்ள பிரசவத் தெரிவுகள் எவை?**

இலங்கையில் 20-30 வீதமான கர்ப்பிணிப் பெண்கள் சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் சிசுவைப் பெற்றெடுக்கின்றனர். சில பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சிசேரியன் சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்றனர். சிசேரியன் சத்திர சிகிச்சைக்கு உட்பட்ட நீங்கள் சாதாரண யோனிவழிப் பிரசவம் அல்லது சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் மீண்டும் சிசுவைப் பெற்றெடுக்கலாம். இது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.

1.சிசேரியன் சத்திரசிகிச்சை மேற்கொண்டமைக்கான காரணம்.

2.உடனடியாக/அவசரமாக மேற்கொள்ளப்பட்டதா?

3.கர்ப்பப்பை மீதான சத்திரசிகிச்சை வெட்டின் வகை

4.தற்போதைய கர்ப்பம் அசாதாரண பிரச்சினைகளைக் கொண்டுள்ளமை.

***"சிசேரியன் சத்திரசிகிச்சைக்குப் பின்னான யோனிவழிப் பிறப்பு" என்றால் என்ன?**

ஒரு பெண் சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் ஒரு பிள்ளையைப் பெற்றபின் யோனிவழியூடாக அடுத்த பிள்ளையைப் பெறுதல். இப்பிரசவம் சாதாரணமாக அல்லது கருவிகளின் உதவியுடன் நிகழ்த்தப்படலாம். சிசேரியன் சத்திர சிகிச்சையின் பின்னரான யோனி வழிப்பிறப்பின் நன்மைகள் எவை?

1.சிக்கலற்ற சாதாரணமான பிறப்பு.

2.குறுகியகால மீளுகையும் குறுகிய கால வைத்தியசாலைத் தங்குதலும்.

3.குறைந்தளவு வயிற்றுநோ.

4.சத்திரசிகிச்சை மூலமான சிக்கல் நிலைகள் இல்லாமை.

***சிசேரியனுக்கு பின்னரான யோனி வழிப் பிறப்பு வெற்றிகரமானதா?**

ஏறத்தாழ 75 விதமான சிசேரியன் சத்திரசிகிச்சைக்கு உட்பட்ட பெண்கள் அடுத்த சிசுவை யோனி வழியூடாகப் பிரசவிப்பதில் வெற்றி கண்டுள்ளனர். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சிசேரியன் சத்திரசிகிச்சைக்கு உட்பட்டவர்கள் சிசேரியன் மூலமே பிள்ளையைப் பிரசவித்தல் நலம்.

***சிசேரியனின் பின்பான யோனி வழிப் பிறப்பைப் பாதிக்கும் காரணிகள் எவை?**

1.சிசேரியன் மூலம் மட்டுமே சிசுவை பெற்றெடுத்திருத்தல்.

2.ஊக்கிகளைப் பயன்படுத்தல்.

3.பிரசவத்தில் முன்னேற்றமின்மை.

4.அதிகரித்த உடற்பருமன்.

***சிசேரியனின் பின்பான யோனி வழிப் பிறப்பில் உள்ள குறைபாடுகள் எவை?**

1.அவசரமான சிசேரியன் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படலாம். இது 20 வீதமான பெண்களில் நிகழலாம்.

2.இரத்தப் பரிமாற்றமும் கிருமித் தொற்றும் அதிகளவில் நிகழலாம்.

3.சத்திரசிகிச்சை வடு பலவீனமாதலும் வெடித்தலும். இது 0.5 வீதமான பெண்களில் நிகழலாம்.

4.சிசுவின் மூளைப்பாதிப்பு.இது 0.2 வீதமான பெண்களில் நிகழலாம்.

***சிசேரியனின் பின்னரான யோனி வழிப்பிறப்பு எச்சந்தர்ப்பங்களில் பொருத்தமற்றது?**

1.இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சிசேரியன் சத்திரசிகிச்சைக்கு உட்பட்டிருத்தல்.

2.கருப்பை வெடித்திருத்தல்.

3.கருப்பை நெடுங்கோடாக வெட்டிற்கு உட்பட்டிருத்தல்.

4.பிரசவகாலச் சிக்கல் நிலைகள்.

***மீண்டும் சிசேரியன் சத்திர சிகிச்சை செய்வதிலுள்ள அனுகூலங்கள் எவை?**

1.இது ஒரு நீண்ட சிக்கலான சத்திர சிகிச்சையாகும். இதன்போது குடல். சிறுநீர்ப்பை பாதிக்கப்படலாம். சிசுவும் வெட்டுக்காயங்களுக்கு உட்படலாம்.

2.குருதிக்கலன்களினுள் குருதி கட்டியாகும் வாய்ப்பு அதிகம். இது உயிராபத்தை ஏற்படுத்தும். ஆயிரம் பெண்களில் ஒருவருக்கு நிகழலாம்.

3.மீளுகைக்கு கூடிய காலம்தேவைப்படும்.

4.சிசுவுக்கு சுவாசப் பிரச்சினைகள் ஏற்படலாம். சத்திரசிகிச்சை மூலம் பிறந்த சிசுக்களில் 3-4 வீதமான சிசுக்களே பாதிக்கப்படுகையில் யோனி வழிப் பிறப்பில் பிறந்த சிசுக்களில் 2-3 வீதமான சிசுக்களே பாதிக்கப்படுகின்றன.

5.எதிர்காலத்திலும் சிசேரியன் மூலமே பிள்ளை பெற வழிவகுக்கலாம்.

***சிசேரியனின் பின்னரான யோனி வழிப் பிரசவத்திற்கு திட்டமிட்டுள்ள எனக்கு பிரசவ வலி தோன்றினால் நான் என்ன செய்ய வேண்டும்?**

1.உணவு.இநீர் உள்ளெடுப்பதைத் தவிர்த்தல்.

2.உடனடியாக அருகிலுள்ள வைத்திய சாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனையைப் பெறுதல். உங்களின் பிரசவம் மகப்பேற்று நிபுணர் உள்ள வைத்திய சாலையிலே நடைபெற வேண்டும்.

***சிசேரியனின் பின்பான யோனி வழிப் பிறப்புக்குத் திட்டமிட்டுள்ள எனக்கு பிரசவ வலி பிரசவத் திகதி முடிந்த பின்பும் தோன்றாவிடின் என்ன செய்யலாம்?**

1.காத்திருத்தல்(பிரசவ வலி தோன்று மட்டும்).

2.பிரசவவலியைத்தூண்டுதல்ஆபத்தானது.

3.சிசேரியன் சத்திர சிகிச்சைக்கு உட்படுதல்.

***சிசேரியன் சத்திரசிகிச்சைக்குத் திட்டமிட்டுள்ள எனக்குப் பிரசவ வலி தோன்றினால் என்ன செய்ய வேண்டும்?**

1.உணவு. இநீர் உள்ளெடுப்பதைத் தவிர்த்தல்.

2.மகப்பேற்று வைத்திய நிபுணர் உள்ள வைத்தியசாலையை உடனடியாக நாடவேண்டும்.(அவசரகால அம்புலன்ஸ் வண்டி/வாகனம் மூலம்).

Dr.யோ.சிவாகரன்

# சோயா அவரை

தாவர உணவுகளில் மிகவும் ருசியான சோயா பலராலும் விரும்பி உண்ணப்படும் ஓர் உணவாகும்.

சோயா பீன் (Bean) (சோயா அவரை) மிக அதிக புரதச்சத்து நிறைந்த தானியமாகும்.

உணவுகளில் உள்ள புரதத்தின் அளவுகள் (100g இற்கு கணக்கிடப்பட்டுள்ளது).

| உணவு வகை | புரதத்தின் அளவு (g இல்) |
|---|---|
| அரிசி | 6.4 |
| சோயா பீன் | 43.2 |
| கௌபி | 24.1 |
| பயறு | 24.0 |
| உழுந்து | 24.0 |

மிகையான புரதச்சத்தும் விற்றமின்களும் உள்ளடங்கியிருப்பதனால் சோயா பீன் வளரும் பிள்ளைகளுக்கு ஒரு நிறை ஆகாரமாகும். அதுமட்டுமல்லாமல் அது குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொடுக்கின்றது.

பால் ஒவ்வாமை நோய் உள்ள குழந்தைகளுக்கு அதற்கு ஈடாக சோயா பீனிலிருந்து எடுக்கப்படும் பால் அளிக்கப்படுகின்றது. சோயாபீனில் உள்ள உணவுச் சத்துக்களும் பெறுமானங்களும்:

(100g இற்கு கணிக்கப்பட்டுள்ளது)

| | | |
|---|---|---|
| புரதம் (g) | - | 43.2 |
| கொழுப்பு (g) | - | 19.5 |
| நார்ப்பொருள் (g) | - | 3.7 |
| மாச்சத்து (g) | - | 20.9 |
| சக்தி (kcal) | - | 432 |
| கல்சியம் (mg) | - | 240 |
| பொஸ்பரஸ் (mg) | - | 690 |
| இரும்பு (mg) | - | 10.4 |
| விற்றமின் A(mg) | - | 426 |
| நயாசின் (mg) | - | 3.2 |
| தயமின் (mg) | - | 0.73 |
| போலிக் அமிலம (mg) | - | 8.65 |
| Total | - | 100g |

சோயாபீனில் செசித்தின் அளவு உள்ளதால் உடலில் உள்ள கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்த இது உதவும். மாச்சத்து குறைந்த அளவில் உள்ளதால் நீரிழிவு நோயாளர்கள் இதனை உட்கொள்ள முடியும்.

சோயாபீன் (அவரை) தானியம் ஜப்பானிலும் சீனாவிலும் அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. சோயாபீனை தானியமாகவும் வேக வைத்தும் உட்கொள்ளலாம். இதிலிருந்து எடுக்கப்படும் பால். சீஸ். மாஜரீன் முதலிய உணவுகள் மேலைத்



தேச நாடுகளில் அன்றாட உணவில் சேர்க்கப்படுகின்றன. சோயாபீனில் இருந்து செய்யப்படும் ஐஸ்கிறீம் மேலை நாடுகளில் மிகவும் பிரபலமானதாகும்.

சோயா மாவில் இருந்து செய்யப்படும் இறைச்சியைப் போன்றே ருசியும் மணமும் தோற்றமும் கொடுக்கும் உணவே சோயாமீற் (Soya meat) ஆகும். எம்மவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானதும் பலராலும் விரும்பி உண்ணத்தக்கதுமான இந்த சோயா மீற்றைத் தவிர நாம் சோயா மாவையோ. சோயா பாலையோ மிகமிக அரிதாகவே பாவிக்கின்றோம்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடக்கூடிய உணவு வகைகளை சோயா பாலில் இருந்தும் தயாரிக்கலாம்.

உதாரணமாக சோயா மா கஞ்சி. சோயாமா ரொட்டி. சோயா பஜ்ஜி போன்ற உணவுகள்.எனவே எம்முடைய அன்றாட உணவு வேளைகளில் சோயா உணவுகளை சேர்த் துக் கொண்டு நிறைவான சத்துக்களையும் ஆரோக்கியத் தையும் பெற்றுக் கொள் வோம்.

சாலினி புவனேசமூர்த்தி
(Bsc.Foods nutrition and diet therapy).

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்